மார்கழி - 2020

# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்

சிறுகதைச் சிறப்பிதழ்



# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்

மார்கழி - 2020

சிறுகதைச் சிறப்பிதழ்

ஆசிரியர் : சோபா

வடிவமைப்பு : நெகிழன், 7904748374

படைப்புகள் அனுப்ப : R.Mahendran,
34 Redriffe Road, Plaistow,
London, e13 0JX, UK

மின்னஞ்சல் : Mullaiamuthan16@gmail.com

நன்றி : இணையம்

படைப்புக்களின் கருத்துக்களுக்கு படைப்பாளர்களே பொறுப்பு.


## வணக்கம்,

காற்றுவெளியின் மார்கழி இதழை தங்களின் பார்வைக்குத் தந்துள்ளோம்.

சிற்றிதழ்ச்சிறப்பிதழ்,மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ் வரிசையில் சிறுகதைக்கான சிறப்பிதழாக மார்கழி(2020) இதழினைக் கொண்டுவந்துள்ளோம்.

சிற்றிதழ்ச் சிறப்பிதழாக இரண்டு இதழகளைக் கொண்டுவந்திருந்தோம்.மீளவும் ஒரு இதழை முழுமையான இதழாக கொண்டுவரும் திட்டமும் உள்ளது.தை மாத(2021) இதழை கவிதைச் சிறப்பிதழாக கொண்டுவருகிறோம்.படைப்பாளர்களின் ஒத்துழைப்பின்றி இருபது வருடங்களைக் கடந்துவந்திருக்கமுடியாது.அவர்களுக்கே முதல் நன்றி.தற்போதைய வடிவமைப்பில் ஓரளவிற்குச் சீராகவே போய்க்கொண்டிருக்கிறது.எதிர்காலத்தில் இன்னும் வடிவமைப்பைச் சிராக்கவேண்டும் என்கிற கனவும் இல்லாமல் இல்லை.


காற்றுவெளி ஒரு தனி நபர் முயற்சி. சந்தா பற்றியும் பேசியும் பலரின் மௌனமும் தொடர்கிறது. வெறுமனே பலரின் தூண்டுதல் கிடைக்கும் என்கிற நம்பிக்கை அவர்கள் தரும் விருப்பப் புள்ளிகளுக்குள்ளேயே அடங்கிவிடுகிறது.அதனால் இன்னமும் அச்சில் கொண்டுவரும் முயற்சியும் தள்ளிப்போகிறது.

சிற்றிதழ்களை வெளிக்கொண்டுவருவோர் பரஸ்பரம் சமகாலத்து இதழ்களுடனும் இணைந்து பயணிக்கும் காலத்தை உருவாக்கவேண்டும்.அவரவர் கொள்கையுடன் பயணிக்கலாம்.அதுவே புதிய திசைகளைத் தொடமுடியும் என நம்புகிறோம்.

சிறுகதைச் சிறப்பிதழைச் சிறப்பிக்க படைப்புக்களை அனுப்பியோர்க்கும் நன்றி. ஈழத்தமிழர்களின் நம்பிக்கைகள் பிறக்கும் புதிய ஆண்டிலும் ஈடேறவேண்டும் என்பதே நமது பிரார்த்தனை. தொடர்வோம்.

நட்புடன்,

சோபா.



# எங்கிருந்தோ வந்தான்

● மு. தயாளன்

அவன் இன்னும் சிலமணி நேரங்களில் இறந்துவிடுவான். என் கைப்பேசியினூடாகப் பார்க்கிறேன். அவனுடைய கண்கள் சிறியதாகி மெல்ல என்னை நிமிர்ந்து எனது கைப்பேசியைப் பார்க்கிறான். அந்தப் பார்வையில் நான் கலங்கிப் போகிறேன். கத்தி அழவேண்டும் போல் இருக்கிறது. அவனுடைய கால்கள் சோர்ந்துவிட்டன.

அவன் நடக்க முடியாமல் இருப்பது எனக்குப் புரிகிறது.

அவனுடைய உடலில் சிறிது அசைவு ஏற்படுகிறது. எனது நெஞ்சம் படபடவென்று அடிக்கிறது....

அவன் எங்கள் வீட்டுக்கு வந்தபோது வயது ஒன்றுதான். எங்களோடு சேர்ந்து சந்தோசமாகவே வளர்ந்தான். எங்கள் பேச்சை அவன் என்றும் தட்டியவனல்ல. சொல்வதெல்லாவற்றையும் தட்டாமற் செய்தான்.

பாரதிக்குக் கண்ணன்போல் எங்களுக்கு இவன். நிறம் கொஞ்சம் கறுப்புத்தான். ஆனாலும் அழகன்.

நான் வேலையால் வந்திருக்கும்போது ஓடி வந்து எனக்குப் பக்கத்தில் வந்திருந்து என்னையே பார்ப்பான். அவனுக்கு என்னில் அவ்வளவு பாசம். நான் அவனைப் பாசத்தோடு ஆரத்தழுவுவேன். அதிலே ஒருவகை இன்பம் எனக்கு. அவனுடைய பாசத்துக்கு இணையாக எதுவுமேயில்லை.

எங்கள் வீட்டில் ஒரு நல்ல நிகழ்வு நடக்கிறது. இதன் காரணமாக அவன் மீதான எங்கள் கவனிப்பு குறைந்துவிடுகிறது. அவனது மனதை அது உறுத்தி இருக்கவேண்டும். எங்கள் வீட்டிலிருந்து வெளியேறக் கூடிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எங்களைப் பிரிந்து சென்றுவிட்டான்.

எங்கள் வீட்டின் செல்லப் பிள்ளையான அவன் பிரிந்து சென்றது எங்களுக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுத்தது.

குறிப்பாக என்னுடைய மற்றப் பிள்ளைகளுக்கு நிரம்பக் கவலை. என்னைப் பொறுத்தவரை அவன் பிரிந்ததற்கான காரணம் நியாயம் தான் என உள் மனம் சொல்லியது. எங்கள் வீட்டில் என்னதான் செல்லமாக வளர்ந்தபோதும் மாற்றாந்தாயின் பிள்ளைபோலவே வளர்ந்தான். சில சமயங்களில் அவனுடைய செய்கைகள் மனவருத்தம் தரும். ஒரு தடவை அவனுடைய செய்கையால் என் மனைவிக்கு உடல் வருத்தம் கூட ஏற்பட்டது. அவனுடைய செய்கைகளுக்காகப் பல தடவை கண்டித்திருப்பேன். அவன் கேட்பதேயில்லை. எங்கிருந்தோ வந்தான். எங்கள் மனங்களில் இடம் பிடித்தான். தொல்லையும் தருகிறானே என்று மனதிற்குள் கவலைப்படுவேன்.

அவன் எங்களைவிட்டுப் போனாலும் அவன் இருக்குமிடம் எங்களுக்குத் தெரிந்திருந்தது. அவன் போயிருந்த இடத்தைச் சேர்ந்தவர்களும் எங்கள் நண்பர்களே. இதனால் அவர்களைப் பார்க்கும் சாட்டில் அங்கு போய் அவனைப் பார்ப்போம். பொல்லாதவன். எங்களைப் பார்த்துக் காணாதவன் போல் இருப்பான். ஆனால் அவன் கண்களில் எங்களின் வரவு விருப்பமான ஒன்றே என மிளிர்வதை நான் புரிந்து கொள்வேன்.

அங்கு அவனுக்கு ஒரு அறையைக் கொடுத்திருந்தார்கள். எங்கள் வீட்டில் இருந்ததைவிடச் செல்லமாகவே இருந்தான்.

நேரத்துக்குச் சாப்பாடு. படுப்பதற்கு அழகான கட்டில். எவ்வித துன்பமும் இல்லாமல் இன்பமாகவே வாழ்ந்து வந்தான்.

அவன் இப்படி வாழ்வது எனக்கு மட்டுமல்ல எங்களின் குடும்பத்துக்குமே சந்தோசத்தைக் கொடுத்தது.

அந்த வீட்டுப் பிள்ளைகள் அவனையும் தங்களது சகோதரனாகவே ஏற்றுக் கொண்டுவிட்டனர். தங்களுக்குள்ள அத்தனை உரிமையும் அவனுக்கும் உண்டு என்று கூறுவார்கள்.

இதைக் கேட்கும்போது நான் பூரித்துப் போவேன்.

அந்த வீட்டுப் பிள்ளைகள் தாங்கள் காலாற நடக்கச் செல்கையில் அவனையும் தங்களோடு அழைத்துச் செல்வார்களாம்.

தாங்கள் உணவுண்ணும்போது ஏதும் பேதம் பாராட்டாது அவனுக்கும் அதே உணவை அளிப்பார்களாம்.

அந்த வீட்டின் மூத்தவன் இவனைத் தன் கட்டிலில் படுக்கச் சொல்லி அவனை அரவணைத்துக் கொண்டு படுப்பானாம்.

இவற்றையெல்லாம் எங்கள் வீட்டில் சொல்லிச் சொல்லி மகிழ்ச்சி அடைவோம்.

அவனுடைய பிறந்தநாள் மார்கழிமாதம் இருபத்தினான்கு. அவன் எங்கள் வீட்டில் இருக்கும்போது இந்தத் தினத்தை விமரிசையாகக் கொண்டாடுவோம். எங்கள் உறவினர்களையெல்லாம் வரவழைத்து மகிழ்ச்சியோடு கொண்டாடுவோம்.

எங்கள் உறவினர்களுக்கு இது வியப்பாக இருக்கும். சிலர் வெளிப்படையாகவே தங்கள் விருப்பின்மையைத் தெரிவிப்பார்கள். நான் இவைகளைப் பொருட்படுத்துவதில்லை.

அவர்களைப் பொறுத்தவரை எங்கிருந்தோ வந்த இவனுக்கு ஏனிவ்வளவு ஆர்ப்பாட்டம் என்பதுதான்.

அவர்களுக்கெங்கே அவனுக்கும் எங்களுக்கும் இடையேயுள்ள பாசப்பிணைப்பு.

தங்களின் எண்ணத்திற்கு அபிப்பிராயங்களை அள்ளி எறிகிறார்கள். இப்படியான புரிந்துணர்வற்ற அபிப்பிராயத் தெறிப்புகள்தானே பாச உணர்வுகளைக் கேள்விக் குறியாக்குகின்றது.

அவன் எங்களோடு பிரச்சினைப்பட்டு..இல்லையில்லை நாங்கள் அவனோடு பிரச்சினைப்பட்டு அவன் எங்களை விட்டு வெளியேறியபோது எல்லோரும் சந்தோசம் அடைந்தார்கள். என்ன மனிதர்கள் என்று நினைத்துக் கொண்டேன்.

அன்று காலை அவன் வாழுகின்ற வீட்டுக்காரர் தொலைபேசி எடுத்திருந்தார்கள்.

அவன் உடல் நிலை சரியில்லை என்று கூறினார்கள். அவனால் நடக்க முடியவில்லை என்றும் கூறினார்கள். சாப்பிட்டவுடன் சத்தி எடுக்கிறான் என்றும் கூறினார்கள். வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும்படி கூறினோம்.

கொண்டு சென்றார்கள். மருந்து கொடுத்தும் அவனது நிலையில் பெரியளவாக மாற்றம் எதுவும் இருக்கவில்லை. நாளுக்கு நாள் அவன் உடல் நிலை சிக்கலாகவே மாறிக்கொண்டிருந்தது.

எங்களைவிட்டுச் சென்றுவிடுவானோ என்கின்ற மனநிலை எங்கள் எல்லோர் மனத்திலும் ஏற்படத் தொடங்கியிருந்தது.

மறுநாள் ஒரு அதிர்ச்சிகரமான செய்தி எங்களுக்கு வந்திருந்தது. அவனைப் பீடித்திருக்கும் நோயின் பெயர் மூளைப் புற்றுநோய் என்பதே.

நான் அதிர்ந்து போனேன். என் நரம்புகளெல்லாம் உடைந்து நொருங்கின போலிருந்தது. என்ன செய்வதென்றும் எனக்குத் தெரியவில்லை. மருந்துகளால் குணப்படுத்த முடியாத இந்த நோய் அவனுக்கு ஏன் வந்தது?

அந்தச் செய்தி கேள்விப்பட்ட நேரம் தொடக்கம் எங்கள் வீடும் அவர்கள் வீடும் அப்படியே

செயலற்று இருந்தன.

இன்றைய இந்தக் கொடுமையான சூழ் நிலையில் அவனைப் போய்ப் பார்க்கமுடியவில்லை. அவர்கள் எங்களைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வந்து பார்க்கும்படி வேண்டினார்கள்.

இனி உங்களுக்கு ஏன் மறைப்பான்.

அவன் ஒரு காலத்தில் எங்களின் செல்லப் பிராணி. அவன் பெயர் லியோ.

அவனை எப்படி நான் இழக்க முடியும்?

வைத்தியர் கூறிவிட்டார். இன்னும் ஒரு நாள்தான் அவனின் வாழ்க்கைக் காலம்.

அவன் வேதனையால் துவண்டு கொண்டிருந்தான். நாங்கள் கைப்பேசியினூடாக அவனைப் பார்த்தோம். கூப்பிட்டால் உடம்பை மட்டும் மெதுவாக அசைக்கிறான். கண்கள் மூடியபடி இருந்தன.

அவனால் வேதனையைத் தாங்க முடியவில்லைப் போலும். முனகக்கூட முடியாமல் சுருண்டு படுத்திருந்தான்.

அடுத்த நாள் மதியம் அவனை வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப் போகிறார்கள். மதியம் பன்னிரண்டு மணிக்கு அவனை மயக்கியபின் அவனை அனுப்பும் ஊசியினை அவர்கள் சம்மதத்துடன் ஏற்றுவார்கள்.

அடுத்த நாள் வந்தது.

மரணம் அவனை அணைக்கப் போகிறது. வைத்தியசாலைக்குக் கொண்டுவந்து விட்டார்கள்.

எங்களால் அவனைப் பார்க்கப் போகமுடியவில்லை. நாட்டின் சூழல் எங்களைக் கட்டிப் போட்டுவிட்டது. இன்னும் சில நிமிடங்களில் அவனைக் கொன்று விடுவார்கள்.

மனிதனுக்கு மட்டும் கருணைக் கொலையை அங்கீகரிக்காத சட்டம் மிருகங்களுக்கு மட்டும் ஏன் அங்கீகரிக்கிறது.

அவனுக்கு மயக்க ஊசி போட்டுப் படுக்க வைத்தார்களாம்.

பின்பு ஒவ்வொருவராகச் சென்று அவனைப் பார்க்கச் சொல்லி இருக்கிறார்கள்.

பார்க்கும்போது அவர்கள் பிரார்த்தனை செய்திருக்கிறார்கள்.

அவர்கள் முன்னிலையில் அந்த ஊசி ஏற்றப்பட்டு கருணைக் கொலை நடந்திருக்கிறது.

அவ்வளவுதான் இனிமேல் எங்களின் லியோ இல்லை.


எங்கிருந்து வந்தானோ அங்கேயே போய்விட்டதாக நான் நினைத்துக் கொண்டேன்.

எங்களின் மனங்கள் பாரமாகிவிட்டன.

யாரும் யாரோடும் கதையாமல் இறுகிக் கறுத்த முகத்தோடு இருந்தோம்.

இங்கிவனை நான் பெறவே

என்ன தவம் செய்தேன்..என்ற பாரதி பாடல் எனக்குள் ஒலித்துக் கொண்டிருந்தது.



# பூனை

● 'பரிவை' சே.குமார்

அந்தப் பூனை அவனையே பார்த்துக் கொண்டிருந்தது. நல்ல கரிய நிறம்.. கண்களை உருட்டி, வாயைக் கொட்டாவி விடுவது போல் திறந்து திறந்து மூடியபடி அவனையே பார்த்துக் கொண்டிருந்தது. இது இன்று மட்டுமல்ல.. சில மாதங்களாகவே அவன் அந்த பூங்காவுக்கு நடக்க வரும் போது அவனைப் பார்த்ததும் பின்னால் வந்து விடுகிறது. அவனும் அதையே பார்த்தான்.. எழுந்தான்.. நடந்தான்.. அவன் பின்னாலேயே நடந்தது.. நின்று திரும்பிப் பார்த்தான்.. அதுவும் நின்று முதுகை வளைத்துத் திரும்பிப் பார்த்தது.

மீண்டும் அவன் நடக்க, அதுவும் பின்னே நடந்தது.

இந்தக் கருப்புப் பூனை மட்டுமில்லாது கொஞ்ச நாளாகவே அவன் பார்க்கும் பூனைகள் எல்லாம் அவனைப் பார்ப்பதைப் பார்த்திருக்கிறான். அவன் அமரும் இடங்களில் எல்லாம் ஏதாவது ஒரு பூனையொன்று அவனைக் குறுகுறுவெனப் பார்த்துக் கொண்டிருக்கும்.. என்னடா இது சிதம்பரத்துக்கு வந்த சோதனையின்னு மனசுக்குள்ள நினைச்சிக்குவான். ஊர்ல மதுரைக்கு வந்த சோதனையின்னுதானே சொல்வாங்கன்னு நீங்க நினைக்கலாம். அவனோட பேரு சிதம்பரம் என்பதால் அவனுக்கு வந்த சோதனையின்னுதானே அவன் நினைப்பான்.

துபைக்கு வந்த புதிதில் பூனைகள் அதிகம் திரிவதையும் வேலைக்குச் செல்லும் போதெல்லாம் குறுக்கு மறுக்காகப் போவதையும் பார்த்தவன், பூனை குறுக்கே போகுது இன்னைக்கு வெளங்கிரும் என்று நினைத்துக் கொள்வான்.. ஏன்னா ஊரில் அப்படித்தான் அவன் வளர்ந்திருக்கிறான். நல்ல காரியத்துக்குப் போகும் போது பூனை குறுக்கே போனா அது

வெளங்காதுன்னு சொல்வாங்க.. அது நம்மளோட எண்ணம்தான் என்றாலும் வழிவழியாய்ச் சொல்லிப் பழக்கப்படுத்தி வைத்திருந்தது அவ்வளவு சீக்கிரத்தில் மாறாது என்பதால் பூனை அவனைக் கடந்தால் சை இன்னைக்கு என்ன பிரச்சினை வரப்போகுதோன்னு நினைச்சிப்பான். வந்த சில மாதத்திலேயே பூனைகளுடன் வாழப் பழகிக் கொண்டான். அலுவலகத்தில் பிலிப்பைனிகளை பூனை என்று சொல்வதை அவனும் கடைபிடிக்க ஆரம்பித்தான்.

பூனைகளை எல்லா வீடுகளிலும் வளர்ப்பதைப் பார்த்திருக்கிறான்.. நகரின் வீதிகளிலும் நம்ம ஊரில் தெருநாய்கள் திரிவதைப் போல் பூனைகள் திரிவதையும் பார்த்திருக்கிறான்.. வீதிகளில் திரியும் பூனைகளுக்குப் பலர் உணவும் தண்ணீரும் வைப்பதை அன்றாட வேலையாகச் செய்வதையும் பார்த்திருக்கிறான். உண்மையிலேயே அந்த மனிதர்களைப் பாராட்ட வேண்டுமெனத் தோன்றும். சுட்டெரிக்கும் வெயிலில் அவற்றிக்கு தண்ணீர் கிடைப்பது என்பது நடக்காத காரியம்.. ஆனால் அதையும் சைக்கிளில் வந்து வயதான பெண்மணிகளும் ஆண்களும் வைப்பது என்பது மனிதாபிமானத்தின் உச்சம் என்றும் நினைத்துக் கொள்வான்.

பிலிப்பைனிகளுக்கு பூனைக்கறி மீது அலாதிப் பிரியம் என்பதையும் அவர்கள் பூனைகளை வளர்ப்பது சாப்பிடவே என்பதையும் அலுவலக நண்பன் ஒருவன் சொன்னபோது அய்யே கருமம் என்றவனிடம் முயல், மான் மாதிரி அதுவும் ஒரு கறிதானேடா.. என்ன கருமம் வந்துடப் போகுதுன்னு நண்பன் கேட்டவுடன் அது குறித்தான பேச்சை நிறுத்திக் கொண்டான். அதன்பின் கடைகளுக்குச் சாமான் வாங்கப் போகும் போது கோழிக் குடல், தலை, காலென எல்லாவற்றையும் அவர்கள் வாங்கிச் செல்வதையும் பார்த்திருக்கிறான்.

நின்று கொண்டிருந்தவனையும் அவனைப் பார்த்தபடி முன் கால்களை புல்தரையில் நீட்டி முன்னே வளைந்து நிற்கும் பூனையையும் பார்த்துக் கொண்டே பலர் கடந்து சென்றார்கள். சரி நடப்போமே என அடியெடுத்து வைத்தபடி ஓரக்கண்ணால் அதைப் பார்த்தான். கும்பிடுவதைப் போல் நின்ற அதுவும் எழும்பி தன் உடம்பை ஒரு உதறு உதறிவிட்டு அவன் பின்னே நடக்க ஆரம்பித்தது சின்னதாய் ஒரு 'மியாவ்'வுடன்.

ஊரில் நாய்கள் சில நேரம் அவன் பின்னால் வந்திருக்கின்றன.. ஏன் கோழிகள் கூட இரை எதுவும் வைத்திருப்பான் என்ற நப்பாசையில் சிறிது தூரம் அவன் பின்னே ம்கெக்.. கெக்..ம் எனக் கத்தியபடி வந்திருக்கின்றன. சைக்கிளில் அப்புறம் பைக்கில் பயணித்த போதெல்லாம் நாய்கள் அவன் பின்னே குலைத்தபடி விரட்டி வந்திருக்கின்றன. அப்போதெல்லாம் அவை அதற்கான எல்லையை விட்டு வருவதில்லை.. எல்லை வரை எகிறி வந்து பின் அடங்கித் திரும்பிச் செல்லும். சில நேரங்கள் பின்னால் விரட்டி வருவதைப் பார்த்து சைக்கிளை, வண்டியை படக்கென பிரேக்கிட்டு சுலோவாக்கி அவை வந்த வேகத்தில் பின்னால் அடித்துக் கொள்ள வைத்திருக்கிறான்.. அதில் ஒரு ஆனந்தம் அவனுக்கு. இந்தப் பூனைகள் எல்கை வைத்துப் பின் வருவதில்லை.. இத்துடன் அந்தப் பார்க்கை இரண்டாவது சுற்றுச் சுற்றிவிட்டான்.. அந்தப் பூனையும் அவனுடனே நடந்து உடற்பயிற்சி செய்து கொண்டிருக்கிறது.

சின்ன வயதில் வீட்டில் எலித்தொல்லை அதிகமிருக்கும்.. அப்போது ப்ரிட்ஜ் வசதியெல்லாம் இல்லை.. என்ன வாங்கி வந்து வைத்திருந்தாலும் கடித்து விடும்.. சந்தையில் வாங்கி வந்த தக்காளி அடுத்தநாளே எலி கடித்த தக்காளி ஆகிவிடும். துணிகள், கருவாடு, காய்கறிகள், பலகாரங்கள் என எல்லாவற்றையும் பாழாக்கிவிடும். அறுவடை முடிந்து நெல் மூட்டைகளை அடுக்கி வைத்தால் மூட்டைகளை ஓட்டை போட்டு நெல்லையும் தின்று கொட்டமடிக்கும்.

இந்த எலிகளை ஒழிக்கணுமின்னா ஒரு பூனையை கொஞ்சநாள் வளர்க்கலாம் என்றார் அப்பா. அம்மாவுக்கு அதில் விருப்பமில்லை.. எதாவது நல்ல விசயத்துக்குக் கிளம்பும் போது குறுக்கால வரும்.. அதெல்லாம் வேண்டாமென்றார்.. பின்னர் என்ன செய்யலாம் என்ற போது

வீட்டில் எலிப்பொறி இருந்துச்சு.. அதை எங்கிட்டுத் தூக்கிப் போட்டுச்சுகளோ என்ற அம்மா சந்தையில் புதிதாய் ஒரு எலிப்பொறி வாங்கி வந்தார். அதில் கருவாட்டையோ தேங்காயையோ மாட்டி மற்றொரு கம்பியை இழுத்து மேலே மாட்டிவிடுவார்கள். இரையை இழுக்கும் போது மேலிருக்கும் கம்பி அதன் தலையில் விழுந்து காலி பண்ணிவிடும்.

ஆரம்பத்தில் இவன்தான் இடம் பார்த்து வைத்தான்.. ஒன்றிரண்டு எலிகள் அகப்பட்டுக் கொண்டன. பின்னான நாட்களில் அவையும் சுதாரித்து லாவகமாய் இரையை எடுத்துச் செல்ல ஆரம்பித்தன.. இனி இது கதைக்கு ஆகாது என முடிவு செய்து மருந்து வாங்கி வைத்தார்கள்.. மருந்தைத் தின்றுவிட்டு எங்காவது போய் இறந்து கிடக்க, இரண்டு மூன்று நாட்களுக்குப் பின் வீச்சமெடுத்ததும் டேய் மச்சுமேல கெடக்கு போல ஏறிப்பாரு என்று அம்மா சொன்னதும் மூக்கை துண்டால் மூடிக் கொண்டு ஏறி குப்பைத் தகரத்தில் எடுத்துப் போட்டு ஊரணிப் பக்கம் போய் குழிவெட்டிப் புதைத்து விட்டு வருவான். வீட்டை விட்டு வெளியில் போய் செத்துப் போன எலிகளை கோழிகள் தின்று செத்துப் போனதால் அந்த முறையும் நிறுத்தப்பட்டது. பின்னர் ஏதோ பேஸ்ட் மாதிரி மருந்துக்கடையில விக்கிறாங்க.. அத ஒரு அட்டையில கொஞ்சமா வச்சி ஒரு ஓரமா வச்சிட்டம்ன்னா வந்து ஒட்டிக்கும்ன்னு சொன்னாங்கன்னு அதையும் செய்து பார்த்தும் கதைக்கு ஆகலைன்னதும் அப்பாவின் பூனை வளர்ப்புக்கு அம்மா அரைமனதுடன் சரியென ஒத்துக் கொண்டாள்.

அப்பாவின் நண்பர் வீட்டிலிருந்து வெள்ளை நிறத்தில் ஆங்காங்கே சாம்பல் கலரை அள்ளித் தெளித்தது போல ஒரு பூனையைக் கொண்டு வந்தார். ஆரம்பத்தில் பகலில் தூங்கி இரவில் எல்லாப் பக்கமும் உருட்டிக் கொண்டு திரிந்தது. அது வீட்டுக்கு வந்த சில நாட்களிலே எலிகளின் ஆட்டம் குறைந்து போனது என்னவோ உண்மை.. அதன் பின் பூனை பகலில் தூங்குவதை நிறுத்தி இரவில் தூங்க ஆரம்பித்தது. பகலெல்லாம் ஊர் சுற்ற ஆரம்பித்தது. உன்னையக் கொண்டாந்து வளத்துக்கிட்டு தேவையில்லாத வேலை என வரும்போதும் போகும்போதும் அதை அடிக்க ஆரம்பித்தான். ஏன்டா அதை அடிக்கிறே என்றால் ஆமா இதுக்குச் சாப்பாடு தெண்டந்தானே.. எலியோட ஆட்டம் மறுபடிக்கும் ஆரம்பிச்சிருச்சு.. இவரு ஊரு சுத்திட்டு வாராரு.. நல்லாக் கொழுத்துப் போயி இருக்கு பாருங்க என்பான். அந்தப் பாவம்தான் இப்போ இங்கே இந்தப் பூனை வடிவில் தன்னைப் பின்னாலயே விரட்டுதோ என்று நினைத்துக் கொள்வான்.

அவன் நின்ற உடன் பூனை நிற்பதையும் அவன் நடந்தால் நடப்பதையும் பார்த்துக் கொண்டே நடந்து கொண்டிருந்த பெண்மணி ஒருவர் முதல் முறை அவனைக் கடக்கும் போது லேசாகப் புன்னகைத்து விட்டுச் செல்ல, நீ எம்பின்னாலயே வந்து மானத்தை வாங்குறே என காலுக்கு அருகில் கிடந்த குச்சியை அதன் மீது எத்திவிட்டான்.. லாவகமாக விலகி அவனைப் பார்த்து வாயைத் திறந்து நாக்கை வெளியே நீட்டி கண்ணைச் சிமிட்டி ம்மியாவ்ழ் என்றது. அது அவனைக் கேலி செய்வதாய் இருந்தது. சை இந்தப் பூனைகளுக்கும் எனக்கும் என்னய்யா சம்பந்தம் அலுத்துக் கொண்டான்.

மீண்டும் நடந்தான்.. அதுவும் நடக்க ஆரம்பித்தது.. கல்லூரியில் படிக்கும் போது தனலெட்சுமியை உயிருக்கு உயிராய்க் காதலித்து, படிப்பு முடிந்து மாப்பிள்ளை பார்க்கிறார்கள் என்று அவள் அழுதபோது அவனையே கட்டிக்க என்னால இப்பல்லாம் உன்னைக் கட்டிக்க முடியாது என்று சொல்லி துபைக்கு வந்ததை நினைத்துப் பார்த்தான். ஒருவேளை அவளுக்கு இழைத்த பாவத்துக்குத்தான் இந்தப் பூனைகள் என்னை விரட்டிக் கொண்டிருக்கின்றனவோ என்றும் நினைத்து அப்படியெல்லாம் இருக்காது.. அவ நல்லாயிருக்கான்னு ராகவன் சொன்னானே.

காக்கை தலையில் விரட்டிக் கொத்தினால் சனி பிடித்திருக்கிறது என்று ஊர்ப் பெரிசுகள் பேசக் கேட்டிருக்கிறான்.. அப்போதெல்லாம் அதெப்படி நமக்குச் சனி பிடித்தது காக்கைக்குத் தெரியுமென நினைத்துச் சிரித்துக் கொள்வான்.. அப்படித்தான் இருக்குமோ.. முற்பிறவியில் பூனைகளுக்கு துரோகம் இழைத்திருப்பேனோ என என்னவெல்லாமோ நினைத்தான்.. இது இப்போது மட்டுமில்லை.. ஒவ்வொரு முறையும் பூனை அவன் பின்னே நடக்கும் போதெல்லாம் நினைப்பதுதான்.

அவனைச் சிரித்துக் கடந்த அந்த வயதான பெண்மணி மீண்டும் அவனைக் கடக்கும் போது ம்என்ன தம்பி பூனை உங்க பின்னாடியே வருது.. விரட்ட வேண்டியதுதானே..ழ் என்றாள் தமிழில்.

‘என்னன்னு தெரியலம்மா.. இதுன்னு இல்லை.. எங்க போனாலும் பூனைகள் என் பின்னாலதான் வருதுக..’ என்றான் சிரித்தபடி.

‘முற்பிறவி பந்தம் போல..’ என்றார் அவரும் சிரித்தபடி... அவனும் சிரித்து வைத்தான்.

‘தம்பி ஊருக்குப் போகும் போது ஜாதகத்தைப் பார்த்து ஏதாவது பரிகாரம் பண்ணுங்க.. பூனை உங்க பின்னால வர்றது கூட தோஷந்தான்..’ என்றார்.

‘அட ஏம்மா நீங்க வேற.. பூனை, நாய், கோழின்னு பின்னால வர்றதுல என்ன தோஷம் வந்திடப் போகுது.. அதுக்கு எம்மேல லவ்வு அதான் பின்னால வருது..’ என்று சிரித்தபடி நடக்க ஆரம்பித்தான்.. அந்த பூனையும் அவன் பின்னே இடுப்பை அசைத்து அசைத்து நடக்க ஆரம்பித்தது.

நடந்து போய் ஒரு பெஞ்சில் அமர்ந்தான்.. பூனை அவனுக்கு எதிரே வந்து நின்றது.. பின் முன் காலை மடக்கி, வாயைத் திறந்து நாக்கை வெளியே நீட்டி, கண்ணைச் சுருக்கி ம்மியாவ்ழ் என்றது. அதன்பின் அப்படியே படுத்துக் கொண்டது. சிவன் கோவில் நந்தி போல அவனுக்கு முன்னே படுத்து அவனைத் தலை தூக்கிப் பார்த்தது.

அப்போது நடுத்தர வயதுடைய பிலிப்பைனி ஒருத்தி சைக்கிளில் வந்து அங்கு வைத்திருந்த பிளாஸ்டிக் தட்டில் உணவை வைத்து மற்றொரு தட்டில் கையில் கொண்டு வந்திருந்த வாட்டர்கேனில் இருந்து தண்ணீர் ஊற்றி வைக்க, பல பக்கங்களில் இருந்து பூனைகள் உடம்பை நெளித்தபடி வந்து சாப்பிட, கருப்புப் பூனை மட்டும் அவனைப் பார்த்தபடியே படுத்துக் கிடந்தது. உணவை அது கண்டு கொள்ளவேயில்லை.. அதனுடைய பார்வை அவன் மேல் மட்டுமே நிலைத்திருந்தது.

அப்படி எனக்கும் உனக்கும் என்ன பந்தம்..? ஏன் என் பின்னே சுற்றுகிறாய்..? நீ மட்டுமில்ல வேறு பக்கம் போனால் வேறொரு பூனை என் பின்னே நடக்கிறது.. உங்களுக்கு என்ன துரோகம் பண்ணினேன்..? போ.. என்னை விட்டுப் போ.. சின்ன வயதில் வளர்ந்த விதத்தால் இங்கு வந்த போது உங்களைப் பார்க்கும் போது அபசகுணமென நினைத்தேன்.. அது தவறு என்பதை உணர்ந்து இப்போதெல்லாம் உங்களைக் கடக்கும் போது மகிழ்வாய்த்தானே போகிறேன்.. போ.. போய்ச் சாப்பிடு.. என்னை இனி பின் தொடராதீர்கள்.. முடியலை.. பாக்குறவனெல்லாம் என்னை பூனை வளக்குறவன்னு நினைச்சிக்கிறான்.. ப்ளீஸ் கெஞ்சுவது போல் கையை முகத்தருகே கொண்டு சென்று கும்பிட்டான்.

நீ என்ன வேணுமின்னாலும் சொல்லு.. நான் போகமாட்டேன் என்பதாய் அது மீண்டும் ‘மியாவ்’ என்றது.

கொஞ்ச நேரம் அதையே பார்த்துக் கொண்டிருந்தவன் எழுந்து போய் மற்ற பூனைகள்

சாப்பிட்டு மீதமிருந்த உணவைக் கொஞ்சமாய் எடுத்து தான் அமர்ந்திருந்த பெஞ்சின் மறுமுனையில் வைத்து அதைப் பார்த்து வந்து சாப்பிடு என்றான்.

மெல்ல எழுந்து உடம்பை நெளித்து ம்மியாவ்ழ் என்றபடி அவனைப் பார்த்துக் கொண்டே மறுமுனைக்குப் போய் சாப்பிட ஆரம்பித்தது. தனக்கும் பூனைகளுக்கும் ஏதோ ஒரு நேசம் இருக்கிறது என்பதை மட்டும் அவனால் அப்போது உணர முடிந்தது.

உணவைத் தின்றுவிட்டு அங்கிருந்தே அவனைப் பார்த்து ம்மியாவ்ழ் என்றது.. அதன் கண்ணில் அன்பு தெரிந்தது..

சிரித்துக் கொண்டே எழுந்தான்.

அவன் பின்னே பூனைகள் வரும்போதெல்லாம் அவனுக்குச் சின்னப் பிள்ளையில் அவனைக் கீழே விடாமல் தூக்கிக் கொண்டே திரிந்த அப்பத்தாதான் ஞாபகத்தில் வருவாள், ஒருவேளை அப்பத்தாவின் ஆன்மாதான் பூனை வடிவில் என் பின்னே திரிகிறதோ என்ற எண்ணமும் அவனுக்குள் தோன்றும், அப்போதெல்லாம் அட இதென்ன கூத்து.. அப்பத்தா இங்க எப்படி வந்திருக்கும் கடல் கடந்தாஞ் என நினைத்துச் சிரித்துக் கொள்வான்.

எழுந்தான்.. அதுவும் எழுந்தது.

நெட்டி முறித்தான்ஞ் அதுவும் காலை முன்நீட்டி உடம்பை வளைத்து சோர்வை நீக்கிக் கொண்ட்து.

நான் கிளம்புறேன்.. நீ இங்கயே இரு.. இதுதான் உனக்குப் பாதுகாப்பான இடம்.. எனக்குப் பாதுகாப்பாய் உன் சகாக்கள் போகும் இடமெல்லாம் வருவார்கள் என்றான் சத்தமாய்.

அவன் நடக்க, அவனைப் பார்த்துக் கொண்டே நின்றது..

ரோட்டைத் தாண்டி வந்த பின்னர் மெல்லத் திரும்பிப் பார்த்தான்..

அது அவனையே பார்த்துக் கொண்டு நின்றது.

ஏனோ மனசுக்குள் முதன் முதலில் துபைக்கு விமானம் ஏறும் போது விமான நிலையத்தில் கண்ணீர் மல்க, தன்னையே பார்த்துக் கொண்டு நின்ற அம்மாவின் ஞாபகம் வந்தது.

அப்பத்தாவோ என இதுவரை நினைத்திருந்ததை நினைத்துச் சிரித்தவனுக்குள் அம்மாவின் முகம் சுழல, இரண்டு வருடங்களுக்கு முன் இறந்து போன அம்மாவின் நினைப்பில் கண் கலங்கினான்.

அவனைக் கடந்த அந்தத் தமிழ்ப் பெண்மணி ம்நீ யாரோ ஒருத்தரை அல்லது உன்னை யாரோ ஒருத்தர் ரொம்ப மிஸ் பண்ணியிருக்காங்க.. அவங்க இப்போ உயிரோட இல்லை... அவங்களோட ஆன்மா இந்தப் பூனை வடிவுல உன்னைச் சுற்றி வரும்ன்னு நினைக்கிறேன்..ழ் என்றார்.

தன்னைச் சுற்றி வரும் பூனைகளுக்கும் தனக்கும் அந்த அம்மா சொன்னது போல் ஏதோ ஒரு உறவு இருக்கத்தான் செய்கிறது என்பதை அவனும் மனசுக்குள் உணர்ந்தான்.

ஏனோ மீண்டும் திரும்பி பார்த்தான்.

அந்த இடத்தில் அவனுக்கு அந்த பூனை தெரியவில்லை..

அம்மா நின்று கொண்டு அவனையே பார்த்துக் கொண்டிருப்பதாய் தெரிந்தது.

# மறுபிறவி

● மலர்விழி மணியம்

எமலோகம்..

ஒரே பிஸியாக இருந்தார் எமதர்மர்ஞ்

சித்ரகுப்தன் ஒவ்வொரு பைலாகக் கொடுக்க அதில் தன் கையெழுத்தைப் போட்டுக் கொண்டே வந்தார் எமதர்மர்ஞ்

“இன்னும் எத்தனை இருக்கிறது சித்ரகுப்தா?” என்று கேட்டார்.

“ இது தான் கடைசி அரசே” என்று கடைசி பைலை நீட்டினார் சித்ரகுப்தன்.

“டம்.. டம்.. டம்ம்ம்ம்” என்று எம லோகத்தின் கதவை தட்டும் சத்தம்.. திடுக்கென பயந்தார் எமதர்மர்.

“ பயப் படாதீர்கள் அரசே நான் சென்று என்னவென்று பார்க்கிறேன்” என்று கூறிவிட்டு எமலோகத்தின்கதவின்மேல்பொருத்தப்பட்டிருந்த கேமராவை செக் செய்தார் சித்ரகுப்தன். ஒரு வாலிபன் நின்று கொண்டிருந்தான். கதவைத் திறந்தார் சித்திரகுப்தன்.

“ ஹலோ.. என் பேரு ராஜா” என்றான் அந்த வாலிபன்..“ டாய்.. உனக்கு ஆயுள் இன்னும் நிறைய இருக்கு, என்னடா அவசரம்??” என்று கேட்டார் சித்திரகுப்தன். “ என்னய உங்களுக்கு தெரியுமா?!!” என்று ஆச்சரியமாய் கேட்டான் ராஜா.

“ எல்லா என் நேரம்.. ஐ ஹேவ் ஆல் டேட்டாபேஸ்.. வா உள்ள” என்று ராஜாவை அழைத்துக்கொண்டு உள்ளே சென்றார் சித்திரகுப்தன். எமதர்மர் அசதியில் குறட்டை விட்டு தூங்கிக்கொண்டிருந்தார் தன் அரியணையில்..



“ அரசேஞ் அரசேஞ்” என்று எழுப்பினார் சித்திரகுப்தன். லேசாக கண் விழித்தார் எமதர்மர். ராஜாவைக் கண்டு அதிர்ச்சியானார். “இவனுக்கு இன்னும் ஆயுள் இருக்கிறதே. அதற்குள் தற்கொலை செய்து கொண்டானா?” என்று கேட்டார்.

“ ஆம் அரசே” என்றார் சித்திரகுப்தன். “ எப்பொழுது தற்கொலை செய்து கொண்டாய்?” என்று கேட்டார் எமதர்மர். “ சரியா தெரியல. ரொம்ப நாளா சொர்க்கத்துக்கு வழி தேடி அலையுறேன். காதுல அடிக்கடி பலபேர் அழுகுரல் வேற கேட்டுட்டே இருக்குது” என்றான் ராஜா.

“ கண்ணா.. நாங்களா கூட்டிட்டு வந்தா தான் சொர்க்கம். நீங்களா வந்தா நரகம் தான். ரொம்ப நாளாவா அலையிறே சொர்க்கத்திற்கு வழி தேடி??” என்றார் சித்திரகுப்தன்.

“ சித்ரகுப்தா பன்ச் பேசினது போதும். என்ன காரணம் என்று அவனை விசாரி” என்றார் எமதர்மர்.

“ எதுக்குப்பா தற்கொலை செஞ்சுகிட்டா கொஞ்சம் விவரமா சொல்லு” என்று சித்ரகுப்தன் கேட்டார்.

“நான் லவ் பண்ணின பொண்ணு என்னை வேண்டாம்னு சொல்லிட்டா” என்று கூறி ‘ஓ’ வென அழுதான் ராஜா.

“ ஸ்ஸ்ஸ்ஸோஞ்.” என்று எரிச்சலாக தலையில் கை வைத்துக் கொண்டார் எமதர்மர். “ நீங்க டென்ஷன் ஆகாதீங்க அரசே நான் இவனை டீல் செய்து கொள்கிறேன்” என்றார் சித்திரகுப்தன்.

“ சித்ரகுப்தாஞ் உனக்கு ஒரு வாரம் அவகாசம் கொடுக்கிறேன். இவனோடு பூலோகம் சென்று என்ன நடந்தது என்று தீர விசாரித்து விட்டு, இவனோடு திரும்பி வா. பிறகு முடிவு செய்வோம்” என்றார் எமதர்மர்.

“ உத்தரவு அரசே” என்று கூறி விட்டு சித்திரகுப்தன், ராஜாவுடன் அரண்மனையை விட்டு வெளியே சென்றார். ராஜாவின் காதில் அழுகுரல்கள் ஒலிக்க தன் காதுகள் இரண்டையும் கை வைத்து அடைத்துக் கொண்டான்.

“ என்னால இந்த சத்தத்த தாங்கவே முடியல ப்ளீஸ் ஏதாவது செய்யுங்க” என்று கத்தினான்.

“ இரு இருஞ்” என்று கண்களை மூடி ஏதோ முணுமுணுத்தார் சித்திரகுப்தன், அழுகை நின்றது.. ராஜா தன் கைகளை நீக்கி நிமிர்ந்து பார்த்தான்.

“என்ன பாக்குற. நீ பாட்டுக்கு தற்கொலை பண்ணிட்டு வந்துட்ட. உன்னையே நெனச்சு அழுவுறாங்க கண்ணீரெல்லாம் தான் உன் காதுல ஒலிக்குது. வா போய் பார்க்கலாம் அது யார் யாரோட கண்ணீருன்னு” என்று அவன் கையை பிடித்தார் சித்திரகுப்தன்.

“ இது என்னடா மோதிரம்?” என்று ராஜாவின் விரலைப் பார்த்து கேட்டார்.

“நான் லவ் பண்ணின பொண்ணுக்காக வாங்கினேன். வேலன்டைன்ஸ் டே அன்னைக்கி அவளுக்கு கொடுத்து ப்ரொபோஸ் பண்ணுனேன். என் முகத்தில விட்டெரிஞ்சுட்டா” என்று கூற அவன் விழிகளில் கண்ணீர் கொட்டியது.

“ நீ லவ் பண்ண பொண்ணு போட்டோ இருக்கா டா தம்பி?” என்று கேட்டார் சித்திரகுப்தன்.

“ம்ம்” என்று தன் பாக்கெட்டில் இருந்த போட்டோவை நீட்டினான் ராஜா. போட்டோவை வாங்கி ஓரக்கண்ணால் பார்த்தார் சித்திரகுப்தன்.

“ம்ம்ஞ் சரி சரி வா உன்னையே நெனச்சு அழுவுறவங்களப் போய் பார்ப்போம்”என்று கூறி ராஜாவை அழைத்து சென்றார் சித்திரகுப்தன். முதலில் ராஜாவின் வீட்டிற்குச் சென்றனர்.

இரவு 11 மணி என்று கடிகாரம் காட்டியது. அழு குரல் வந்த திசை நோக்கி சென்றனர். ராஜாவின் தந்தை மடியில் அவனுடைய தாய் தலை வைத்து அழுது கொண்டிருந்தார். ராஜாவின் தாய் அவனுடைய சிறுவயதில் அணிந்திருந்த ஸ்வெட்டரை அணைத்தபடி அழுதுகொண்டிருந்தரர். ராஜாவின் தந்தையின் கண்களிலும் நீர் வழிந்து ஓடியது.

“ நான் பாவிங்க.. பாவிஞ் என் புள்ள மனசு கஷ்டமா இருக்குன்னு சொன்னானே அப்பவே நான் கிளம்பி அவனப் பார்க்கப் போய் இருக்கணும், தப்பு பண்ணிட்டேனே” என்று நெஞ் சில் அடித்துக்கொண்டு அழுதார் அவன் தாய்.

“என் புள்ள ஒரு சின்ன கீறல் பட்டாலே ஒரு வாரம் அழுவானே. அந்தக் கயிறு அவன் கழுத்தை இருக்கும் போது எப்படி தாங்கினானோ தெரியலையே.. மார்மேலும் தோள்மேலும் தூக்கி வளர்த்தது அவனுக்கு நான் கொல்லி வைக்கவா?? என்று கூறி அவன் தந்தை அழுதார். குற்ற உணர்வுடன் கண்ணீர் வழிய நின்று பார்த்துக் கொண்டிருந்தான் ராஜா..

மற்றும் ஒரு அழுகுரல் கேட்டது. அந்த திசையை நோக்கி இருவரும் சென்றனர். ராஜாவின் தங்கை மீனா அழுது கொண்டிருந்தாள்..

ராஜா மீனாவிற்குக் கொடுத்த கிரீட்டிங் கார்ட்ஸ்,கடிதங்கள், பரிசுப் பொருள் என அனைத்தையும் ஒவ்வொன்றாக பார்த்துப் பார்த்து அழுதுகொண்டிருந்தாள். அப்பொழுது மீனாவின் கைபேசிக்கு அழைப்பு வந்தது. மீனா அதற்கு பதில் அளிக்காமல் அழுதுகொண்டிருந்தாள்.

யார் என்று சித்திரகுப்தன் எட்டிப் பார்த்தார். ‘ ஷியாம் காலிங்’ என்று செல்போன் காட்டியது.

“ இது யாரு” என்று சித்திரகுப்தன் கேட்டார்.

“ என் தங்கச்சியோட லவ்வர்” என பதில் அளித்தான் ராஜா. “ வா அவன் வீட்டுக்குப் போகலாம்” என்று சித்திரகுப்தன் ராஜா வை அழைத்துக்கொண்டு சென்றார்.

ஷியாம் மதுபானத்தை அருந்திக்கொண்டு அழுதுகொண்டே மீனாவின் நம்பருக்கு போன் செய்து கொண்டிருந்தான்.

“டேய் மாப்ள கொஞ்ச நாள் ப்ரீயா விடு டா, அவ அண்ணனை இழந்த சோகத்தில் இருப்பா” என்றான் ஷ்யாமின் நண்பன்.

“ ஆறுதல் கொடுக்கத்தான் டா நான் இருக்கேன். அவஅண்ணன் இறந்து போய் மூணு மாசம் ஆயிடுச்சு. மூணு மாசமா அவ என்கிட்ட பேசல, பயமா இருக்கு மச்சி. அவளுக்கு அவ அண்ணன்னா உயிர். கண்டிப்பாக இழப்பை ஈடு செய்ய முடியாது. துக்கம் தாங்காம அவளும் ஏதாவது செஞ்சுகிட்டான்னா, பயமா இருக்குடா?” என்று கூறி அழுதான் ஷ்யாம்.

“மூணு மாசம் முன்னாடியே இறந்து, சொர்க்கத்துக்கு வழிதேடி அலைஞ்சு இருக்க. வா இன்னும் எத்தனை பேரோட கண்ணீரு உன்னய சொர்க்கத்துக்கு வரவிடாமப் பண்ணி இருக்குன்னு போய் பார்ப்போம்” என்றார் சித்ரகுப்தன்.

“அண்ணா.. அண்ணாஞ் ஏன் இப்படி பண்ணிட்ட என்னால தாங்கவே முடியல” என்று மற்றொரு அழுகுரல் கேட்டது.

யார் என்று காண ராஜாவும் சித்திரகுப்தன் சென்றனர். சாய்ராபானு அல்லாஹ்விடம் அழுது கொண்டே பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாள் ராஜாவிற்காக.

“ இது யாருடா தம்பி??” என்று கேட்டார் சித்திரகுப்தன்.

“ நாங்க ரெண்டு பேரும் ஒண்ணா வேலை செஞ்சோம். ஒரே டீம். எனக்கு உடன்பிறவா தங்கச்சி” என்றான் ராஜா. பானுவின் கணவன் உசேன் வந்தார்.

“ பானு.. உன்னை எங்கெல்லாம் தேடுறது. மணி ஒன்னு ஆச்சு தூங்காம அழுதுட்டு இருக்கே, இன்னும் நீ ராஜாவோ மறக்கலையா?” என்று கேட்டார்.

“ எப்படி மறக்க முடியும்? எனக்கு கூட பிறந்தவங்க இல்லனாலும், அந்த குறையில்லாமல் ராஜா அண்ணன் உறவு கிடைச்சது. இப்படி பாதியிலேயே என்னைவிட்டுட்டு போயிட்டாங்களே. ஏதோ என்கிட்ட சொல்ல நினைச்சு இருக்காப்புல நான் அதை சரியான சமயத்துல கேட்காம விட்டேனே”” என்று கூறி அழுதாள் சாய்ராபானு. கண்ணீருடன் நின்று கொண்டிருந்தான் ராஜா.

“டாய் ஞ் யாருக்குமே என்ன பிரச்சனைன்னு நீ சொல்லவே இல்லையா?” என்று சித்திரகுப்தன் கேட்டார்.

“ மனசு சரியில்லைன்னு மட்டும் சொன்னேன், ஆனா என்னனு சொல்லல.” என்றான் ராஜா.

“என்னன்னு சொல்லாம எல்லாரையும் புலம்ப வச்சிருக்கே பாரு” என்று இடித்தார் சித்திரகுப்தன்.

“ராஜாஞ்.. ராஜாஞ். டேய் மச்சி “”என்று ஒரு அழுகுரல்.

“வந்து தொல டா சாமி. அடுத்து யார் என்று பார்ப்போம்” என்று கூறி ராஜாவை இழுத்துக் கொண்டு சென்றார் சித்திரகுப்தன். ராஜாவின் நண்பன் அவனுடைய புகைப்படத்தை வைத்துக்கொண்டு மதுபானத்தை அறிந்துகொண்டே அழுது புலம்பிக் கொண்டிருந்தான்.

“மிஸ் யு டா.. ஐ மிஸ் யூ டாஞ்” என்று கூறி அழுதான் வசந்த். பேஸ்புக்கில் ராஜாவின் பேஜ்ஜில் மற்ற நண்பர்களின் பதிவை பார்த்து பார்த்து அழுது கொண்டிருந்தான் வசந்த்.

அவனுக்கு பின்னால் நின்று ராஜாவும் சித்திரகுப்தனும் ராஜாவின் பேஸ்புக் பதிவுகளை வாசித்தனர். கிட்டத்தட்ட நூற்றைம்பது நண்பர்கள் தங்கள் வருத்தத்தையும், ஏமாற்றத்தையும், இழப்பின் வலியையும், பதிவு செய்திருந்தனர்.

“ இவ்வளவு பிரண்ட்ஸ்ஸாடா உனக்கு?” என்று சித்திரகுப்தன் ஆச்சரியமாக கேட்டார்.

“ சும்மா சொல்லக்கூடாதுடா எல்லார் மனசுலயும் நீ ராஜாவாதான் இருந்திருக்க. ரொம்ப நல்லவன்டா நீ.”” என்றார் சித்திரகுப்தன்.

“ எல்லார் மனசுலயும் நான் எவ்வளவு பாதித்திருந்தா இவ்வளவு பேரு எனக்காக அழுவாங்க” என்று கூறி அழுதான் ராஜா. மற்றும் ஒரு அழுகுரல்ஞ்

“அவன் சாவுறதுக்கு ஒரு நாள் முன்னாடி எனக்கு போன் பண்ணான்டா மனசு சரியில்லன்னு

சொன்னான். கார் ஓட்டிட்டு இருந்தேன். இருடா சிக்னல் தாண்டி கூப்பிடுறேன் என்று சொன்னேன். ரெண்டே நிமிஷத்துல திருப்பி கூப்பிட்டேன்.'ஐ அம் ஓகே, நான் சரி ஆயுட்டேன்னு, சொல்லிட்டான்" என்று அழுதார் நவநீதம் எதிரில் அமர்ந்திருந்த தன் நண்பன சுகுனனிடம்.

இருவரும் மதுபானத்தை அருந்திக் கொண்டே புலம்பிக் கொண்டி ருந்தனர்.

" அவன் மட்டும் என் முன்னாடி இருந்தான்னா சாவடிச்சிடுவன்" என்றழுதார் சுகுனன்.

"இவங்க யாரு டா கண்ணா?"" என்று கேட்டார் சித்திரகுப்தன்.

" என்னோட பிராஜக்ட் லீடர். எனக்கு அண்ணன் மாதிரி." என்று கூறி அழுதான் ராஜா. " சரி வா கொஞ்சம் காலசக்கரத்தை பின்னால ஓட்டி உன் அன்புக் காதலியப் பத்தி தெரிந்துப்போம்" என்றார் சித்திரகுப்தன்.

சித்திரகுப்தன் காலச்சக்கரத்தை சுழற்றினார்.. ராஜாவும் சித்திரகுப்தன் ஒரு வீட்டை அடைந்தனர்..

"இது என்னோட வீடு!!" என்று வியந்தான் ராஜா. "ம்ம்.. பரவாயில்ல வா" என்று உள்ளே சென்றனர். உள்ளே சென்ற சித்ரகுப்தனுக்கும் ராஜாவிற்கும் பெரும் அதிர்ச்சி. ராஜா வயதான தோற்றத்தோடு இருந்தான் அந்த வீட்டில். ஏதோ ஒரு அறையின் கதவை இடித்துத் தள்ளிக் கொண்டிருந்தான். கிட்டத்தட்ட 45 வயது இருக்கும் அவனுக்கு. அவனும் அவனது மனைவியும் ஏதோ ஒரு அறையின் கதவைத் தட்டிக் கொண்டிருந்தனர்.

"யோகேஷ் ப்ளீஸ் வெளிய வா" என்று அவன் மனைவி அழுது கொண்டிருந்தார்.

" அய்யோ தம்பி டேய்.. நான் காலச்சக்கரத்தை முன்னால ஓட்டிட்டேன், பின்னால ஓட்டுறதுக்கு பதிலா,. வா வா போலாம்" என்று ராஜாவை அழைத்தார் சித்திரகுப்தன்.

அப்பொழுது எதிர்காலத்தில் இருந்த ராஜா இடித்துக்கொண்டிருந்த கதவு திறந்தது. ராஜாவின் மகன் யோகேஷ் வெளியே வந்தான்.

என்னப்பா ஆச்சு" என்று ராஜாவும் அவன் மனைவியும் கேட்டனர்.

"அப்பா.. மனசு சரியில்ல. நான் வெண்பாவை ரொம்ப லவ் பண்றேன். ஆனா அவளுக்கு என்னை புடிக்கலை. ரொம்ப கஷ்டமா இருக்குப்பா. ஐ நீட் ஹெல்ப். எனக்கு இப்படி இருக்க புடிக்கவே இல்ல." என்றான் யோகேஷ்.

"உன் பிரச்சனையை சால்வ் பண்ண தானே அப்பா அம்மா இருக்கோம்..வா டீ குடிச்சிட்டே டிஸ்கஸ் பண்ணுவோம்" என்றான் ராஜா. "தாங்க் யூ பா" என்றான் யோகேஷ்.

" போலாமா?" என்று சித்திரகுப்தன் கேட்டார். "என் மனைவியோட முகத்தை பார்த்துவிட்டு வந்துடுறேன்" என்று கூறினான் ராஜா.

"அந்த பொண்ண பார்க்கத் தான் போறோம் வாடா" என்று சித்திரகுப்தன் ராஜாவை இழுத்துக் கொண்டு சென்றார். காலச்சக்கரத்தை பின்னால் ஓடினார். ராஜா காதலித்தப் பெண்ணின் ஹாஸ்டல் அறை. அவள் அவளுடைய தோழியோடு உரையாடிக்கொண்டிருந்தாள்.

"யாரோட லவ்வுக்கு ஓகே சொல்ல போற. ராஜாவுக்கா இல்ல விக்ரமுக்கா?" என்று அவள் தோழி கேட்டாள்.

“ கண்டிப்பா ராஜாவுக்கு இல்ல.அவன் நல்லவன் தான் ஆனா பணக்காரன் இல்லை. விக்ரம் செம சொத்து வச்சிருக்கான்” என்று கூறி சிரித்தாள் அவள்.

கடும் கோபமடைந்தான் இதைக் கேட்டுக் கொண்டிருந்த ராஜா “இப்படிப்பட்ட ஒருத்திக்காக நான் செத்துப் போனேன் ஐயோ” என்று கூறி அழுதான் ராஜா.

“ உன்ன வேண்டாம்னு சொல்லும் போது அவளுக்கு கொடுத்து வைக்கலனு, உன் வாழ்க்கையை நீ வாழனும் டா தம்பி” என்றார் சித்திரகுப்தன்.

“ என் ஃபேமிலி, என்பிரண்ட்ஸ் எல்லாரும் இன்னமும் என்னை நினைச்சு அழுதிட்டு இருக்காங்க” என்று கூறி வருத்தப்பட்டான் ராஜா.

“ ஒருத்தி மாட்டேன்னு சொல்லிட்டா ஒன்னா செத்துடுறீங்க. இல்லன்னா கொன்னுடுறீங்க. எல்லோருக்கும் ‘நோ’ சொல்ல உரிமை உண்டு. நோ சொல்லிட்டா உயிரை எடுக்குற உரிமை எவனுக்குமே கிடையாது. யாரு எஸ் சொல்றாங்களோ அவங்களோட சேர்ந்து வாழனும். இதுதான் வாழ்க்கை” என்று கூறினார் சித்திரகுப்தன்.

“எதிர்காலத்தில் என் கூட இருந்த அந்த பொண்ணு யாரு?” என்று ராஜா கேட்டான்.

“ இப்ப கேட்டியே, இது சூப்பர் கேள்வி வா காட்றேன்.” என்று கூறி அழைத்துச் சென்றார் சித்திரகுப்தன்.

காலச்சக்கரத்தை சிறிது முன்னே ஓட்டினார் சித்திரகுப்தன்ஞ் மிகவும் அமைதியாக இருந்தது அந்த வீடு. ஓவியம் வரைந்து கொண்டிருந்தாள் அந்தப் பெண். சித்ரகுப்தனும் ராஜாவும் எட்டிப் பார்த்தனர். ராஜா வை ஓவியமாகக் தீட்டிக் கொண்டிருந்தாள். ராஜா ஒரு பெண்ணை அனைத்து நிற்பதுபோல் அந்த ஓவியம் தீட்டப்பட்டிருந்தது. சற்று நகர்ந்து பார்த்து ஆச்சரியம் அடைந்தான்.

“ சக்திஞ்!!!!” என்று அதிர்ச்சி ஆனான். சட்டென திரும்பிப் பார்த்தாள் சக்தி. யாரோ தன்னை அழைப்பது போல் தோன்ற. “ அவளால உன்னை உணர முடியாது டா” என்றார் சித்திரகுப்தன்.

ராஜா விக்ரம் சக்தி மற்றும் ராஜா காதலித்த பெண் நால்வரும் ஒரே கம்பெனியில் வேலை செய்தவர்கள்.சக்தி மிகவும் அமைதியான பெண். தன் உணர்வுகளை அவ்வளவு எளிதில் வெளிப்படுத்துபவள் அல்ல.

சக்தியின் பார்வையின் அர்த்தங்கள் எல்லாம் இப்போது தான் புரிந்தது ராஜாவிற்கு.

ஓவியம் தீட்ட தீட்ட கண்ணீர் உருண்டோடியது சக்தியின் விழியில்.

சக்தி கண்ணீர் துளி நிலத்தில் விழ விழ ராஜாவின் இதயம் வலித்தது. நெஞ்சைப் பிடித்துக்கொண்டு சித்திரகுப்தனை பார்த்தான்.

“ பின்ன வலிக்கும்ல ட்ரூ லவ்னா அங்க அழுதா இங்க வலிக்கணும்ல” என்றார் சித்திரகுப்தன்.

“ சரி சரி வா கிளம்பலாம்” என்று கூறி சித்திரகுப்தன் எம லோகத்திற்கு அழைத்துச் சென்றார் ராஜாவை. உள்ளே நுழைந்ததும் ஒரு இருக்கையில் அமரச் செய்துவிட்டு எமதர்மரை பார்க்கச் சென்றார் சித்திரகுப்தன். நடந்த அனைத்தையும் கூறினார். சேகரித்த அனைத்து விபரங்களையும் காட்டினார்.

" ஒரு வாய்ப்பு கொடுக்கலாமே அரசே" என்று கேட்டார் சித்திரகுப்தன்.

"ம்.. வா..பார்ப்போம்" என்று ராஜா இருந்த அறைக்கு சென்றனர் இருவரும். எழுந்து நின்றான் ராஜா.

" எனக்கு சொர்க்கத்தில் இடம் உண்டா?" என்று கேட்டான் ராஜா

"ம்ம்ஞ்" என்று எமதர்மர் முறைத்துவிட்டு "உனக்கு 2 முடிவுகள் தருகிறேன் ஒன்றை நீயே தேர்வு செய்" என்றார். "சொல்லுங்க" என்றான் ராஜா.

"ஒன்று பூலோகம் திரும்பிச்சென்று உன் வாழ்க்கையை விட்ட இடத்திலிருந்து துவங்குவது.

இரண்டு தற்கொலை செய்து,உன்னை நேசித்த அனைவரையும் நோகடித்த குற்றத்திற்காக நரகத்திற்குச் செல்வது.நீயே யோசித்து கூறு." என்றார் எமதர்மர்.

யோசிக்காமலேயே " நான் உலகத்துக்கு போறேன்" என்றான் ராஜா.

சித்திரகுப்தனும் எமதர்மரும் சிரித்தனர்.

"அப்படியே ஆகட்டும்" என்று ராஜாவை உலகத்திற்கு அனுப்பி வைத்தனர்.. விடிந்தது பிப்ரவரி 14 ஆம் நாள்ஞ்

கண் முழித்துப் பார்த்தான் ராஜா.. தனது அப்பார்ட்மெண்டில் படுத்திருந்தான். உற்சாகமாக எழுந்து கிளம்பினான். கோட்டும் சூட்டும் வெள்ளைக்காரன் போல அணிந்து, ஒரு சிவப்பு ரோஜா பொக்கேயை வாங்கிக் கொண்டு, தன் கம்பெனிக்கு சென்றான். அவனது டீமில் அனைவரும் அமர்ந்திருந்தனர்.

ராஜா சுமமா ராஜாவைப் போல உள்ளே நுழைந்தான்.

ராஜாவைக் கண்டதும் அவன் காதலித்த பெண் எழுந்து நின்றாள். ஆனால் ராஜா அவளை கண்டுகொள்ளாமல் சக்தியிடம் சென்றான். சக்தி,மிகவும் பதட்டமாக இருந்தாள் ராஜா அவள் முன் மண்டி இட்டு வாங்கி வந்த மோதிரத்தை நீட்டி, "ஐ லவ் யூ. வில் யு மேரி மீ??"என்று கேட்டான்.

சந்தோஷம் தொண்டையை அடைக்க கண்ணில் ஆனந்த கண்ணீர் வந்தது. மெதுவாக"எஸ்" என்று தலையசைத்தாள். பொக்கேயை வாங்கிக்கொண்டு தன் கையை நீட்டினாள் ராஜா மோதிரத்தை அணிவித்தான். சக்தி தான் வரைந்து கொண்டு வந்த ஓவியத்தை கொடுத்தாள். பிரித்துப் பார்த்து ஆனந்தக் கண்ணீர் வடித்தான். அதில் ராஜாவை வடித்திருந்தாள். டீமில் அனைவரும் கைதட்டி வாழ்த்துக்கள் கூறினர்.

விக்ரம் சக்திக்காக வாங்கி வந்த கிரீட்டிங் கார்டை கிழித்து குப்பையில் போட்டுவிட்டு, ராஜா- சக்திக்கு வாழ்த்துக்கள் கூறினான்.

தன் காதல் வெற்றி பெற்ற செய்தியை தன் அம்மா அப்பாவிற்கு தங்கைக்கும் அனைத்து நண்பர்களுக்கும் கூறி மகிழ்ந்தான் ராஜா. தன் ஃபேஸ்புக் பக்கத்தில் தெரிவித்தான் நடந்து முடிந்தவற்றை புதைத்து கிடைத்த மறு பிறவியை விதைத்து தன்னை நேசித்த உயிர்களை மதித்து ஆரம்பித்தான் தன் புது வாழ்வை அமைத்து!!! நமக்கு இருப்பது ஒரு பிறவிதான்..

நம்மை நேசிக்கும் உள்ளங்களுக்காக வாழ்வோம்!!!.



# கந்துறுமெனிக்கே

● ந. கிருஷ்ணசிங்கம்

கந்துறுமெனிக்கே பௌத்தசிங்களப்பெண். கண்டிநகரில் பெரும்வர்த்தகரான மத்துமபண்டா முதலாளியின் ஒரேமகள் இவள்.

தர்மவர்த்தனே என்ற வாலிபனை இவள் காதலிப்பதையறிந்த தாயார் சுதுகாமினே பதறியவாறு அவளைப்பார்த்து,

எடிபெட்டை! உன்ரை அமசடக்கான அலுவலையறிந்தன். இந்தவயதிலை உனக்குக்கலியாணம் தேவைப்படுகுதோ. அவன்பெடியனின்ரை குடும்பம் எங்கடை அந்தஸ்த்துக்குச் சரிநிகராகமுடியுமோ. கொப்பரறிந்தால் கொலைசெய்வார். நாங்கள், உனக்குச்செல்லம் தந்ததாலை வந்தவினையிது. பெற்றமனம்பற்றியெரியுது. இத்தனைதொகை சொத்துக்களிருந்தும் அதற்கேற்றதகுதியோடை உன்னாலைவாழமுடியாது எங்களுக்கு உபத்திரவம்தரவா தீர்மானித்திருக்கிறாய். நீதிருந்தவேணும். இல்லையோ

நடக்கிறநாசத்தைக்காண நானிருக்கமாட்டன்.

தாயார், இத்தனைதெளிவாக எடுத்துக்கூறவும் குனிந்தபார்வையோடு கேட்டவள் எவ்விதமானசலனமுமின்றி மெல்லநடந்து, தனது அறைக்குட்சென்று கதவைச்சாத்திக்கொண்டாள்.

புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்த தாயார் சுதுகாமினே மனவருத்தத்தால் வதையுண்டவளாகத் துன்புற்று, நோய்முற்றியுலைந்து இறந்துவிட்டாள்.

மனைவியார் காலமாகியதைத்தொடர்ந்து மத்துமபண்டாவும் நோய்வாய்ப்;பட்டு, மருத்துவநிலையத்தில் அனுமதிக்கப்பட்டார். தாயாரற்ற மகளைப்பற்றியும், தனது நிறுவனத்தைத்தாங்கிப் பொறுப்பேற்று நடத்தவல்லவரும் நம்பிக்கையானவரும் தம்மினத்தவர்களில் இல்லாதகுறையையும் எண்ணியேங்கியவர், சுகம்பெற்று வீடுதிரும்பியதும் மகளின்; விருப்பப்படியே தர்மவர்த்;தனேயை அவளின் கணவராக்கிக்கொண்டார்.

கண்டிமாநகரமத்தியில் பலசரக்குச் சாமான்களின் மொத்தவியாபாரநிலையத்தை நடத்திவந்த மத்துமபண்டா மிகப்பிரசித்தமானவர். கௌரவமான மனிதரென யாவராலும் மதிக்கப்பட்டவர். பெரும்சொத்துக்குரிய சகலவிதமான செல்வங்களும் இவரிடம் குவிந்துகிடந்தன.

மாளிகைவீடும் தோட்டங்களும் இவரின், தந்தையார்வழிவந்த பிறசெல்வங்களும் மதிப்பிடற்கரியவை. இத்தனையும் கந்துறுமெனிக்கே உரியதுவென்று உறுதிப்பத்திரமும் எழுதிவைத்துவிட்டார்.

அவளின் காதல்ததும்பும் இனிமைமிகுந்த அரவணைப்பாலும், பாரம்பரியதொரு பெருமைக்குரிய குடும்பத்தின் மருமகனென்ற அந்தஸ்து வாய்த்ததினாலும் தர்மவர்த்தனே கர்வமோடு தலைநிமிர்ந்து வாழ்ந்தார். இவர்களின் இல்லறவாழ்வின் வாருசுகளாக இரண்டு ஆண்குழந்தைகள் பிறந்தார்கள்.

மத்துமபண்டாவின் மறைவுக்குப்பின் வர்த்தகநிலையத்தைக் கையேற்றுக்கொண்ட தர்மவர்தனே தனது இத்தனைகால நடிப்புவாழ்க்கையை நிறுத்தியவராகத் தோழர்களோடு சேர்ந்துகொண்டு பணத்தையள்ளிவீசிச் செலவுகள்செய்து, பண்பாட்டுச் சீர்கேடுகளில் ஆர்வமோடுஈடுபட்டுத் திரிவதைக்கண்டித்து மனைவியார் கந்துறுமெனிக்கே அதட்டியபோதெல்லாம் அவரோ அவளை அடித்துமிரட்டவும் ஆரம்பித்தார்.

இவரின், இத்தகையமாற்றத்தினாலீல் மகிழ்வுமிளிர்ந்த அந்த மாளிகைவீட்டில் சோகநிகழ்வுகள் தோன்றித்;தொடர்ந்தன. இதனால் கவலையில் ஆழ்ந்துபோகும் கந்துறுமெனிக்கேயை அவரின் குழந்தைகள் குதூகலப்படுத்திச் சிரிக்கவைத்து ஆற்றுப்படுத்தினார்கள்.

பல்வேறு பாரியபிரச்சனைகளையும், இன்பதுன்பங்களையும் தாங்கியவாறு காலம்நகர்ந்தது. பிள்ளைகள் வயதுயர்ந்;த வாலிபர்களாயினர். குடும்பக்கௌரவத்தைக் காக்கும்படியான நல்லகாரியங்களில் அவர்கள் ஈடுபட்டனர்.

புத்தபூசைக்குச்சென்றனர். அசலப்பெரகராவிலும் வெசக்பண்டிகையின்போதும் தானசாலைகள் அமைத்து, இலவசமாக உணவுகளைவழங்கினர். இவைகள்மூலம் சமூகத்தின் நற்பெயரை மென்மேலும் அவர்கள் நிலைநாட்டிவந்தனர்.

ஆயினும், இவர்களின் தந்தையார் தர்மவர்த்தனே இவர்களுக்கு இடர்விளைவிக்கும்

அடாதயெயல்களில் ஈடுபடுபவராகவும், தனது ஆடம்பரவாழ்க்கையை மென்மேலும் விசாலப்படுத்தியவராகவும் மாறினார்.

அவரின், நெருங்கியநண்பனான வீரசூரியா என்பவன் கடும்போக்குள்ள இனவாத இயக்கமொன்றின் இணைப்பாளர் பதவியிலிருந்ததினால், சண்டித்தனங்களும் ழி;காஸ்டிமோதல்களும் கைகலப்புக்களும் குடிகூத்துக்களும் கைவரப்பட்டவனாக இருந்தான். இவனேதனக்குரிய மெய்ப்பாலீதுகாவலனென எண்ணிய தர்மவர்த்தனே அவனோடுவைத்திருந்த நெருக்கத்தைப் பெருக்கிக்கொண்டார்.

வீரசூரியா தனது தங்கைமுறையான நெலுமல் என்னும் பேரழகியை தர்மவர்த்தழி;னக்கு அறிமுகம்செய்துவைத்து, அவளை அவரின் ஆசைநாயகியாக்கிவிட்டான். நெலுமல்லின் அணைப்பை இழக்கமுடியாத மோகத்தினால் அவளின் வீடேகதியெனக் கொண்டு;வாழ்ந்த தர்மவர்த்தனே, வீரசூரியாவின் கட்டளைகளைச் சிரமேற்தாங்கிச் செயற்படலானான். இதனைச்சாதகமாகப் பயன்படுத்திய வீரசூரியா தனது அதிகாரங்களை தர்மவர்தனேயின்; வியாபாரநிறுவனத்திலும் நிலைநிறுத்தினான்.

இவற்றையெல்லாம் கேள்வியுற்ற கந்துறுமெனிக்கேயின் பிள்ளைகளான திலக்சேனேயும் ஜயலக்சேனேயும் கடுங்போபங்கொண்டு தாயாரோடு பேசத்தொடங்கினார்கள்.

அம்மா! நாங்கள் இனிக்கல்லுரிக்குப் போகமாட்டோம். எமது வியாபாரநிலையத்தைப் பொறுப்பேற்று அதைநல்லபடியாய் நடத்தப்போறம்.

என்றவர்கள்கூறவும் அதிர்ந்துபோன மெனிக்கே..

என்னபேசுகிறியள் படித்துப்பட்டம் பெறவேணாமோ. கடைநல்லாத்தானே நடத்துக்குது. பிறகேன் நீங்கள்பொறுப்பெடுக்கிறது.

தாயார் சொல்லிவாய்மூடமுன் உரத்ததொனியில் ஜயலக்சேனே பொரிந்துதள்ளினான்.


கடையை முழுமையாக அந்தக்காவாலி வீரசூரியாவல்லோ சுவீகரித்துக்கொண்டு இயக்குகிறான். அவன் ஆட்டியபக்கமெல்லாம் அப்பா ஆடுகிறார். அவன்ரை ஆட்சியல்லவோ அங்கைநடக்குது. இதுகளையொல்லாம் அறியாமல் கடையின் உரிமையாளர் கந்துறுமெனிக்கே வீட்டுக்குள்ளை குறண்டிப்படுத்துக்கிடக்கிறா.

பாரவூர்திளின் சாரதிகள்முதல் மற்றும் பணியாளர்களென்று பெரும்தொகையானவர்கள் வேலைசெய்கின்ற நிறுவனம்பற்றி அம்மாவுக்கு அக்றையில்லாமல் இருக்கலாம். ஆனால் எம்மாலே அப்படியிருக்கமுடியாது. இவையெல்லாம் எங்கடை பரம்பரைச்சொத்து என்றகரிசனை எங்களுக்கு இருக்குது.

வீரசூரியாவின் இனவாதத்திற்கு இரையாகிப்போன அப்பா அங்கைபணியாற்றிய தமிழர்களையும், முஸ்லீம்களையும் வேலையிலிருந்து தற்காலிக ஆட்குறைப்பு என்றபெயரில் நீக்கிவிட்டு, பௌத்தசிங்களவர்களைத் தேர்ந்தெடுத்து வேலைக்கு நியமித்துள்ளார்.

அனுபவம்வாய்ந்த தொழிலாளர்கள் நீக்கப்பட்டதினால் நிறுவனம் நிதானமிழந்து தடுமாறுகின்றது. அம்மா இவையொன்றையும் அறியாமல் வங்கிச்செக்குகளுக்கு கையொப்பம்போட்டுக்கொண்டு; காலத்தைஓட்டுகிறா.

அப்பாவின், இனவாத ஆள்நீக்கத்தாலை பெருந்தோட்டப்பகுதியினர் கடுங்கோபங்கொண்டுள்ளனர். அங்கெல்லாமுள்ள வர்த்தகர்கள் எங்களின் நிலையத்தில்



செய்துவந்த பொருட்கொள்வனவுகளை நிறுத்திவிட்டனர். இதனால் பெருத்தநஸ்ட்டத்தை நமதுகடையடைந்துள்ளது.

மெனிக்கேக்கு இவற்றையெல்லாம் கேட்கும்போது மிகுந்தஅதிர்ச்சியாக இருந்தது.

பிள்ளையள்! ஏன் உங்கடையப்பா அந்தறவுடி வீரசூரியாவோடைசேர்ந்து அவனின்ரை சொல்லுக்குக்கட்டுப்பட்டுக் கூத்தாடுகின்றார். எனக்கொன்றும் விளங்குதில்லை.

என்றவர்சொல்லிக் கலங்கவும்.

மாளிகைவீடும் எடுபிடியாட்களென்றும் வாழுகின்ற உங்களுக்கு அப்பாவின் உள்ளார்ந்த இழிவுகள்நிறைந்த வாழ்க்கைகுறித்து எடு;துச்சொல்ல எவருந்துணிந்து முன்வரமாட்டார்கள். அம்மா! உங்கடைமகன் ஜயலக் சொல்லுகின்றேன். வீரசூரியாவின் தங்கைச்சி நெலுமல் என்றவளைத் தனது ஆசைநாயகியாக அப்பா வைத்திருக்கின்றார். இதையறியாமல் இரவுபகலென்று அலைந்து வியாபாரவேலையாக அவர் வெளியூர்போய்வருகின்றார் என்று பெருமையோடு புகழ்ந்துகூறுவீர்கள். தந்தையாரின் அனியாயத்தை பிள்ளைகள் நாங்கள் உங்களுக்குச் சொல்லவேண்டிவந்துவிட்டது.

ஜலக்கூறிமுடிக்கவும், அதிர்ந்துபோன கந்துறுமெனிக்கே கதறியழத்தொடங்கினாள். வீடு இரைந்தது. வேலைகாரப் பெண்கள்கூடி வியப்போடு பேசிக்கொண்டனர்.

அந்தத்தருணம் அங்குவந்த தர்மவர்த்தனேயை பற்றிப்பிடித்துக்குதறிய கந்துறுமெனிக்கே, நெலுமல்லின் தொடர்வுகுறித்துக்கேட்டுக் கூக்குரலிடவே, அவரோ அவளை விலக்கித்தள்ளிவிட்டு ஓட்டமும்நடையுமாகசென்று காரிலேறிக்கொண்டார். செயலிழந்துநின்ற மகன்கள் ஒருவரையொருவர்நோக்கி உறுமிக்கொண்டனர்.

மறுநாள் அவர்களிருவரும் கடைக்குள்சென்று அமர்ந்;துகொள்ளவே, அங்கேயிருந்த வீரசூரியா அதிர்ச்சியோடு நோக்கியவனாக,

ஏன் நீங்கள் கல்லூரிக்குப்போகாமல் இஞ்சைவந்து இருக்கிறியள் என்று கேட்கவே,

நாங்கள் இனிமேல் இங்கைதான் இருப்பம். இந்தநிறுவனத்தை இனிமேல்நாங்கள்தான்

வழிநடத்தப்போறம். இது எங்கடைசொத்து. இதனை அழியாவிடாது காக்கவேண்டிய எங்களின் அப்பா கண்டவன்களின் கயிற்றில்சிக்குண்டு திசைமாறியலையும்போது அதைப்பார்த்துக்கொண்டு பொறுத்திருக்கமுடியாது.

ஆத்திரத்தோடுவிழித்த தந்தையார் அவர்களை அடிக்கக் கையோங்கியவராகவந்து, இகழ்ந்துபேசத்தொடங்கினார்.

பலகோடிபொறுமதியான வியாபாரநிலையத்தை வழிநடத்தவந்திருக்கினமாம் பெடிப்பிள்ளைகள். என்னதவறைக்கண்டுபிடித்துத் திருத்தவந்திருக்கிறியள். படிக்கமுடியாது ஒழித்துவிளையாட உங்களுக்குக் கடைதானாகிடைத்தது. போங்கடாவெளியாலை.

என்று, விரட்டவும் அசையாது அங்கையேயிருந்த அவர்களைக் கோபத்தோடு நோக்கிய வீரசூரியா பேசத்தொடங்கினான்.

தர்மவர்த்தனே என்ரைநண்பன். அவனுக்காக உயிரையும்கொடுப்பன். இப்பநீங்கள் ஓடித்தப்பப்போறிளோ.. அல்லது அடிவாங்கிச் சாகப்போறியளோ.

என்று மிரட்டியவாறு, கெட்டவார்த்தைகளால் திட்டியபோது, எழுந்துநின்ற திலக்

அண்ணே! கனக்கதைக்காமல் நீங்கள்தான் இந்த இடத்தைவிட்டுப்போகவேணும். போகேக்கை உங்கடை உயிர்நண்பன் திருவாளர் தர்மவர்த்தனேயையும் கூட்டிக்கொண்டு போனால்நல்லது.

இந்தக்கடை மட்டுமல்ல மற்றும் சகலவிதமான சொத்துக்களும் எங்களுடைய அம்மா கந்துறு மெனிகேயின் பெயரில்தான் உள்ளதென்பதை துரையார் சிறீவீரசூரியா அவர்கள் அறிந்துகொண்டு இடத்தைக்காலிசெய்வது நன்றென்று நாங்கள் கருதுகின்றோம்.

எடபொடிப்பயல்களே! என்னைப்பற்றி அறியாமல் கண்டபடிகதைச்சு ஆத்திரப்படுத்த வேணாம். என்ரை நண்பனின்ரை பிள்ளைகளெறு பார்க்கிறேன். ஓடித் தப்புங்கோ..

என்று வீரசூரியா மிரட்டவும், நகைத்த திலக் ஜயலக்கைநோக்கி

தம்பி! நீபோய்.. அப்புக்காத்து ஜெயக்கொடி அங்கிளைக் கூட்டிக்கொண்டுவா. அவர்மூலம் பொலிசுக்கு அறிவிப்பம். இந்தப்பெருச்சாளிகளைப் பிடித்துநசுக்கவேணும்.

என்று சொல்லவும் ஜயலக் காரிலேறிவிரைந்தான்.

ஜெயக்கொடி பிரசித்தமான பெருஞ்சாதனைமிகுந்த வக்கீல். அவரெடுங்கும் வழக்குகள் வெற்றியைத்தொட்ட வரலாறுகள் அதிகம். அவரின்பெயரைத் திலக்கூறவும் வீரசூரியா திகைத்துப்போனான். தர்மவர்த்தனேயின் கையைப்பற்றி இழுத்துத்துக்கொண்டு வெளியே நகரமுயன்றான்.

எடவாவெளியாலைபோவம். அந்தாள் பொல்லாத அப்புக்காத்து. நீ நிண்டால் உன்னட்டைத் துருவித் துளைத்துக் கேள்விகள்கேட்கும். கண்டபடி உளறிக் கொட்டி என்னைமாட்டிவிடுவாய். எனக்கு ஏற்கணவே ஏகப்பட்ட குற்றச்சாட்டுக்களும், வழக்குகளுமிருக்குது. சும்மாமுட்டிமோதக்கூடாது. எல்லாம் பிளான் பண்ணி செய்யவேணும். இப்ப நடவெளியாலை.

என்றுகூறியபடி, வீரசூரியா தர்மவர்த்தனேயை தள்ளிக்கொண்டுசென்று காரிலேற்றி வேகமாக ஓடிமறைந்தான்.



# சித்திவிநாயகர்

● மயில் மகாலிங்கம் (ஜேர்மனி)

ஆலங்கேணி,ஆலைகள் நிறைந்த ஊர்.பிள்ளையார் கோயிலுடன் ஒரு பெரிய ஆலைமரம்;பாடசாலையின் நுளைவாசலில் ஓர் ஆலைமரம்;ஊரின் மத்தியிலுள்ள சிறு கேணியின் கரையில் ஓர் ஆலை;

ஆனால் அது இப்போது அழிந்துவிட்டது.

பிரசித்திபெற்ற பிள்ளையார் கோயிலில்தான்,தம்பலகமம் ஆதிகோணேசுவரர் மகாவலிகங்கையில் தீர்த்தமாடப்போகும் போது,வந்து தரித்து ஆராதனைபெற்றுச் செல்வது சம்பிரதாயம்.ஆண்டாண்டு நடக்கும் சிறப்பு நிகழ்வு அது.

பாராம்பரிய தமிழர் கிராமம்.கல்விமான்களும்,கலைஞர்களும் நிறைந்த ஊர்.சுற்றிவளைத்து முசுலீம் கிராமங்களின் மத்தியில்.கல்வியிலும் கமத்தொழிலும் சிறந்துவிளங்கியது.அரசியல் ஆடுகளத்தில்,வசதிபடைத்தவர்கள் திரிகோணமலைக்கு குடிபெயர்ந்துவிட்டனர். தனிக்கிராமசபையாக இருந்த ஆலங்கேணி,இன்று காற்றிழந்து சுருங்கியபலூன் போலாகிவிட்டது.இன்று'கிண்ணியாடுவின் ஒரு வட்டாரமாகிவிட்டது.

மிகவிரைவில் ஊராட்சித் தேர்தல் நடக்கவிருக்கிறது.இரு தமிழ் வேட்பாளர்களுக்கிடையே கடும் போட்டி.ஒருவர் தமிழ் தேசியவாத ஆதரவாளர்;மற்றவர் அரசு சார்பானவர்.

தேர்தல் களம் சூடுபிடித்துக் காணப்பட்டது.தேர்தல் நெருங்க நெருங்க பணம் தன் வீரியத்தைக்காட்டியது;கசிப்புச் சாராயம் சலசலத்து ஓடிற்று. கசிப்பு வியாபாரம் கொடி கட்டிப்பறந்தது.

ஆலடிப்பிள்ளையார் மகிமையானவர்;சக்திமிக்கவர்;நேர்த்தி வைத்து வழிபட்டவர்களைக் கைவிடமாட்டார் என்ற நம்பிக்கை எல்லோர் மனதிலும் ஆழவேரூன்றியிருந்தது.

அன்று புதன்கிழமை;பொன் கிடைத்தாலும் புதன் கிடையாது என்ற ஐதீகத்தில் நம்பிக்கையுடைய அரசுச்சார்பான வேட்பாளர்,தன் ஆதரவாளர்கள் புடைசூழ ஆரவாரத்துடன் பூசைத்தட்டுக்களுடன் கோயில் பிரசன்னமாயினர்.கோயில்மணி அதிர்ந்து ஒலித்தது;அதனையும் மேவி வாழ்த்தொலி...!!!!

ஐயர் சுறுசுறுப்பானார்.ஏற்கனவே அறிவிக்கபபட்டிருந்ததால்,

சகலசம்பிரதாயங்களையும் பக்காவாக தயார்படுத்தி வைத்திருந்தார்.விசேச வழிபாடு அரங்கேறியது.காணிக்கைத் தட்டுடன் கட்டாகக்கிடைத்த ரூபாய் தாள்களைக் கண்ணுற்ற ஐயர் முகம்மலர சுறுசுறுப்பானார்.கற்பூரம் எரித்து,தேங்காயுடைத்து ஐயர் திருவாய் திறந்தார்.

"ஐயா! பிள்ளையார் என் கனவிலேயே நேற்று எழுந்தருளி தரிசனம் தந்தார்.வெற்றி உங்களுக்கே!உங்க வெற்றியை ஆராலுமே தடுக்கமுடியாது"

வேட்பாளர் முதல்,ஆதரவாளர்கள் முகங்களில் மகழ்ச்சி உச்சம்தொட்டு அலர்ந்தது. பூரண திருப்தியுடன் வாழ்க கோசமிட்டவாறே அகன்றனர்.

இரண்டுநாட்கள் நகர வெள்ளிக்கழமை வெளித்தது.

தமிழ்தேசியவேட்பாளர்,விரல்விட்டு எண்ணும் ஆதரவாளர்களுடன்

பிரசன்னமானார்.

ஆரவார ஆர்ப்பரிப்பு,அடங்கியே ஒலித்தது.தோல்விப்பயமோ என்னவோ தெரியவில்லை. இருந்தாலும் சித்திவிநாயகர் மீதிருந்த அசையாத

நம்பிக்கையில் எல்லாம் அவன் செயலென ஆரவாரமில்லாமல்

அடக்கத்துடனே நடந்துகொண்டனர்:

ஐயரும்,காணிக்கை கம்மியாகவே கிடைக்குமென்ற மெத்தனத்தில்,வேண்டா வெறுப்பாக ஆராதனையை சர்வசாதாரணமாகவே செய்தார்.

அவர் எதிர்நோககியது போலவே காணிக்கையும் கடுகளவே கிடைத்தது;

மனதுக்குள் மறுவிக்கொண்டார். ஆராதனையையும் குறுகிய நேரத்தில் முடித்துக்கொண்டார். அருள்வாக்கோ,வாழ்த்துகளோ ஐயரிடமிருந்து கடமைக்குக் கூட உதிரவில்லை.யுபிள்ளையார் பார்த்துப்பார்யுஎன ஈனசுரத்தில் சுரத்தின்றி முணுமுணுத்துக்கொண்டார்

.வேட்பாளர் குழாம்,எப்படி ஆரவாரமில்லாது வந்தனரோ அப்படியே அமைதியாகத்திரும்பினர்.

'நீயெல்லாம் வெற்றி பெற்றமாதிரித்தான்' என மனதுக்குள்ளாக நக்கலாகச் சிரித்துக்கொண்டார்:

நாட்கள் நகர்ந்தன..கசாம்.மதுவகைகளும் அரசுதரப்பில் ஆறாய் பாய்ந்தன.வாக்களிப்பு நாளும் வந்தது.சாரை சாரையாக,விறுவிறுப்பாக தேர்வு நடந்துமுடிந்தது.திட்டமிட்டபடி அன்று பிற்பகலே முடிவு வெளிவரும்.

நேரம் நெருங்கநெருங்க,தேர்தல் பணிமனையின் வளாகத்தில் வேட்பாளர்களும்,ஆதரவாளர்களும் நிலைகொள்ளாமல் குட்டிபோட்ட பூனைபோல குறுக்கும் மறுக்கும் நடந்து தவித்தனர்.

தொலைக் காட்சிப்பெட்டி, அந்தா இந்தாவென வெவ்வேறு வட்டாரங்களின் பெறுபேறுகளை தெரிவித்துக்கொண்டிருந்தது.ஆலங்கேணியின் தேர்வு முடிவு வந்துள்ளதாக அறிவித்தபோது இருகட்சியினரும் நிலைகொள்ளாமல் தவித்தனர்.வெடிகளுடனும்,மலர் மாலைகளுடனும் தயாராகக்காத்திருந்தனர்.

தேர்தல் முடிவும் அறிவிக்கப்பட்டது.. தமிழர்தேசிய முன்னணி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டபோது,

அவர்களாலேயே தம் காதுகளை நம்பமுடியவில்லை.இமாலய நம்பிக்கையிலிருந்த அரசுத்தரப்பினர் இடிந்துபோய்விட்டனர்.


வெற்றியாளர் தரப்பிலிருந்து மிகக்குறைவாகவே வெடிகள் முழங்கின.தோற்கப்போறவர்தானே என்ற அவநம்பிக்கையில் வந்தவர்களாச்சே.

அடுத்தநாள் சித்திவிநாயகர் ஆலயத்தில் இனம்புரியாத பரபரப்பு நிலவிற்று.

தோற்றவர்கள் வந்து, ஐயரை வைதனர். பொய் சொன்னதாக வசைபாடினர்.பெரியஎடுப்பில் பூசை செய்ததுக்கு இதுதானா பலன் என பிள்ளையார் மீது கறுவினர்.

அதன் பின்னர் வெற்றியாளர்களின் வருகை.. பெரும் எடுப்புடன்,தட்டுத்தட்டாகப் பூசைப் பொருட்களுடன்..

ஐயர் இப்போது தன்னைச் சுதாரித்துக் கொண்டார்.யுபிள்ளையார் தமிழரைக் கைவிடமாட்டார்யுஎனத் தொப்பியை கூச்ச நாச்சமில்லாது பிரட்டிப்போட்டார். பிள்ளையார் எப்போதும் போலவே தொப்பை வயிற்றுடனும், தும்பிக்கையுடனும் கற்சிலையாய் அமர்ந்திருந்தார்.



# காற்றின் தேடல்கள்

● லக்ஷ்மி

அழகான கடற்கரை கிராமம் எங்கள் ஊர். தென்னைத் தோப்புகளும் முந்திரி மா பலா வாழை என அத்தனை மரங்களும் உள்ள அடர்ந்த தோப்பு எங்களுடையது. அந்தத் தோப்பிற்கு நடுவே தென்னை ஓலைக்கூரை வேய்ந்த அழகான வீடு.

அம்மா அப்பா அண்ணன்கள் அக்கா தம்பி தங்கை என்று அனைத்து உறவுகளோடும் சந்தோஷமாக சிரித்து விளையாடுவதும், கோபம் வந்தால் சண்டையிடுவதும், அம்மா தரும் உணவை போட்டிப்போட்டுக்கொண்டு சாப்பிடுவதும், ஏதேனும் சின்னச் சின்ன வால்தனங்கள்

செய்துவிட்டு அப்பாவிடம் அடிவாங்குவதுமாக சென்ற அந்த நாட்களில்தான் என் வாழ்க்கையில் வந்தாள் அவள். பெயர் அனிதா. இலங்கை மட்டக்களப்பைச் சேர்ந்த அகதிப் பெண்.

கடற்கரை அருகில் எங்கள் ஊர் என்பதால் கடற்கரையோரத்து மீனவக் குடும்பங்கள் நிறைய.

அவர்களுக்காக புயல் போன்ற இயற்கை சீற்றங்களான நேரங்களில் அவர்களைத் தங்கவைப்பதற்காக வட்டவடிவமான கட்டடங்களைக் கட்டிக்கொடுத்திருந்தது செஞ்சிலுவை சங்கம். அந்தக் கட்டடத்தில்தான் பின்னாளில் இலங்கையில் போர் மிகத்தீவிரமாக நடந்தபொழுது பல ஆயிரம் மக்கள் அகதிகளாகத் தமிழகம் வந்தவர்களை அரசாங்கம் குடும்பம் குடும்பமாகத் தங்கவைக்கப்பட்டனர்.

அவற்றில் ஒரு குடும்பம்தான் அனிதாவின் குடும்பம். அவளின் அண்ணன் அங்கேயே போராளியாகத் தங்கிவிட அவள் அப்பாவும் குண்டுவெடிப்பில் இறந்துவிட அம்மா அக்காவோடு பக்கத்து வீட்டுக்காரர்களும் சேர்ந்து எப்படியோ படகு பிடித்து தப்பித்து வந்துவிட்டனர். என்னைப்போலவே அனிதாவிற்கும் 10 வயதுதான்.

அவள் தங்கியிருந்த இடத்திலிருந்து எங்கள் தோப்புகள் கொஞ்சம் தூரம். அவர்களெல்லாம் காய்கறி தேங்காய் மாங்காய் என்று வாங்குவதற்கு எங்கள் பகுதிக்குத்தான் வரவேண்டும்.

அப்படி ஒருமுறை தேங்காய் வாங்க வந்தவள் மெதுவாக என்னிடம் பேசினாள். உன் பெயரென்ன என்று அதிகாரமாக திமிராகக் கேட்ட எனக்கு அமைதியாக அழகாக பதிலளித்தாள் அவள் அனிதா என்று. எனக்கு இது நம்ம ஊர். இவங்கல்லாம் ஏன் இங்கே வரணும் என்ற பொறாமை. காரணம் எனக்கு அவர்களின் நிலை தெரியாதில்லையா. எனக்கும் 10 வயசுதானே. பாவாடைச் சட்டையில் துள்ளித்திரிந்த காலங்கள். அப்பா ஊர்ப் பெரியமனிதர் என்ற திமிர் எனக்கு.

ஆனால் அனிதாவின் மென்மை என்னைப் பிடித்து நிறுத்தியது. அவள் அருகில் சென்று பார்க்கிறேன். ஒரு பழைய அரைப்பாவாடை மேல்சட்டை. அந்த உடையிலும் ஒரு தனி அழகு. உடனே அவள் கையைப் பிடித்துக் கொள்கிறேன். எனக்கு உன்னைப் பிடிச்சிருக்கு. விளையாடலாமா? உனக்குத் தேங்காய்தானே வேணும். நான் தரேன் என்கிறேன். ஆனால் அவள் தயங்குகிறாள்.

“இல்ல... தேங்காய் வேணும். சமையலுக்கு அம்மா வாங்கிவரச் சொன்னாங்க. ஆனால் காசில்லாமல் வாங்க ஏலாதே. அம்மா திட்டுவாள் என்று இலங்கைத் தமிழில் அழகாக பதில் கூறினாள்.

“சரி சரி உன் அம்மாவிடம் திட்டுவாங்காதே!

நான் என் அம்மாவிடம் என்ன விலையென்று கேட்டு வாங்கிக்கொள்கிறேன் என்றேன் நான்.

என் வீட்டில் என் அப்பா எந்தப் பொருளையும் கசூக்கு கொடுக்கமாட்டாங்க. வியாபாரம் என்பது தனி. மற்றவர்களுக்குப் கொடுப்பது என்பது வேறு என்பார்கள். இது எங்கள் ஊரில் அனைவருக்குமே தெரிந்தவிஷயம். சித்த மருத்துவர் ஐயா வீட்டிற்கு போனால் பசியாறலாம் என்பது பிரசித்தம்.

அங்கேயும் நான் விட்டுக் கொடுக்கிறேன் அனிதாவிற்காக. ஏன்!

அவள் உருவம் அவள் மொழி அவளின் அமைதி என்னை அந்தளவிற்கு ஈர்த்துவிட்டதா!

என் தனிமைக்குள் அவளை நுழைய அனுமதித்துவிட்டேனா!

ஆனால் அவளுக்காக எல்லாவற்றையும் விட்டுக் கொடுக்கிறேன்.

அன்றிலிருந்து தோழியாகிவிட்டாள்.

பள்ளிவிட்டு வந்ததும் நான் அவளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பேன். அவள் பள்ளியில் சேரவில்லை. காரணம் அகதி என்ற சான்றிதழ் இன்னும் வரவில்லையென்றாள்.

அவள் ஊரைப் பற்றி அவள் வீடு அப்பா அண்ணன் பற்றியெல்லாம் கதைகதையாகச் சொல்வாள். எனக்கும் கேட்கும்போது அழுகையாகவும் இருக்கும். அண்ணாவைப் பிரிந்துவந்ததைச் சொல்லி வருந்துவாள். அண்ணனைப் பார்த்தே பலமாதங்களாகிவிட்டது என்றாள். பெடியன் என்று இலங்கைத் தமிழில் கூறுவாள். அந்தப் 10 வயதில் முதிர்ச்சியானப் பேச்சு. நான் அமைதியாகக் கேட்டுக்கொள்வேன். அவர்கள் நாட்டில் நடக்கும் கொடுமைகளை ஏன் அகதியாக வந்தோம் என்பதை அழுதுகொண்டே கூறுவாள். நானும் கண்ணீரோடு கேட்பேன். ஆறுதல் சொல்வேன்.

என் வீட்டுத் தோட்டத்தில் வேலை செய்யும் ஆட்களிடம் இள்நீர் வெட்டச்சொல்லி இருவரும் அருந்திக்கொண்டே பேசுவோம்.

அந்த வயதில் விளையாட்டைக்கூட மறந்து அவள் சொந்தக் கதைகளைக் கூறும்பொழுது என்விளையாட்டுத் தனமும் மறந்து ஒரு முதிர்ச்சியானப் பெண்ணாக என்னை உணரவைத்தாள் என் அனிதா.

என் வீட்டில் எல்லாரிடமும் அவளை அறிமுகப் படுத்திக்கொண்டேன். அண்ணாக்கள் பாசமாக விளையாடுங்கள் என்று கூறி ஒதுங்கிக்கொண்டனர்.

நாங்கள் இருவரும் நிறைய இலங்கைப் பற்றியே பேசுவோம். எனக்கு ஆச்சரியமாக இருக்கும் அங்கே நடப்பவை மனதைப் பதறச் செய்யும்.

இந்த வயதில் இவள் இவ்வளவு அனுபவித்திருக்கின்றாளா என்று மனம் வலியோடு நினைப்பேன். அவள் வீட்டிற்குப் போனபிறகு என் அப்பாவிடம் சொல்லி வருந்துவேன். அப்பாவும் ஆமாம் அப்படியெல்லாம்தான் அங்கே நடக்கிறதுடா என்று கூறுவார்கள்.

அனிதா என் வாழ்க்கையில் ஒரு அங்கமாகிவிட்டாள். அவளுக்காக நான் என் விளையாட்டுத் தனங்களைக்கூட மறந்து அவள் சுமைகளை இறக்கி வைக்கும் சுமைதாங்கியாகிவிட்டேன்.!

பள்ளியில் வீட்டில் எல்லோரிடமும் என் தோழி அனிதா என்று இப்படிச் சொன்னாள் அப்படிச் சொன்னாள் என்று எந்நேரமும் அவள் நினைவாகவே வாழ ஆரம்பித்துவிட்டேன்.

அவளிடமும் நீ திரும்பி அங்கேயெல்லாம் செல்லாதே அனிதா!

என்னோடு இருந்துவிடு! என்பேன்.

சிரித்துக்கொண்டே எப்படி இருப்பதுப்பா.... என் அண்ணன் அழைத்தால் சென்றுவிடுவேனே! என்பாள். எனக்கு அழுகையாக வரும். சரி அதெல்லாம் நடக்கும்பொழுது பார்த்துக் கொள்ளலாம் என்று என்னை நானே ஆறுதல்படுத்திக்கொள்வேன்.

நானும் என் அப்பாவிடம் அனுமதி வாங்கிக்கொண்டு அவள் இருப்பிடம் செல்வேன்.

அவள் அம்மா அக்காவிடம் பேசுவேன். ஏதேனும் உதவி என்றால் தயங்காமல் கேளுங்க. என் அப்பா இங்கே ரொம்ப பிரபலமானவங்க. ரொம்ப மரியாதையானக் குடும்பம் எங்களுடையது. எல்லா உதவியும் செய்வாங்க என்பேன். ஆனால் அவர்கள் மறுத்துவிடுவார்கள். நான் கொண்டு செல்லும் தேங்காய் மாம்பழங்களை வாங்குவதற்கே தயங்குவாங்க. நான்தான் சமாதானப்படுத்திக் கொடுத்துவிட்டு வருவேன்.

இப்படியே ஒரு வருடங்கள் தொடர்ந்த அனிதாவுடன் என் நட்பு திடீரென்று ஒருநாள் நின்றுபோனது.

காரணம் அவள் குடும்பம் இரவோடிரவாக மண்டபம் முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டுவிட்டனர் என்றார்கள்.

ஏன் என்றால் யாருமே எந்த பதிலும் சொல்லவில்லை.

நான் அழுதுகொண்டே இருந்தேன். என் வீட்டில் எல்லோரும் சமாதானப் படுத்தினார்கள். ஆனால் அப்பாவிடம் மட்டும் ஏதோ ரகசியமாக பேசிக் கொண்டனர்.

அப்பாவும் என் தலை வருடி அனிதாவை மறந்துவிடுடா! அவள் இனித் திரும்ப இங்கே வரமாட்டாள். இலங்கைக்கே சென்றுவிடுவாளாம் நான் விசாரித்துவிட்டேன் என்றார்.

ஆனால் என்னால் ஜீரணிக்கமுடியவில்லை. நேற்று என்னோடு விளையாடும்பொழுது கூறியிருக்கலாமே அவள் என்று ஆதங்கம் கோபம்.

அவ்வளவு ஆழ்ந்த நட்பில்லையா? என்னிடம் சொல்லிவிட்டுச் சென்றிருக்கலாமே! என்றே மனதுக்குள் சதா ஒரு கேள்வி எழுந்துகொண்டே இருக்கும்.

எப்பொழுதும்போல பள்ளிக்குச் சென்று வருவேன். விளையாடுவேன். ஆனால் எதையோ இழந்ததுபோலிருக்கும்.

என் அனிதா திரும்ப வருவாளா! என்று ஏங்குவேன்.

அண்ணன்களோடு கடற்கரைக்கு விளையாடச் செல்லும் பொழுதெல்லாம் அந்த முகாமையே பார்ப்பேன். அங்கே இருப்பவர்கள் சகஜமாக நடமாடிக்கொண்டிருப்பார்கள். அனிதாவின் குடும்பத்தைப் பற்றிக் கவலையேதும் அடைந்ததுபோலிருக்காது. ஒரு சில ஆண்களிடம் என் அண்ணன் கேட்டார். அந்தப் பெண் குடும்பம் ஏன் திடீரென்று சென்றுவிட்டார்கள் என்று. அவர்களும் மழுப்பலாக பதில் சொன்னார்கள்.

திடீரென்று காவல்துறை வண்டிகள் வருவதும் போவதும் வாடிக்கையானது. அந்த முகாமிற்குப் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது.

நானும் என் தோழியை நினைத்து என்னை இயல்பாக்கிக்கொண்டேன்.

அப்பொழுதுதான் அந்த முகாமைச் சேர்ந்த ஒருவருக்குப் பாம்பு கடித்துவிட்டது என்று என் அப்பாவிடம் நடு இரவில் அழைத்து வந்தனர்.

அப்பா எல்லா மருந்துகளும் கொடுத்து அவரைக் காப்பாற்றினாங்க.

விடிய விடிய தூங்காமல் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள் அனைவரும். அப்பொழுது அப்பா கேட்டாங்க என்னவாச்சு அந்த அனிதா என்ற குழந்தையின் குடும்பத்திற்கு. ஏன் திடீரென்று மண்டபம் முகாமிற்கு போனார்களென்று. நான் தூங்குவதாக நினைத்து அப்பா

கேட்கிறார்கள். அவர்களின் பதிலை நான் கேட்டுக் கொண்டுப் படுத்திருக்கிறேன்.

அந்தப் பொண்ணுங்களா ஐயா!

அந்தப் பெண் விறகு எடுக்க குப்பத்துப் பக்கம் போயிருக்கு. அங்கே அந்தக் குப்பத்து பையன் ஒருத்தன் குடித்துவிட்டு அந்தப் பெண்ணை சவுக்குத் தோப்பில் வைத்து நாசம் பண்ணிவிட்டான். அதனால்தான் போலீஸ் வந்து அவர்களை அழைத்துச் சென்றுவிட்டனர். அந்தப் பெண்ணை பாண்டிச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்த்து வைத்தியம் பார்த்து அழைத்துக்கொண்டு சென்றுவிட்டார்கள். மண்டபம் முகாமில் வைத்திருந்து பிறகு இலங்கைக்கே போனாலும் போய்டுவாங்க. அந்தப் பெண்ணோட அண்ணன் அங்கேதானே இருக்கான். இல்லைன்னா கனடா போய்டுவாங்க என்றார்.

அனைத்தையும் கேட்ட எனக்கு அழுகை வெடித்துக்கொண்டு வருகிறது. அமைதியே உருவான என் அனிதாவிற்கா இந்த நிலை. அவள் பிறந்த ஊரின் கொடுமைகள் தாங்காமல் அடைக்கலம் தேடி வந்த இடத்திலும் காமவெறிபிடித்த மிருகங்கள் உலாவிக்கொண்டிருப்பதை உணராமல் போனாளே.

தமிழன் தடுக்கிவிழுந்தால் தரித்திரம் தலைக்கு முன்னே விழும் என்று அவள் கூறுவாள். இலங்கை மக்கள் அப்படிக் கூறுவார்கள் என்பாள். வயதுக்கு மீறிப் பேசுகிறாளே என்று நினைத்து வியந்து பார்ப்பேன். ஆனால் அவள் அனுபவங்களையேக் கூறியிருக்கிறாள்.

எந்த அசம்பாவிதம் நடக்கக்கூடாது என்று பயந்து அகதிகளாக அயல்நாட்டிற்கு வந்தார்களோ அதே நிலை இங்கேயும் நடந்தபோது அவள் எப்படிக் கதறித் துடித்திருப்பாள். ஆண்துணையற்ற அவள் குடும்பம் என்னபாடு பட்டிருக்கும். என் அனிதாவைக் காப்பாற்ற இயலாத தோழியாகிவிட்டேனே நான்.

இவளைப் போன்று எத்தனை அனிதாக்கள் அந்நிய மண்ணிலும் சிதைக்கப்பட்டிருப்பார்கள். ஐயோ கடவுள் என்று ஒருவர் இல்லையா?

வாழ்க்கையில் முதல் முறையாக என்னவென்றே தெரியாதக் குழந்தையான நானும் அழுகின்றேன்.

அன்று எனக்கும் இதையெல்லாம் புரிந்துகொள்ளும் வயதில்லை.

காலங்கள் செல்லச் செல்ல என் ஒவ்வொரு பருவத்தின் வளர்ச்சியிலும் என் அனிதாவின் வலிகளைப் புரிந்துகொள்கிறேன்.

25 வருடங்கள் கடந்துவிட்டன. எங்கள் வீட்டிலும் எவ்வளவோ மாற்றங்கள். என் திருமணம். அப்பா அம்மா தம்பி மரணம் என்று எல்லா வலிகளையும் சுமந்துகொண்டேன்.

என் அனிதா இன்று இருக்கிறாளா! ஏனென்றால் என் அனிதா ஒரு அனிச்சமலர்.

அப்படியே உயிர்வாழ்ந்திருந்தாலும், இலங்கையிலா கனடாவிலா எங்கிருக்கிறாள். எப்படி இருக்கிறாள் என்று எனக்குத் தெரியாது.

ஆனால் நான் என் சொந்த ஊர் செல்லும்பொழுதெல்லாம் கடற்கரைக்குச் செல்வேன். ஒவ்வொரு முறையும் அந்த அகதிகள் முகாமிருந்த இடத்திலும் தோப்புகளிலும் கடற்கரையின் காற்றிலும் என் அனிதாவைத் தேடிக்கொண்டுதானிருக்கிறேன்.

அவளோடான என் நட்பு அந்தக் காற்றில் கலந்திருக்கிறது...

# தலைமுறை

● ப. தனஞ்ஜெயன்



விடியக் காலை 4 மணிக்கு ஆறுமுகம் அவசரமாக எழுந்தான்.அவனுடைய தலையணை முழுவதும் வெறும் பழைய துணிகளால் நிரப்பப்பட்டு இருந்தது.அருகில் கிடந்த கோரைப்பாய் கிழிந்துபோய் இருந்தது. அவன் பாயை மடித்து வைத்துவிட்டு, தலையணைக்குள் இருந்த ஒரு முக்கால் அடி அகலம் உள்ள துணியை இழுத்தான். அதைக்கோவணமாகக் கட்டிக்கொண்டு வெளியே வந்தான். பனிக்காலம் என்பதால் உடல் சற்று உதறியது,உடனே தன்னுடைய சோமத்தைப் போர்வையாகத் தலையில் முக்காடு போட்டுக்கொண்டு வீட்டு எதிரில் உள்ள சாக்கடைக்குச் சென்றான்.அங்கு ஒரு செங்கல் தேய்ந்த நிலையிலிருந்தன.செங்கல்லைக் கல்லில் தேய்த்து பல்லை விளக்கிவிட்டு உள்ளே சென்றான். அடுப்பங்கரையில் உள்ள பழைய நீராகாரத்தை எடுத்து ஒரு சொம்பில் ஊற்றிக் குடித்துவிட்டு தரையில் உட்கார்ந்து தேங்காய் எண்ணெய் தலையில் தடவியபடியே கை மற்றும் கால் தடவிக் கொண்டே ே ராசாம்பா எழுந்திரு தேயு என்றான்.

அவனுடைய மனைவி ராசாம்பாள் எழுந்தாள்.யுயோவ் எனக்குக் கொஞ்சம் வெற்றிலை கொடு யாயு என்றாள்.நேற்று இரண்டு ரூபாய்க்குத்தான் வெற்றிலை வாங்கினேன். ஜேந்தா கொஞ்சம் போட்டுக்கோயு என்று கொடுத்தான். யேோவ் உனக்கு மட்டும் மனசு வராதேயு என்று வெற்றிலையை வாங்கி போட்டுக்கொண்டாள். தன்னுடைய கிழிந்த பாயில் ஒரு சின்ன கோரையை உடைத்து பல்லைக் குத்திவிட்டு,அந்த குச்சியை தன் மனைவியிடம் ஜேந்தா நீயும் குத்திக்கோயு என்றான் ஆறுமுகம்.

“யோவ் நீ கிளம்பு,ஊர் தெருவ போ யா,நான் கான்ல தண்ணீர் வந்தால் புடிச்சி வச்சிட்டு வரன்” என்றாள்.

“சரி நான் போகிறேன், குனிந்து குனிந்து பெருக்கி இடுப்புவலிக்கிறது,நீசீக்கிரம்வா” என்றுசொல்லிக்கொண்டே நடந்தான்.இதுவரை சுதந்திரமான காற்றைச் சுவாசித்தவன் சற்று பயந்து நடந்தான். அதிகாலை 4.30 ஐ தொட்டது மணி.

தன்னுடைய சோமத்தைச் சுருட்டி மாட்டுக் கொட்டகையில் சொருகினான். 80 வயதிலும் அசராத உடல் வலிமை. இவன் மாட்டுச்சாணத்தை அள்ளும் போதே ராசாம்பாள் வந்தாள். ேபெருக்கு யா, சின்னமா

வந்திட போறாங்கயு நான் போயி வாசலில் தண்ணீர் தெளிக்கிறேன்யு எனப் பயந்து ஓடினாள்.

6.30 க்கு கதவைத் திறந்தாள் சின்னம்மா.பெருக்கிக் கொண்டிருந்த ராசாம்பாளை பார்த்து, "ராசாம்பா இங்க வா கொஞ்சம் தைலந்தழை பறித்துவா" என்றாள்.

பறித்துவந்து, அடுப்பை மூட்டி தைலந்தழையை போட்டு சுடுதண்ணீர் சுடவைத்தாள் ராசாம்பாள்.

மாட்டு கொட்டகை வேலையை முடித்து விட்டு ஆறுமுகம், ராசாம்பாள் இருக்கும் இடத்தை நோக்கிவந்தான்.அடுப்பருகே குளிர்காய்ந்தான்.அந்த நேரத்தில் பெரிய ஐயா எழுந்து வந்து, ஏன்டா மூக்கா நீ நிலத்திற்குப் போடா,நான் வரேன்யு என்றார்.

"சரிங்க ஐயா" என்றான் ஆறுமுகம்.

இரண்டு தனி டம்ளரை மாட்டுக் கொட்டகையிலிருந்து எடுத்து வந்து, சேின்னமா காப்பியு என்றான் ஆறுமுகம்.சின்னமா திண்ணியாகக் காபியை ஊற்றினாள்.தினமும் தண்ணீர் விட்ட காபி தான்.ராசாம்பாளும் ஆறுமுகமும் அந்த காபியைப் பேசிக்கொண்டே குடித்தார்கள்.

"சரி ராசு நீ வேலையை முடித்துக்கொண்டு கொல்லிக்கு வா,நான் போகிறேன்". மாட்டுவண்டியைப் பூட்டிக்கொண்டு கிளம்பினான்.மாட்டுச் சாணத்தை வண்டியிலிருந்து இறக்கிவிட்டு வண்டிமாடுகளை மேயவிட்டான்.நிலத்திற்கு சென்று மடையை மாறினான்.

"மூக்கா,டேய் மூக்கா" என்று தூரத்திலிருந்து ஒரு குரல் கேட்டது.

திரும்பிய ஆறுமுகம்,"சின்னையா அங்கே இருங்கள்,நான் வரேன்"என்று தன் முதலாளியை நடக்கவிடாமல் ஓடிவந்து," என்னங்க ஐயா" என்றான்.

"இந்தா மூக்கா சாப்பிடு" என்று கஞ்சியைக் கொடுத்தார் பெரிய ஐயாவின் மகன் சின்னவர்.

"டேய்மூக்காஅங்கநாலுஆடுகதிரமேய்துடா,அதைப்பட்டிக்குஓட்டிம்போடா,போய்விட்டு வந்து சாப்பிடு,இத இங்க கொட்டாயிலே வைக்கிறேன்."

"சரிங்க சாமி"

"டேய் அப்படியே கிழக்கு பக்கம் போவாதடா"

"சரிங்க சாமி"

"சாய்ங்காலுமா வச்சுக்கடா" என்றார் சின்னவர்.

"சரிங்க"என சொல்லிக்கொண்டே,ஆறுமுகம் அந்த நான்கு ஆடுகளையையும் ஊருக்குக் கிழக்கில் உள்ள பட்டியில் சேர்த்து விட்டான்.ஒரு ஆட்டுக்கு ஐந்து ரூபாயென்று,இருபது ரூபாய் வாங்கிக் கொண்டு,அப்படியே கொஞ்சம் தூரத்தில் கிழக்கில் உள்ள சாரயக்கடைக்கு சென்று, நிலத்திற்கு வேகமாக நடந்தான்.

மணி 11 ஐ தாண்டும் வேளையில் வேகமா கொல்லிக்கு நடந்தவன் கண்ணில் பட்ட மாட்டுக் கொட்டகையைத் தாண்டிசெல்ல முடியவில்லை அவனால்,கொட்டகை உள்ள சென்று மாடுகளுக்குத் தண்ணீர் காட்டி வைக்கோலைக் கொஞ்சம் போட்டுவிட்டுத் திரும்பினவனைப் பார்த்ததாள் சின்னமா.யுஏன்டா மூக்கா ரைஸ் மில்லுக்கு போவனும், போய் சீக்கிரம் வாடா ே என்றாள். ஜேில்லைங்க சின்னமா,மடைய இரண்டு வாய்க்காலில் போட்டு வந்தேன்,சீக்கிரம் போவனும் சின்னமா, சாய்காலும் வந்து அரைத்து கொடுக்கிறேன்யு எனச் சொல்லிவிட்டு வேகமாக நடந்தான்.

அதற்குள் வீட்டு வேலையை முடித்துக்கொண்டு, சின்னமா கொடுத்த பழைய சோற்றையெல்லாம் எடுத்துக் கொண்டு ராசாம்பாளும் கொல்லிக்கு போனாள்.அங்கிருந்த மாமரத்துக்கீழே உட்கார்ந்து வெற்றிலை போட்டாள்.வரப்பில் இறங்கி வேகமாக நடந்தவன், மடை யை வேற வாய்க்காலுக்குப் போட்டுவிட்டு மரத்தடிக்கு வந்தான் ஆறுமுகம்.யுராசாம்பா வாடிச் சாப்பிடலாம்மே என்றான்.

"என்னாயா காலங்காத்தலேயே கெழக்க போயி வந்தாச்சா."

"இல்ல ராசு இருபது ரூவாய்க்குதான் குத்திகின".

"சரி யா "

"எனக்குச் சின்னமா கொஞ்சம் சாப்பாடு கொடுத்தாங்க சாப்பிடுயா,அதுல நேற்று வைத்த மீன்குழம்பு கொஞ்சம் வத்த இருக்கிறது" என்றாள்.

"சின்னவர் கொஞ்சம் மோர் சோறு கொடுத்தார் அதையும் எடு ராசு" என்றான் ஆறுமுகம்.

"தினந்தோறும் காலை சாப்பாடு பதினோன்னு, பன்னென்டு ஆயிபோவதுயா" என பேசிக்கொண்டே சாப்பிட்டு முடித்த ஆறுமுகம், "ஏன்டி ராசு, நீ சாட்டுட்டு கொஞ்சம் இந்த நெழல்ல படுத்து கிட, நான் போயி அந்த மடையை மாறிப்போட்டு வந்துடறேன்."என்றான்.

"எங்கயா படுக்கறது, மணி இரண்டுக்கெல்லாம் பால்காரரர் வந்துடுவாரு.சுசேட்டுல அரிசி கொஞ்சம் போடுகிறார்கள்,போயி அரிசி வாங்கி வச்சிட்டு மாட்டு கொட்டாயிக்கு போகிறேன்.நீ தண்ணீ கட்டிவிட்டு வாயா" என்றாள் ராசாம்பாள்.

"சரி ராசு"

வேகமாக மடையை நோக்கி நடந்தான் ஆறுமுகம்.

இப்படியே இரண்டு வேளை சாப்பாட்டோடு யோகி போன்ற வாழ்க்கையாக நகர்ந்தது அவர்களின் முதுமைக்காலம். இரண்டு மணிக்கல்லாம் பால்காரன்,யு ராசாம்பா கன்று குட்டிய அவிழ்த்து விடுயுஎன்றான்.

ராசாம்பாள், கொஞ்சம் நேரம் கறவைக்குப் பசுமாட்டு முன்னாடியே கன்று குட்டிய பிடித்துக்கொண்டே நின்றாள். பால் அளந்து கொடுத்துட்டு,யுஇந்த சொம்பில் கொஞ்சம் ஊத்துங்க பால்காரயு என்றாள். சொம்பை எடுத்துகினு,யுசின்னம்மா இந்தாங்கபால்யு என்றாள்.

"ஏன்டி ராசாம்பா மாட்டுக் கொட்டாயில் சாணியை வாறிட்டு,அப்படியே மாட்டுக்குத் தவுட்டை வச்சுட்டு வா.கொஞ்சம் நெல்லி குத்த ரைஸ் மில்லுக்கு போவனும்,எங்க மூக்கன் வரலையா".

"மல்லாட்ட கொல்லிக்கு தண்ணீர் பாயுது சின்னமா,இன்னும் ஒரு மணி நேரத்தில் வந்துரும்னு" சொல்லிவிட்டு மாட்டுக் கொட்டகை வேலைகள் பார்க்க ஆரம்பித்தாள் ராசாம்பாள். முதுமையின் சுருக்கங்களில் அவள் உழைப்பும் தேய்ந்து போனது ஏக்கங்களாய்."என்ன ராசு முடிச்சுட்டியா" என்று கேட்டுக்கொண்டே வண்டிமாடுகளோடு வந்து சேர்ந்தான் ஆறுமுகம்.இருவரும் வேலையை முடித்து ரைஸ்மில்லுக்கு புறப்பட்டனர்.

கொஞ்சம் நெல்லைக் குத்தி எடுத்து ஆறுமுகம் அரிசியையும், ராசாம்பாள் தவிட்டையும் தலையில் தூக்கி வந்தார்கள். சேின்னம்மா.. இந்தாங்கயு என்றான் ஆறுமுகம்.யுஇந்தா மூக்கா இப்பத்தான் பெரியவர் நூறு ரூபா கொடுக்கசொன்னாரு,யுஎனக் கொடுத்தாள் சின்னமா.யுதினம் நூறு ரூபாய் பத்தமாட்டுது சின்னமா,ஒரு ஐம்பது சேர்த்து நூற்று ஐம்பதா கொடுக்கச்

சொல்லுங்கள்யு என்றான் ஆறுமுகம்.யுசரி, சரி நீ பெரியவருக்கிட்ட கேளுடா இதெல்லாம்டே என்றாள்.

“ராசாம்பா உனக்கு” என்று பத்து ரூபாய் கொடுத்தாள் சின்னமா.ரைஸ் மில்லு,கடைக்குப் போய் விட்டுவந்தால், அப்பத்தான் அஞ்சோ பத்தோ சின்னம்மா கொடுப்பாங்கா.அது ராசு மனசுக்குச் சந்தோஷமா இருக்கும்.”நாளைக்கு இந்த அரிசியைக் கொஞ்சம் நோம்பனும் ராசாம்பாள்” என்றாள் சின்னமா.

“சரிங்க” என்று இருவரும் புறப்பட்டனர்.

ஆறுமுகம் கெழக்க போய், வீடு வந்து சேர்ந்தான். ஓேந்தா ராசாம்பா, ஐந்து ரூபாய்க்கு வெற்றிலை,பத்து ரூபாய்க்கு போண்டா வாங்கி வந்தேன் இந்தாயு என்றான். இரண்டு பேரும் சாப்பிட்டு முடித்து வெற்றிலையை மென்றார்கள்.

“பெரியவர் சொன்னார். நாளைக்கு அறுவடையாம்“என்றான் ஆறுமுகம்,

“சரியா படு, நாளைக்கு பார்த்துக்கொள்ளலாம் “ என்றாள் ராசாம்பாள். இரவு மெல்ல அவர்களை உறக்கத்தின் களைப்பில் தள்ளியது.

நெல் அறுவடை முடிந்து நெல்லை லோடு பிடித்தனர். ஓேருங்க சாமியு என ஒரு முறத்தில் சாமி நெல்லி அள்ளினான் ஆறுமுகம். பெரியவர் அப்படியே பார்த்தார்

“இந்தாடா மூக்கா,இந்த போகத்து நெல்லி நாலு மூட்டைனு” அளந்து போட்டார்.

“சாமி, ஒரு மூட்டை சேர்த்து கொடுங்கள் ரொம்ப கஷ்டமா இருக்கிறது” என்றான் ஆறுமுகம்.நாங்கள் இரண்டு பேரும் ராப்பகலா இங்கேயே கடக்கிறோம்.ஒரு மூட்டை சேர்த்து கொடுங்க” என்றான்.

ஓேடுத்த முறை பாப்பும்ன்டாயு என்றார் பெரியவர்.

போகத்துக்குப் பத்து மரக்கா நெல்லுல இருந்து, நான்கு மூட்டை வாங்க இத்தனை சுருக்கங்களையும் விழிங்கிவிட்டது காலங்கள்.


“டேய் மூக்கா, நாளைக்கு மூத்தவன் பெண்ணும், அவ பசங்களும் ஊருக்கு வராங்க,பத்து இளநீ அறுத்து வை”என்றார் பெரியவர்.”சரிங்க” என்று சொல்லிக்கொண்டே நான்கு நெல்லி மூட்டையைச் சிப்பங்களாகக் கட்டி எடுத்துப் போனான் ஆறுமுகம்.

பொழுது விடிந்து மாட்டுக் கொட்டகை வேலையை முடிச்சு கை கழுவும் போது, கார் சத்தம் கேட்டு ஆறுமுகமும் ராசாம்பாளும் ஆவலாகப் பார்த்தனர்.

சின்ன சின்னமாவும், பசங்களும் காரிலிருந்து இறங்கி வந்தார்கள்.போன லீவுக்கு பார்த்தது,”எப்படி மா பாப்பா இருக்க” என்றனர் இருவரும், நான் நல்லா இருக்கன் மூக்கா என்றாள் சின்ன சின்னம்மா.

சின்ன சின்னம்மாவின் எட்டுவயது மகன்,யு டேய் மூக்கா,வாடா என்ன கொல்லிக்கு அழைத்துக்கொண்டு போயு என்றான்.

ஆறுமுகம் மிகுந்த சந்தோஷத்தில்,யு ரசா எங்க அப்பனுக்கு அப்புறம் நான் இங்க இரண்டாவது தலைமுறை, இந்த சின்ன முதலாளியுடைய எட்டு வயது குரல், என்பது வயது சுருக்கங்களை வாடா அழைக்கும் குரல்,எனக்கு நாலாவது தலைமுறையு எனக் கண்ணீர் வடியச் சொல்லி நின்றான்.



# இனி

● ஸ்ரீரஞ்சனி

மழை இன்னும் விட்டபாடில்லை.

காரைவிட்டிறங்கியவனுக்குக் கண் கலங்கியது. இப்படியான ஒரு மழை நாளில்தான் அந்தச் சம்பவம் நடந்தது. ஆதிக்கு மழையில் நனைவது என்றால் மிகவும் பிடிக்கும். அன்று கொட்டும் மழையில் தெப்பமாக நனைந்தபடி, ஆதியும் அவனும் வெகு மகிழ்வாக ஆடிக்கொண்டிருந்தனர்.

"ஏ, உங்களுக்குக் கொஞ்சமெண்டாலும் அறிவிருக்கே? பிள்ளையை மழைக்கே வைச்சுக்கொண்டு ஆடுறியள், அவனுக்குக் காய்ச்சல் வரப்போகுது."

ஆங்கில வகுப்பு முடிந்து அப்போதுதான் வீட்டுக்கு வந்திருந்த கலா நெருமியபடி, ஆதியைத் தூக்கிக்கொண்டு போனபோது, ஆதியின் அலறல் உச்சஸ்தாயில் ஒலித்தது.

"சீ, பிள்ளைக்குப் போடுறதுக்கு ஓடிக்கொலோன்கூட இல்லை! போய்க் கெதியா ஒண்டு வாங்கிக்கொண்டு வாங்கோ பாப்பம்!"

வீட்டுக்குள் அடியெடுத்து வைத்தவனிடம், மாற்றுடைகளைக் கைகளில் திணித்தபடி இரைந்தாள்.

அவன் எதுவும் பேசாமல் மீளவும் வெளியேறினான். அவன் உடை மாற்றியபோது சொட்டிய ஈரத்தைப் புறுபுறுத்தபடி அவள் துடைக்கும் சத்தம் அவன் காதுகளை அடைத்தது.

கீரை சமைக்கும்போதோ அல்லது பலாப்பழம் போன்ற பழங்களை வெட்டும்போதோ, ஊரிலை எண்டால் இதுகளை ஆடு, மாடுகளுக்குப் போடலாம், இங்கை எல்லாம் வீணாய்ப்போகுது, என அலுத்துக் கொள்வாள். ஒரு தும்புத்தடிக்கு இவ்வளவு காசா, இதிலை எத்தினை பேர் அங்கை சாப்பிடலாமென மனம் குமுறுவாள். நாட்டைவிட்டு வந்த கவலை

மட்டுமன்றி, கஷ்டப்பட்டு வளர்ந்ததன் ஆயாசமும்தான் இதென அவன் அவற்றை விளங்கிக்கொண்டான். அதிலிருக்கும் நியாயத்தையும் உணர்ந்துகொண்டான். அப்படியே அவள் கேட்ட ஓடிக்கொலோனை வாங்கிக்கொடுப்பதிலும் அவனுக்குப் பிரச்சினையிருக்கவில்லை. ஆனால் அகம்பாவத்துடன் அதைச் சொன்னதுதான் அவனின் மனதை இடைஞ்சல்படுத்தியது. திரும்பத்திரும்ப அவள் தன்னை மரியாதையில்லாமல் நடத்துறாள் என்பதில் அவனுக்குக் கவலையாகவும் அதை மேவிய ஆத்திரமாகவும் இருந்தது.

சொப்பேர்ஸ் றக் மார்ட்டில் அவள் சொன்ன ஓடிக்கொலோன் இருக்கவில்லை. அவன் வெறுங்கையுடன் திரும்பினான்.

"அங்கை இல்லையெண்டால் இன்னொரு இடத்துக்குப் போயிருக்கலாம்தானே!" எரிந்துவிழுந்தாள் அவள்.

"நல்ல வடிவாய் துடைச்சுப் போட்டுக் கெயர் டையரைப் பிடிச்சால் காய்ஞ்சிடும்தானே! வேணுமெண்டால் கொஞ்சம் சென்றும் போடும், ஓடிக்கொலோன் செய்யிற வேலையை ஞ்" அவன் சொல்லிமுடிப்பதற்கு முன் அவள் மீளவும் சன்னதமாடினாள்.

அவன் ரீவியை ஓன் பண்ணிவிட்டு சோபாவில் அமர்ந்துகொண்டான்.

"நான் சொல்ற எதைத்தான் நீங்க செய்யிறியள்? ஒரு குழந்தைப் பிள்ளையெண்டும் பாக்காமல் உங்கடை சந்தோஷத்துக்காண்டி நீங்க போடுற.."

அவனுக்கு மிகுந்த கோபமும் எரிச்சலும் வந்தது. "வாய்க்கு வந்தபடி கதைச்சீரெண்டால்.." சுட்டுவிரலை ஆட்டியபடி அவளுக்கருகில் போனான்.

"எங்கை அடி பாப்பம்! ஒரு மிருகத்திட்டையிருந்து தப்பி இன்னொண்டிட்டை வந்திருக்கிறன்" அவள் பெரிதாய்க் கத்தினாள்.

"போடி", என கையால் சைகைசெய்தபடி ரீவிக்கு முன்னால் நின்றவளைத் தள்ளிப்போட்டு, அவளின் கையிலிருந்த ரெமோட்டை அவன் பறிக்கமுயன்றான்.

அப்படிப் பறிக்க முயன்றபோது அந்த ரெமோட் பின்பக்கமாக இழுபட்டு அவளின் உதட்டைக் காயப்படுத்தியது.

"அசல் மிருகம். உங்களையெல்லாம் உள்ளுக்கை போடோணும்!"

"என்ரை நிம்மதியைக் கெடுக்கிறதுக்காண்டித்தானேடி வந்திருக்கிறாய்! தாராளமாகச் செய், ஏன் பாத்துக்கொண்டு நிக்கிறாய்?.." அவன் தள்ளிய வேகத்தில் அவள் கீழே விழுந்தாள்.

மிரண்டுபோன ஆதி மீளவும் அலற ஆரம்பித்தான். அவள் கதவைத் திறந்துகொண்டு வெளியே போனாள்.

சிறிது நேரத்தில் அவளைத் தாக்கிய குற்றத்துக்காக அவனைக் கைதுசெய்வதாக வீட்டில் பொலிஸ் வந்துநின்றது.

மூன்று மாதங்களின் பின் மேற்பார்வை செய்யப்படும் சந்திப்பு ஒன்றில் ஆதியைச் சந்திப்பதற்காக அவன் இன்று வந்திருக்கிறான். எதிர்பாராமல் வந்து கொட்டிய மழை அவனைச் சுணங்கச் செய்திருந்ததுடன் கொஞ்சம் நனைத்துமிருந்தது. காற்றின் வேகத்துக்கு ஈடுகொடுக்கமுடியாமல் அவன் பிடித்திருந்த குடை அங்குமிங்கும் ஆடியது. கைக்கடிகாரத்தைப் பார்த்தான். அது நான்கு மணி எனச் சொல்லி ஓய்ந்தது.

வேகமாக நடந்துசென்ற அவன் அந்தக் கட்டிடத்தின் அழைப்பு மணியை அவசரமாக

அழுத்தினான். ஆதியுடனான ஒரு நிமிடம்கூட வீணாகிவிடக்கூடாதே என அவனின் மனம் பதகளித்தது.

அவனின் அழைப்புக்குப் பதிலளித்த பெண்ணிடம் தன் பெயரைச் சொன்னான். ஆதியை அழைத்து வருவதாகவும் உள்ளே வந்து குறித்ததொரு அறையில் காவலிருக்கும்படியும் கூறி அவள் அப்பால் சென்றாள்.

அவள் போட்டிருந்த குதிக்கால் உயர்ந்த செருப்பு தரையில் ஒலிப்பிய ஒலியைத் தவிர எந்தச் சத்தமும் அந்த இடத்தில் கேட்கவில்லை. காத்திருந்த அந்தக் கணங்கள் அவனுக்கு யுகங்களாகத் தெரிந்தன.

அந்த அறையில் வேறு சில ஆண்களும் அவனுடன் இருந்தனர். அவர்களின் கண்களிலும் கலக்கம் தெரிவதுபோல அவனுக்குத் தோன்றியது. ஒருவர் அவரது சாவிகளுடன் விளையாடிக் கொண்டிருந்தார். மற்றவர் கையில்வைத்திருந்த விளையாட்டுக் காரை வருடிக்கொடுத்தபடி வாசலையே பார்த்துக்கொண்டிருந்தார். இன்னொருவர் போனில் மும்மரமாக இருந்தார். வேறொருவர் குறுக்கும்மறுக்குமாக நடந்துகொண்டிருந்தார்.

பத்து நிமிடங்களின் பின் திரும்பி வந்த அந்தப் பெண், ஆதி வரமாட்டேன் என அழுவதாகவும் அவன் ஆதியை இன்று பார்க்கமுடியாதென்றும் கூறி, 'சொறி' சொன்னாள். மனம் நிறைந்த எதிர்பார்ப்புடன் ஆதியைப் பார்க்கவந்திருந்த அவனுக்கு அந்தப் பதில் மிகுந்த ஏமாற்றத்தைக் கொடுத்தது. என்ன சொல்வதெனப் புரியாமல் நின்றவனிடம், அடுத்தமுறை பிள்ளையைத் தயார்படுத்திக்கொண்டு வரும்படி அம்மாட்டைச் சொல்லியிருக்கிறம். திரும்பவும் வாற ஞாயிறு இதே நேரம் வாங்கோ என ஆங்கிலத்தில் சொன்னவள் எந்தவித உணர்ச்சிகளையும் வெளிக்காட்டாமல் அங்கிருந்து அகன்றாள்.

"மூண்டு மாதமாச் சந்தியாமலிருந்தவனை நேரில காட்டாமல் சும்மா வா எண்டு கூப்பிட்டால், ரண்டு வயதும் நிரம்பாத அந்தக் குழந்தை என்னெண்டு வருவான்?" தனக்குத் தானே சொன்னவன் காருக்குள் ஏறிக் கதவை அடித்துச் சாத்தினான்.

எந்தப் பயனுமற்ற அந்த ஐம்பது நிமிடப் பிரயாணத்தை மீளவும் வீட்டை நோக்கிச் செய்யவேண்டுமே என்ற எண்ணம் அவனுக்குள் மிகுந்த அலுப்பை உருவாக்கியது. பக்கத்திலிருந்த 'பார்'க்குள் காரைத் திருப்பினான்.

கனடாவுக்கு வந்து ஐந்து வருடங்கள் ஆகியிருந்தன. வந்த கடன் அடைத்து, தங்கைச்சிக்கும் திருமணம் செய்துகொடுத்தபின் ஆயாசமாக மூச்செடுத்த காலம் அது.

"முப்பது தாண்டியிட்டுது, வயசானாப்போலை பிள்ளைப் பெத்தால் பிறகு பிள்ளையளோடை ஓடிவிளையாடுறதுக்கு உடலிலை தெம்பிராது தம்பி," அம்மா ஓயாமல் சொல்லிக்கொண்டிருந்தா.

அந்த வருடக் கோடை விடுமுறைக்கு ஊருக்குப் போனபோது, அவளின் படத்தைக் காட்டி, "இந்தப் பொம்பிளைப் பிள்ளையை எனக்கு நல்லாய்ப் பிடிச்சிருக்குத் தம்பி. வன்னியிலை நடந்த பிரச்சினைக்கே அம்பிட்டு தாய் செத்துப்போச்சாம். பெரிய பாவம். பதினாறு வயசிலிருந்தே வீட்டுப் பொறுப்பெல்லாம் அதுதான் பாக்குதாமெண்டு புரோக்கர் சொன்னார். ஞ் பிள்ளை நல்ல வடிவெல்லே!" மறுப்புச் சொல்லமுடியாத வகையில் கலியாணத்துக்கு அச்சாரமிட்டா அம்மா.

"அம்மா, இப்ப யார் பாவமெண்டு உங்களைக் கேட்கோணும் ஞ் ஆனா அதுக்குத்தான் நீங்க உசிரோடை இல்லையே!" குடி தலைக்கேற மனசு மறுகியது.

ஆதியைப் பார்க்கவென அடுத்த ஞாயிற்றுக்கிழமை அவன் வெளிக்கிட்டபோது, ஆதிக்கு

பிடித்த சொக்களேற் கோடேட் ஸ்ரொபெரிகளையும், சொக்களேற் மில்க்கையும் மறக்காமல் வாங்கிக்கொண்டான். இந்த முறை அவனைப் பார்க்கக் கிடைக்கவேண்டுமென உலகத்திலுள்ள தெய்வங்களை எல்லாம் நினைத்து அவனின் மனம் மன்றாடியது. அடுக்கடுக்காகப் பலவகையான நேர்த்திகளையும் அந்தந்தத் தெய்வங்களுக்கு நெக்குருகச் சொல்லிக்கொண்டான்.

இருபது நிமிடம் முன்பாகவே அங்கே போய்விட்டான். காத்திருப்பு அறையில் அவன் உட்கார்ந்திருந்தபோது அவனின் மனம் இருப்புக்கொள்ளாமல் தவித்தது. முடிவில் அழுதபடி திமிறிக்கொண்டிருந்த ஆதியுடன் அவர்களை மேற்பார்வை செய்யவென நியமிக்கப்பட்டிருந்த பெண்ணான திரேசா வந்தாள்.

வந்தவழியால் மீளவும் ஓடிச்செல்ல முயன்ற ஆதியை அங்கு நிறுத்துவதற்கு திரேசா மிகப் பெரிய பிரயத்தனம் செய்யவேண்டியிருந்தது. அவனருகே ஆதியைக் கொண்டுவருவதற்கு அந்தச் சொக்களேற் கோடேட் ஸ்ரொபெரிகளிடமோ அல்லது சொக்களேற் மில்க்கிடமோ எந்தவிதமான மந்திரசக்தியும் இருக்கவில்லை. அங்கிருந்த வெவ்வேறு வகையான விளையாட்டுப் பொருள்களை ஒவ்வொன்றாக எடுத்து அவன் ஆதிக்கு விளையாட்டுக்காட்டினான். இருந்தும், அவனுக்குக் கிட்ட வரமாட்டேன் என ஆதி அடம்பிடித்தான்.

திரேசா அவர்களை நோட்டமிட்டபடி அவளின் கொப்பியில் ஏதோ எழுதிக்கொண்டே இருந்தாள். அவனுக்கு மிகச் சிரமமாக இருந்தது. கண்காணிக்கப்படாதிருந்தால், பலவந்தமாகக் கட்டியணைத்தோ அல்லது வேறு ஏதாவது செய்தோ முயன்றுபார்க்கலாம். இப்ப அவன் ஒன்றைச் செய்யப்போக அது தவறென்று திரேசா நினைத்தால் என்னவாகுமோ என அவனுக்குப் பயமாகவும் குழப்பமாகவும் இருந்தது. ஆதியுடன் அவன் கதைக்கும் ஒவ்வொரு சொல்லையும் அந்தத் தமிழ் மொழிபெயர்ப்பாளர் திரேசாவுக்கு மொழிபெயர்த்தபடி இருந்தார்.

அருகில் வேறு சில சிறுவர்கள் கார் ஓடியும், பந்தடித்தும் வெவ்வேறு விளையாட்டுக்களை அவர்களின் தந்தையருடன் விளையாடிக்கொண்டிருந்தனர். இப்படியே இருபது நிமிடங்கள் கடந்தன. ஆதி அழுதுகொண்டே இருப்பதால் அடுத்த ஞாயிறு மீளவும் முயற்சிக்கும்படி முடிவாகத் திரேசா சொன்னாள். ஆதிக்கென வாங்கிவந்தவற்றை கலாவிடம் கொடுக்கும்படி கேட்டுக்கொண்ட அவன் அங்கிருந்து வேதனையுடன் வெளியேறினான். ஆதியைக் கண்டது, அவனது ஆதங்கத்தை மேலும் கூட்டியிருந்தது. ஆசைதீர ஆதியைக் கட்டியணைக்கவோ, முத்தமிடவோ முடியாததால் அவனின் மனம் முழுவதும் வெறுமை படந்திருந்தது.

வேலையால் வீட்டுக்குச் செல்லும்போது ஓடிவந்து அவனைக் கட்டிக்கொள்ளும் ஆதி இப்படி மாறிப்போனான் என்பதை அவனால் ஜீரணிக்க முடியவில்லை. அவனுடைய கதிரையில் எவரும் இருக்கவிடாமல், “அப்பா, அப்பா” என அது அப்பாவுடையது என மழலை பேசும் ஆதி, அவனது மார்பில் படுத்திருப்பதில் சுகம் காணும் ஆதி ஞ் அந்த ஆதியா இது, அவனுக்கு நெஞ்சடைத்தது.

ஆதி ஸ்ரோபெரியை விரும்பிச்சாப்பிட்டானா, என அவன் தங்கியிருந்த வீட்டுக்காரப் பெண் ஆர்வத்துடன் கேட்டபோது, அவனால் பதில் சொல்லமுடியவில்லை.

அடுத்த வாரம், ஆதியிடம் இருக்கும் அதே போன்ற தீயணைக்கும் வண்டி ஒன்றை வாங்கினான். அது ஓடும்போது உருவாக்கும் ஒலியும் ஒளியும் ஆதியின் கண்களை விரியச்செய்வதுண்டு. அத்துடன் ஆதிக்கு மிகவும் பிடித்த புத்தகம் ஒன்றையும் வாங்கிக்கொண்டான். அதிலுள்ள விலங்குகளை ஒவ்வொன்றாக அழுத்தும்போது அவை வெளியே எட்டிப்பார்த்து அவற்றுக்குரிய சத்தங்களை எழுப்புவதைப் பார்த்து ஆதி பிரமித்துப் போவது அவன் கண்களில் ஓடி மறைந்தது.

அன்று, ஆதி அவன் தீபாவளிக்கு வாங்கிக்கொடுத்திருந்த சிவப்பு நிற ரீசேட் அணிந்திருந்தான்.

அதன் முன்பக்கத்தில் இருந்த அந்தப் பெரியக் கறுப்பு நிறப் பூனைக்குட்டியின் படம் ஆதியை மிகவும் கவர்ந்திருந்தால் அதை ஆதி விரும்பிப் போடுவது வழக்கம்.

"ஹாய் ஆதிக் குட்டி, ரொசி சுகமா இருக்கா?"

அந்தப் பூனைக்குட்டியை வருடியபடி கேட்டவன், மியாயா மியாயா என மெலிதாய் ஒலி எழுப்பினான். ஆதியின் முகத்தில் சிறியதொரு புன்முறுவல் ஏற்பட்டது.

பின் அந்தப் புத்தகத்தை விரித்து அதிலிருந்த பூனையின் படத்தை அவன் அழுத்தியதுபோது, மெல்ல மெல்ல நகர்ந்து ஆதி அவனருகில் வந்தான். பின் பூனையை ஆதியே அழுத்தினான். அப்படி ஒன்றொன்றாக ஆதி அழுத்த அழுத்த அந்தந்த மிருகங்கள் எழுப்பும் ஒலியை அவனும் சேர்ந்து எழுப்பினான்.

பின்னர், "அப்பா அப்பா," எனத் தன் மழலை மொழியால் கூறி அவனை அழுத்தும்படி அந்தப் புத்தகத்தை ஆதி சுட்டிக்காட்டியபோது அவனின் உடல் சில்லென்று குளிர்ந்துபோனது. ஆதி கேட்டபடி அவன் அந்தப் பூனையை அழுத்தியபோது ஆதி வந்து அவனின் மடியில் ஏறிக்கொண்டான். அவனுக்குக் கண் கசிந்தது. அவன் ஆதியை இறுகக் கட்டிக் கொண்டான்.

அதன்பின்பான சந்திப்புக்களின்போது ஆதி மீளவும் அவனுடன் நன்கு ஒட்டிக்கொண்டான். அந்த இரண்டு மணி நேரம் முடிந்துபோகும்போது அவனை விட்டுச்செல்ல மாட்டேன் என ஆதி அழ ஆரம்பித்தான். ஆதியை விட்டுப்பிரிவது அவனுக்கும் மிகுந்த கஷ்டமாக இருந்தது.

ஒவ்வொரு ஞாயிறுக்கிழமையின் விடிவுக்காகவும் அவன் காவல் இருந்தான்.

மேற்பார்வையில்லாத சந்திப்பாக மாற்றி தான் வதியும் வீட்டுக்கு ஆதியைக் கூட்டிச்செல்வதற்கு என்ன செய்யவேண்டுமென அவனின் வக்கீலுடன் அவன் கலந்தாலோசித்தான்.

பிணையில் அவன் விடுபட்ட ஓரிரு நாட்களின்பின் சிறுவர் பாதுகாப்பு நிலையத்திலிருந்து வரும் வழமையான அந்த அழைப்பு அவனுக்கும் வந்திருந்தது. அந்த உரையாடலின் முடிவில், நடந்ததுக்கு அவள் வருந்துவதாகவும், இப்பிடியெல்லாம் பிரிஞ்சிருக்க வேண்டிவருமெண்டு அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை என்றும், தனியவா பிள்ளை வளர்ப்பதை அவளால் கற்பனைசெய்துகூடப் பாக்கமுடியாமலிருக்கிறது என்றும், மீண்டும் சேர்ந்துவாழ அவள் விரும்புவதாகவும் கலா சொன்னதாகக் கூறிய அந்தப் பணியாளர், அவனுடைய திட்டம் என்னவென்று அவனிடம் கேட்டிருந்தார்.

இனியும் அவளுடன் சேர்ந்து வாழமுடியுமா என்பது அவனுக்குத் தெரியவில்லை. அதேநேரத்தில் வாரத்தில் இரண்டு நாளோ, மூன்று நாளோ மட்டும்தான் ஆதி அவனுடன் இருக்கலாம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டால் அதை எப்படித் தாங்கிக்கொள்வதென்பதும் அவனுக்குப் புரியவில்லை. ஆதிக்காகவென அவன் அவளுடன் சேர்ந்து வாழப்போனால், மீண்டும் ஒரு தடவை இப்படி ஒன்று நடந்து - அதற்காக அவள் பொலிசை அழைத்தால், முதல் முறை என்பதால் இப்போது கிடைத்த மன்னிப்பு பிறகு கிடைக்கமாட்டாது என்ற யதார்த்தம் அவனுக்கு மிகுந்த கிலேசத்தைக் கொடுத்தது. மேலும் இப்படி இருவரும் முரண்பட்டிருந்தால் அது ஆதியின் மனதை எவ்வளவு பாதிக்கும் என்பதையும் அவன் கருத்தில் கொள்ளவேண்டியிருந்தது. அத்துடன் பொலிஸ் காவலில் இருந்ததில் அவனுக்கு மிகுந்த அவமானமாகவும் வேதனையாகவும் இருந்தது. அதனால் யோசிக்கவேண்டியிருப்பதாக அந்தப் பணியாளரிடம் அவன் அன்று கூறியிருந்தான்.

ஆனால், இன்னும்தான் அவனால் ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை. அவனுக்குத் தலை கிறுகிறுத்தது.



# காலத்தின் கோலங்கள்

● தமிழ்க்கிழவி

ரெலிபோன் மணி ஒலிக்கிறது. கொழும்பு மாநகரின் வேகத்திற்கு ஈடுகொடுத்துக் காலை உணவையும் மதிய உணவையும் வேளா வேளைக்குத் தயாரித்துக் கணவரையும் குழந்தைகளையும் அவரவர் அலுவல்களுக்கு அனுப்பி, குசினியைத் துப்புரவு செய்து விட்டு ஓய்வு பெற எண்ணிய இந்துவைப் பரபரக்க வைக்கிறது ரெலிபோன் மணி ஒலி. கைகளைத் துண்டினால் துடைத்து விட்டு ரிசீவரை எடுக்கிறாள் இந்து.

"ஹலோ..". மறுமுனையில் பெரிய அத்தானின் குரல் தழுதழுத்துக் கேட்கிறது.

"அழுகிறாரோ..?" என்ற எண்ணம் இந்துவின் மனதில்.

அத்தான் செய்தியைத் தொடர்கிறார். மார்புப் புற்று நோயால் பீடிக்கப்பட்டுப் படுக்கையில் இருக்கும் சாரு அக்கா இனிக் கன நாளைக்கு இல்லையாம். இன்னும் ஆகக் கூடியது மூன்று மாதங்கள் தானாம். அக்கா இந்துவையும் மகன் கிளியையும் பார்க்கத் துடிக்கிறாராம். செய்தி போன் மூலம் பரிமாற்றம் பெறுகிறது.

கொழும்பு வாழ்க்கை, கணவரின் தொழில், பிள்ளைகளின் படிப்பு என்று பம்பரமாகச் சுழலும் இந்துவுக்குக் கண்களில் கண்ணீர் பொல பொலவென்று உதிர்கிறது.

அன்னையைச் சிறுவயதிலேயே இழந்த தன்னைச் சகோதரியாய் அன்றித் தன் மூத்த குழந்தையைப் போலவே போற்றித் தாய்க்குத் தாயாய் வளர்த்த சாரு அக்கா.. ஒரே ஒரு மகனையும் வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு, வருத்தத்திற்குப் பராமரிக்கவும் ஒருவரும் அருகில் இல்லாமல் கஷ்டப்படுகிறார். அத்தான் ஒரு வயோதிப மாதுவை வைத்துப் பராமரித்தாலும், பக்கத்தில் பெற்ற குழந்தையோ, கூடப்பிறந்த சகோதரியோ இருப்பது போல வருமா...? அதுவும் இந்த இயலாமை நேரத்தில்..

சாரு அக்காவின் இளமைக்காலம் இந்துவின் மனதில் புகையாய் எழுகிறது. அழகான சாரு அக்காவை அவளது அழகு, குணம், முடி அழகு என்பவற்றுக்காகவே அத்தான் எத்தனையோ பெரிய இடத்து சம்பந்தங்களையெல்லாம் உதறித்தள்ளி விட்டுக் கைப்பிடித்தார்.

கண்ணே படும்படியான ஒற்றுமையான தம்பதிகள். குழந்தைப்பேறு தள்ளிப் போகிறது என்று சாரு அக்கா கவலைப்படும் போதெல்லாம் அக்காவைக் கண் கலங்க விடாத அத்தான். ஓடி ஓடி வீட்டுவேலைகள், தையல் வேலைகள் எல்லாவற்றையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வாள். சாரு அக்காவுக்கு எதையும் தான் செய்தால் தான் திருப்தி. அயலவர்களையும் தன் நேசத்தால் கவர்ந்திருந்தாள். அங்கு என்ன விழா என்றாலும் சாரு அக்கா தான் முன்னுக்கு நிற்க வேண்டும், செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் இருக்கும்.

அவ்விதம் பிறருக்கு மாட்டேன் என்று சொல்லாமல் உதவிய சாரு அக்கா.. இன்று இப்படி ஒரு உயிர்கொல்லி நோயுடன் போராடுகிறாளே.. இந்து சிந்தனைகளால் நிலைகுலைகிறாள்.

எப்படியும் கடைசி நேரத்திலாவது தன்னை வளர்த்து ஆளாக்கிய அக்காவுக்குத் தன்னால் இயன்ற சேவையைச் செய்ய வேண்டும் என்ற இந்துவின் அபிலாசையை அவள் கணவர் பாலாவும் அங்கீகரிக்கிறார். பிள்ளைகளையும் கணவரையும் மாமியார் பராமரிப்பில் விட்டுவிட்டு மறுநாளே பேரூந்தில் யாழ் நோக்கிப் பயணிக்கிறாள் இந்து.

கி9 நெடுஞ்சாலை நீளம் வடக்கு சந்தித்திருக்கும் அழிவுகளைக் கண்கூடாகக் காண்கையில் நெஞ்சில் வலியுடன் கூடிய ஒரு நெருடல். சமாதானமும் சுபீட்சமும் விரைவில் எம் வாழ்வில் கிட்ட வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் சாருவின் வீட்டை அடையும் இந்துவை அத்தான் வரவேற்கிறார்.

“இந்து வாரும்“ என்றவுடன் வீட்டைக் களை கட்ட வைத்துச் சிரிப்பும் கும்மாளமுமாக “அய் என்ரை இந்துக் குட்டி வந்தாச்சு” என்று சந்தோஷ ஆரவாரத்துடன் கன்னங்களில் முத்தம் தந்து வரவேற்கும் சாரு அக்காவை அங்கே காணவில்லை. வீட்டில் இப்போதே மயான அமைதி நிலவுவது போன்ற உள்ளுணர்வு அவளை அலைக்கழித்தது.

“இந்து! சாரு கடைசி அறையிலை இருக்கிறாள்; வா!” என்று அழைத்துச் சென்ற அத்தானைத் தொடர்ந்த இந்துவுக்குக் கட்டிலுடன் ஒட்டி நாராகக் கிடக்கும் சாரு அக்காவைக் கண்டதும் துக்கம் பொங்கியது. குழறி அழுதபடி ஓடிச் சென்று சாரு அக்காவைக் கட்டிக் கொள்கிறாள்.

“எப்ப.. எப்ப வந்தனி” எனச் சைகையால் கேட்கிறாள் சாரு அக்கா. “ஐயோ! என்ரை அக்காவால கதைக்கக் கூடவா முடியேல்லை” என்று தனக்குள் வினவிய அவளுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது.

என்ன அழகான குரல்.. சேின்னஞ்சிறு கிளியே..யு பாரதி பாடலை எவ்வளவு திவ்வியமாகப் பாடுவாள்.. அதைக் கேட்டுத் தான் செய்யும் வேலையையும் மறப்பாளே இந்து..

சாருவின் கண்களிலும் கண்ணீர் அருவியாய் சொரிகிறது. ஏஎன்ரை ஆசை அக்கா!யு என்று இரு கன்னங்களிலும் மாறி மாறி முத்தம் கொடுக்கிறாள் இந்து. சாருவின் முகத்தில் ஏற்பட்ட பிரகாசமும் மலர்ச்சியும் அவள் அகத்தின் சொல்லொணா மகிழ்வை எடுத்தியம்பியது.

“அடுத்த கிழமை கிளியும் லீவில வந்திடுவான்” அத்தானின் குரல் ஒலிக்கிறது. வெளியே வந்த இந்துவுக்கு டாக்டர் சாருவின் உடல்நிலை பற்றிக் கூறிய அனைத்தையும் உரைத்தார் அத்தான். அவரது முகத்தில் எல்லையில்லா வேதனை தென்படுகிறது.

“அதுதான் நான் வந்திட்டனே.. கடைசி வரையும் இருந்து கவனிச்சுக் கொள்ளுறன்..” என்று உறுதி கூறுகிறாள் இந்து. அப்போது தான் அவளுக்கு மனச்சுமை சற்றுக் குறைந்தால் போல் இருந்தது.

சாரு அக்கா மகனை எதிர்பார்த்து ஏங்குவது தெரிகிறது. “கிளியைப் பார்க்க வேண்டும்” என எழுதிக் காண்பிக்கிறாள். அடுத்த கிழமை வந்து விடுவான் என இந்து புரிய வைக்கிறாள்.

அந்த நாளும் வந்தது..

முன்னொரு முறை கிளி வந்த போது, சாரு அக்காவும் அத்தானுடன் கட்டுநாயக்கா விமான நிலையம் சென்று அவனை வரவேற்று அழைத்து வந்தது இந்துவின் நினைவில் நிழலாடுகிறது..

சாரு அக்காவுக்குத் தான் எத்தனை மகிழ்ச்சி! புஷ்டியாகக் கொழுத்து நிறத்து வளர்ந்திருந்த கிளியைத் திருஷ்டி முறித்துத் தடவியதும் கூடவே சிந்தனைக்கு வர, அத்தானிடம் கிளியைப் பற்றி விசாரிக்கிறாள் இந்து.

கிளி வந்து விட்டான். “இந்து சித்தீ..! என்று வழக்கம் போலக் கூவியழைத்துக் கைகளைப் பற்றியவன், தாயிடம் ஓடிச் செல்கிறான்.

“அம்மா...!” அவனது கதறல் அனைவர் கண்களையும் குளமாக்குகின்றதுஞ்

“அம்மா ஓடி வந்து என்னை அணைப்பாவே சித்தீ.. எத்தினை கதை சொல்லுவா..எத்தினை கேள்வி கேப்பா.. உச்சி மோந்து.. கிளி.. கிளி.. எண்டு எத்தினை தரம் தடவிக் கொடுப்பா.. கர்த்தாவே! இது என்ன சோதனை? என்ரை அம்மா ஆருக்கும் ஒரு கெடுதியுஞ் செய்யேல்லையேஞ்”

கிளியால் தாங்கவே முடியவில்லை.. கண்ணின் கருமணியாய்க் கண்ணுக்குக் கண்ணாகப் போற்றி வளர்க்கப்பட்டவன்ஞ்

பள்ளிக்கூடத்துக்கு வெளிக்கிட்டுப் படலை வரை வந்து சைக்கிளில் ஏறிய பின்பும், இறங்கி ஓடிப்போய் ஏஎணை குனியெணையு என்று சாரு அக்காவை முத்தமிட்டு, அணைத்து, விடைபெறும் சிறுவன் கிளி தான் நினைவுக்கு வருகிறான்ஞ்

நோயின் உபாதை தெரியாமலிருக்க டொக்ரர் கொடுத்த நித்திரைக் குளிசையின் உதவியோடு நிம்மதியாய் உறங்கிக் கொண்டிருந்த சாருவை எழுப்ப மனமின்றிக் காலடியிலேயே கண்கலங்கி நின்ற அவனை இந்து ஆசுவாசப் படுத்தி வெளியே அழைத்துச் செல்கிறாள்.

மறுநாள் கண்விழித்த கிளி, கண்கள் செக்கச் செவேலெனச் சிவந்திருக்க, பேயறைந்தது போன்ற முகத்தோற்றத்துடன் வெளியே வருகிறான். அன்னையின் எண்ணம் இல்லாமலே வெளியே செல்ல ஆயத்தமான அவன் மறித்த இந்துவின் கைகளைத் தட்டிவிட்டுச் சென்றுவிடுகிறான்.

இந்துவுக்கு இப்போது நிலைமை நன்கு புரிந்தது. போதைக்கு அடிமையாகி விட்ட கும்பலில் கிளியும் ஒருவன் ஆகி விட்டான் என்று.. ஜேயோ இது என்ன கொடுமை! சாரு அக்கா இவனைத் தன்னுடனேயே வைத்திருந்திருக்கலாம்.. விதியின் விளையாட்டை என்னவென்பது..?யு

மாலையாகியும் கிளி வீடு திரும்பவில்லை. யாவரும் கவலையோடு இருக்க, நடுச்சாமத்தில் வீடு திரும்புகிறான் கிளி. துணைக்கு ஓரிருவர். அவர்களும் போதைக் கும்பலைச் சேர்ந்தவர்கள் போலும். அவர்கள் அத்தானிடம் கிளியின் பணம் முழுவதும் வழிச்சண்டை ஒன்றில் சூறையாடப்பட்டதைச் சொல்லிச் சென்றனர். எதையும் உணரும் நிலையில் கிளி இல்லை. கனவில் மிதப்பவன் போல் இருந்த அவனைப் பார்க்கப் பார்க்க அழுகை பொங்கியது இந்துவுக்கு..

விடியற்காலை, இந்து சாருவுக்காகிய எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்துச் செய்துவிட்டுக் குளியலறைக்குச் சென்றாள். திரும்பி வந்து பார்க்கையில், பிரக்ஞை அற்றுக்கிடந்த சாரு அக்காவின் காதுத் தோடுகளைக் கழற்றிக் கொண்டிருந்தான் கிளி. இந்து ஓடிச்சென்று, “ஏய்! கிளி.. என்ன வேலை இது? என்ன வேலை செய்யிறாய்? விடு.. விடடா.. ஏன் கழட்டுறாய் அம்மாடை தோட்டை?யுவைரக்கல் பதித்த, அத்தான் ஆசை ஆசையாகச் செய்து கொடுத்த தோடு அது! ஏனக்குக் கசூா வேணும் சித்தி! மருந்து வேண்டக் காசில்லை. நான் கொண்டு வந்த காசெல்லாம் களவு போட்டுது. என்னால அது இல்லாம இருக்கேலா. இங்க பார் சித்தி! கை கால் எல்லாம் ஒரே நடுக்கம்..யு என்று காட்டுகிறான் கிளி.

இந்து கையறுநிலையில் திக்பிரமையுற்று நிற்க, அந்த இடைவெளியைப் பயன்படுத்தித் தோட்டுடன் கிளி வெளியேறிவிட, சோரு அக்காஞ் உனக்கா இந்த நிலை?யு என்று குமுறி அழுகிறாள் இந்து. அவளால் எதுவும் செய்ய இயலவில்லை.

சாருவைப் பார்க்கிறாள். அடிவயிற்றில் உண்டாகும் மூச்சு அவதானத்தில் தெரிய, அக்காவின் அந்திம நேரம் நெருங்கி விட்டதை உணர்ந்து, அத்தானுக்கு ஆள் அனுப்பிவிட்டு, அக்காவின் தலையைத் தன் மடியில் வைத்துக் கொள்கிறாள். நீண்ட நெடுமூச்சுடன் சாரு அக்காவின் உயிர் பிரிகிறது..

கண்கள் குளமாகின்றன. அத்தான் போதகரை அழைத்து வருகிறார். இறுதி யாத்திரைக்குத் தயாரான அக்காவுக்கு வேண்டிய காரியங்கள் யாவும் செவ்வனே நடைபெறுகின்றன.

“அக்கா... அக்கா...” என்று மகன் வந்தும் காணக் கிட்டாமல், எட்டாத உலகத்திற்குச் சென்றுவிட்ட அக்காவுக்கும் எட்டும்படி உரத்த குரலெடுத்து அழுகிறாள் இந்து. சாரு அக்கா இறுதி யாத்திரைக்குத் தயாராகிவிட்டாள். தாய்க்குப் பிடி மண் போட்டு, அத்தர் தெளிக்கக்கூட நாதியின்றி, ஸ்மரணை இன்றிக் கிடந்தான் கிளி. போதகரின் ஆராதனையைத் தொடர்ந்து, ஆலயக்குழு பாடலைத் தொடங்கிற்று.

“இன்பராய்.. ஈற்றிலே.. மோட்சக் கரையில்.. நாம் சந்திப்போம்..”

மயானத்தில் நின்ற அனைவர் கண்களும் குளமாகின. அணைத்து நேசம் கூட்டி வளர்த்த சாரு அக்கா, மெல்ல.. மெல்ல.. குழிக்குள் இறக்கப் படுகின்றாள்.. தாங்க முடியாமல் தரையில் விழுந்து புரண்டு அழுத இந்துவை அணைத்துச் சமாதானப்படுத்த முயன்றோர் தோற்றனர்.

அத்தான் கிளியைக் கைத்தாங்கலாகக் கொண்டு வருகிறார். பெற்ற தாய்க்குப் பிடிமண் போடுவதைத் தன்னுணர்வின்றிச் செய்கிறான் கிளி. ஜேயோ அக்கா உன்ரை கிளிக் குஞ்சுக்கு ஏன் இந்த நிலை?யு என்று வெடித்தழுத இந்துவைக் கணவர் அணைத்து ஆறுதல் கூறுகின்றார்.



| சிறுகதை

# ஒரு வீடு ஒரு கதை

● புஷ்பா கிறிஸ்ரி

"எத்தனை ஆண்டுகளாக நீங்கள் இந்த வீட்டில் குடியிருக்கிறீர்கள்?" அந்தக் கேள்வியை வைத்தியர் கேட்டார்.

"20 வருடங்கள்" சொல்லி முடித்ததும் அவள் விழியோரங்களில் பனித்த கண்ணீர், சொட்டுச் சொட்டாய் வந்து வடிய, கனடிய வாழ்வின் ஆரம்ப காலம் கண்முன் வந்து நின்றது.

கனடா வந்த போது, அண்ணா வீட்டில், ஒரு அறையில் வாடகைக்கு இருந்தாள் புனிதா.

தனியாக மணம் முடித்து வந்த போது வயிற்றில் குழந்தை இருந்தது. கணவன் ஜேர்மனியில் இருந்தான். அவள் அங்கு திருமணம் முடித்து, மூன்றே மாதத்தில் இவ்விடம் வந்து விட்டாள். வந்தும் ஒரு வேலை தேடிக்கொண்டாள். அவனுக்கு ஸ்பொன்சர் செய்தாள். பனியில் தள்ளாடி நடந்து பலதடவைகள் வழுக்கி விழப்போனபோதும் விழாது வீடு வந்து சேர்ந்தாள். அன்று மாலை வேலை முடித்து வீடு வந்த போது, அவள் நடுவீதியில் விழப் போனபோது, பின்னால் ஒரு கை அவளைத் தாங்கிப் பிடித்தது. அவள் அண்ணன் தான். நல்ல வேளை அவர் தக்க நேரத்தில் வந்து பிடித்து விட்டார். அல்லது அவள் விழுந்து கர்ப்பமும் கலைந்து குழந்தை இறந்து தான் பிறந்திருப்பான். ஒரு வாரம் ஓடி மறைந்தது.

அவளுக்கு பிரசவ வலி கண்டது. அதிகாலை இரண்டு மணி,. இரத்தப் போக்குக் கண்டது. கணவன் இங்கில்லை. தாயாரும் தங்கையும் வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர். அண்ணா காரில் கொண்டு சென்று விட்டு வந்தார். சுமார் 20 மணி நேரப் போராட்டத்தின் பின் வாந்தியெடுத்த படியே சிரமப் பட்டாள். பிள்ளையைத் தள்ளும் படி நர்ஸ் சொன்னாள். அவள் தள்ளினாள். பிள்ளை வரவில்லை. தலை மட்டும் எட்டிப் பார்த்தது. ஆனால், மூலம் வெளியே தள்ளத் தொடங்கியது. பிள்ளை அதிக நேரம் வெளிவராததால், வைத்தியர் சொன்னார் ஆயுத உதவியால் பிள்ளையை வெளியே எடுக்க வேண்டும் என்று. தனியே கர்ப்பம் சுமந்து தனியே மகனைப் பெற்றாள்.

எட்டு மாதங்கள் ஓடி மறைந்தது. குழந்தையைக் கொண்டு ஜேர்மன் பயணமானாள். கணவனிடம் மகனைத் தந்தாள். குழந்தை வீறிட்டு அலறினான்.

பாசக்கார அப்பனுக்கு, மகன் தன்னிடம் ஒட்டாதது கவலை. அவர் ஆத்திரம் கொண்டு மகனை அடித்தே விட்டார். அவன். அந்த நிமிடத்திலிருந்து தந்தையை வெறுக்கத் தொடங்கினான். இருந்தாலும் கொஞ்சம் அப்படி இப்படி சேரத் தொடங்கினான். ஊர் போனார்கள் குடும்பமாக. தாயைப் பார்த்து வந்தார்கள். கனடா வந்தார்கள். அவள் தங்கியிருந்த அதே அண்ணனின் அறையில் தான் தங்கியிருந்தார்கள்.

ஒரு மாதம் கழிந்தது. கணவனுக்கு வேலை கிடைக்கவில்லை. அவள் மட்டும் வேலைக்குப் போய் வந்தாள். வீடு எடுக்க வசதி இருக்கவில்லை அவனின் பரிதாப நிலை கண்டு அவள் தவித்தாள். ஒரு நாள் அவள் அண்ணனுக்கும் அண்ணிக்கும் குடும்ப சண்டை வந்தது. அந்தச் சண்டையில் அண்ணனின் தங்கையான இவள் குடும்பத்தின் பெயர் வாய்க்கு அவலானது. அவள் தனித்துத் தான் வீட்டிலிருந்தாள். வெளியே போன கணவன் வீடு வரும் முன்னர் இந்தச் சண்டை முடிந்து விட வேண்டும் என அவள் எண்ணினாலும் அண்ணியின் வாயில் வரக்கூடாது என அவள் நினைத்த அந்தச் சொல் வந்தே விட்டது.

"நான் எனக்கும் என் குடும்பத்திற்கு மட்டும் தான் வீடு வாங்கினேன். உங்கட தங்கச்சி குடும்பத்துக்கு நான் சத்திரம் கட்டித் தரவில்லை ஒரேயடியாக இங்கு தங்கி விட்டார்கள். உடனடியாக அவர்களை வெளீயே அனுப்புங்கள்" என்றவள் குரல் கேட்டு தவித்துப் போனாள் புனிதா. அடுத்த நாளே அரசாங்க அலுவலகத்திற்கு ஓடினாள். தனக்கு குறைந்த விலை வாடகை கொண்ட ஒரு வீட்டைத் தேடி இரண்டே நாளில் விட்டைக் காலி செய்து வெளியேறினாள்.

முதல் முதலில் அவள் கனடா வந்த போது அவளிடம் தனியாக ஒரு பெட்டி இருக்கவில்லை. அவளும் தங்கையும் ஒரு பெட்டியில் தம் உடுப்புக்களை வைத்திருந்தனர். கனடா வந்த போது ஒரு பெட்டி மட்டும் அவளுக்குச் சொந்தமானது. ஜேர்மன் போன போது இரண்டு பெட்டிகள். ஜேர்மனிலிருந்து வந்த போது திருமணப் புடவைகள், மற்றும் பரிசுப் பொருட்கள் என மூன்று பெட்டிகள் சேர்ந்தன. மீண்டும் குழந்தையுடன் போன போது, நான்கு பெட்டிகள் வந்து விட்டன. ஜேர்மனால் வந்த போது ஆறு பெட்டிகள் கூடின. காரில் ஆறு பெட்டிகளை ஏற்றிக் கொண்டு போனாள். ஒரு அப்பாட்மெண்டில் குடியேறினார்கள். குழந்தை வளர்ந்தான். பத்துப் பெட்டிகள் வந்ததன. அலுமாரி, மேசை, கதிரை, சோபா, சாப்பாட்டு மேசை என்று வளர்ந்தது. இப்போது இரண்டு அறை வீடு தேவைப்பட்டது. இரண்டு நண்பர்கள், உதவியுடன் அவர்கள் கார்களில் சாமான்களை ஏற்றி வீடு மாறினார்கள்.

அவர்களுக்கு நல்ல கோழிக்கறியுடன் சாப்பாடு சமைத்துப் போட்டாள் புனிதா கோழி ஆணத்துடனேயே சாப்பிட்டு முடித்து விடலாம் அண்ணையு என்றார்கள் நண்பர்கள்..இன்னொரு பெண் குழந்தை பிறந்தது. பெண் குழந்தை உள்ள வீட்டில் செல்வம் கூடும் என்பது பெரியவர் வார்த்தை. வீடு போதாது என வந்த போது மூன்று அறை கொண்ட வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டு போனாள். இப்போது மூன்று கட்டில்கள், அலமாரி பெட்டிகள் பேழைகள் என்று ;சாமான்கள் கூடின.

இப்போது ஒரு சிறிய வாகனம் ஒன்றை வாடகைக்கு எடுத்து சாமான் ஏற்றினர். 7 வருடங்கள் ஒரே வீட்டில் இருந்து விட்டனர். அந்த நேரம் தான் இந்த வீட்டைப் பார்த்து எடுக்க வந்தனர். கணவன் மனைவி, குழந்தைகள் என்று ஒரு முழுக் குடும்பமாக இந்த வீட்டினுள் குடிவந்த போது புது வாழ்வு பிறந்தது. அன்றிலிருந்து வாழ்க்கை தொடர்கிறது. மகனும் மகளும் தாய் தந்தையும் வாழ்ந்தனர். இரண்டு பிள்ளைகள் வளர்ந்து, படித்து, பட்டம் பெற்று, வாழ்ந்தனர்.

அவள் கணவன் தேனீர் ஊற்றிக் கொண்டு வந்து தரும் நினைவு. அவள் சமையலை முடித்து வர அவன் உணவு பரிமாரித் தரும் நினைவு. அவள் மரம் செடி கொடி, மரக்கறித் தோட்டம் என்று ஓடித் திரிந்த நாட்கள். அவன் இவை வேண்டாம் என்று வாதிட்ட நாட்கள். அதனால் ஏற்பட்ட மனக்கசப்புக்கள். பின் அவளது ஆசையுடன், அவனும் மல்லிகைச் செடி, நந்தியாவட்டைச் செடி என வாங்கி வந்து வளர்த்து, மலர் எடுத்து நுகர்ந்து ரசித்த நாட்கள்.

அவள் மகள் நடன வகுப்பு முடித்து வந்து, தானும் ஆசிரியை போல் பாசாங்கு செய்து, கற்பனையாக மாணவிகட்கு நாட்டியம் கற்பித்து வகுப்பு எடுத்த நாட்கள், சங்கீத வகுப்பு. ஜிணீமீ ளீஷ்ணீஸீ ஞ்றீஷீ, நீச்சல், பியானோ, எனவும் மகன் கொம்பியூட்டர் பாடம் படித்த நினைவுகள், அவன் முதல் முதலாக தந்தையிடம் கார் இயக்கப் பழகியது பிள்ளைகளைக்

கொண்டு ஓடிய நாட்கள் மறக்க முடியாதன.

வட அமெரிக்காவில் மின்சாரம் இல்லாது கழிந்து போன இரண்டு நாட்கள். பணம் இல்லாது, வங்கிகள் மூடியபடி, மெசினில் கசா எடுக்க முடியாது தவித்த நாட்கள். வாடிப்போன மல்லிகைச் செடிகள். மரக்கறித் தோட்டத்தில் பூத்துக் காய்த்த மிளகாய், வெண்டி, பீற்றூட், புடலங்காய், போஞ்சிக்காய் பிடுங்கி குளிர் சாதனப்பெட்டியில் பனிக்காலத்துக்குச் சேமித்து வைத்தவை.

இலை உதிர்காலத்து இலைக் குவியல் அள்ளிக் களைத்த கணவன், இருதய சத்திர சிகிச்சைக்குப் பின் புல் வெட்ட முடியாது, இலை அள்ள முடியாது, பனி அள்ள முடியாது. மனைவி பனி தள்ள. வீட்டினுள் இருந்து பார்த்து விட்டு, அவளுக்காகக் கண்ணீர் விட்ட படியே, கோப்பி தயாரித்து வைத்து, அவள் களைத்து வந்ததும் கொடுத்து மகிழ்ந்தான்.

மூத்த மகன் ஒரு பெண்ணை விரும்பி, திருமணமாகி, வேறு வீடு போய் விட்டான் தந்தை தன் உலக வாழ்வை முடித்துக் கொண்டு விடை பெற்று விட்டார். இப்போ தாயும் மகளும் தான் தனித்து விட்டனர். இப்போது இந்த வீடு மிகவும் பெரிதாக அவர்களுக்குத் தெரிகிறது. என்ன செய்ய முடியும். நினைவுகளைச் சுமந்த வீடு. மறக்க முடியாதவைகள் அதிகம். கண்களைப் பனிக்கச் செய்யும் ஞாபகங்கள்.. அழுகையை அடக்க முடியாத நினைவலைகள்.

புத்தர் சொன்னது போல் குேடும்ப உறவுகளால் பிணைக்கப் பட்ட மனித வாழ்வு வேதனைகள் நிறைந்தவையு தான். இன்று கணவனை இழந்து அவள் தனித்து தவிக்கிறாள் கோதற்ற ஊசியும் வாராது காண் கடை வழிக்கேயு என்ற பட்டினத்தார் வரிகளின் அர்த்தம் இப்போது புரிகிறது அவளுக்குள்.

அன்று பகல் அவள் வீடு வந்த போது, குப்பை லொறி வந்திருக்கவில்லை. எனவே குப்பைத் தொட்டிகளை எடுத்து உரிய இடத்தில் வைக்கவில்லை. ஆனால், பின்னர், 8 மணி போல் லோறி வந்து குப்பை எடுத்த்ப் போன போது, அவள் குப்பை தொட்டிகளை எடுத்து வைக்க வெளியே வரவில்லை. மகனும் மருமகளும் வருவதாகச் சொன்னார்கள். இரவு 11.00 மணியானது. அழைத்துக் கேட்டபோது, மருமகள் சொன்னாள். ஏனக்குக் கொஞ்சம் சுகமில்லை. எனவே வரவில்லை. நீங்கள் படுத்துக்கொள்ளுங்கள்யு பனி அதிகமாக கொட்டிக்கொண்டிருந்தது.

அவள் தன் கடமையை எண்ணி, குளிருக்கான ஆடையை மாற்றியபடி, காலில் பூட்சை மாற்றிக் கொண்டு, வெளியே வந்து தன் வீட்டுக்குப்பைப் தொட்டிகளை எடுத்து வந்து உரிய இடத்தில் வைத்த போது இரவு 11.15 ஆகி இருந்தது. கணவன் இருந்திருந்தால் அந்த வீட்டைக் காக்கும் ஒரு நல்ல காவலாளியாக அவன் கடமை செய்திருப்பான். காலத்தின் கோலத்தில் யாவும் நடந்து முடிந்த சகல நிகழ்வுகளையும் அவள் எண்ணிக் கலங்கினாள்.

காரணம் இல்லாமல் கவலை கொள்ளாதே

காரணம் இல்லாமல் கலக்கம் கொள்ளாதே

எதுவும் கடந்து போகும்

இதுவும் கடந்து போகும் என்னும் பகவத் கீதை வாக்கியங்கள் அவளுக்குள் வந்து ஒலித்தது. அந்த வீடு இன்று மிகவும் பெரிதாகவும், தேவையற்ற ஒன்றாகவும் அவளுக்குத் தெரிந்தது.

ஆனாலும் கனவுகளாலும், கற்பனைகளாலும், நினைவுகளாலும் கட்டப்பட்ட அந்த வீட்டின் நிலைக்கதவில் நின்று அவள் பின்னோக்கி வீட்டைப் பார்த்தாள். அது பல கதைகளைச் சொல்லிக் கொண்டிருந்தது.

# சிறுகதைகள், அன்றும் இன்றும் - ஒரு சுருக்கமான நோக்கு

● தே. கோகிலவாணி

கதை, அன்றாடம் எம்மைச்சுற்றி எத்தனை கதைகள், கேட்கிறோம்; ரசிக்கிறோம்; மகிழ்கிறோம்; துக்கிக்கிறோம். மனிதவாழ்வே கதைகளின் தொகுப்புத்தான். நீரில் திளைக்கும் மீன்போலக் கதைகளிற் திளைத்துக் கிடக்கிறோம். எனவே சிறுகதை என்பதும் பெயரும் வடிவமும் சில கருத்துக்கூறுகளும் வேறுபடுகின்றதே தவிர விடயம் என்னவோ, ஒரு பாரம்பரியத்தின் தொடர்ச்சியே. அந்தவகையில் கதைசொல்லுதல் தமிழுக்குப் புதியதல்ல.

பாட்டி சொல்லும் கதைகள் முதல் விக்கிரமாதித்தன், பஞ்சதந்திரம், ஈசாப் கதைகளென எராளமான நீதிக்கதைகள், உருவகக்கதைகள், குட்டிக்கதைகள் தமிழின் ஆரம்பகாலக் கதைகளாக உள்ளன. எவ்வாறெனினும் ஆங்கிலக்கல்வி, அச்சியந்திர அறிமுகம் ஆகிய இவ்விரண்டு முக்கியநிகழ்வுகளுமே, தமிழுக்குச் சிறுகதை என்னும் முறையான இலக்கிய வடிவத்தை அறிமுகஞ்செய்து வைத்தது. மேனாட்டு மரபையொட்டித் தமிழிலே தோன்றிய புத்திலக்கிய வடிவங்களில் ஒன்றாக நவீன சிறுகதை முக்கிய இடம்பெறுகின்றது.

'சிறுகதை' என அழைக்கப்படுவதால் இது சிறியகதை எனப்பொருள்படாது. எனினும் சுருக்கமான கதை கூறும் புனைவுவகை இலக்கியவடிவமாகத், தன்னளவில் முழுமைபெற்ற தனித்துவ அமைப்பே சிறுகதை. எந்த உணர்ச்சியை அல்லது கருத்தை அது தன்னகத்தே கொண்டுள்ளதோ அதைப் படிப்பவரின் நெஞ்சில் மின்னற்கீற்றாய்ப் பாய்ச்சும் ஆற்றல் சிறுகதைக்கு வேண்டும். சிறுகதையை "வாழ்க்கையின் சாளரம்" என்பார், தமிழ்ச்சிறுகதையின் பிதாமகரெனப்

போற்றப்படும் புதுமைப்பித்தன் அவர்கள். ஈழத்தின் தலைசிறந்த இலக்கிய ஆய்வாளர் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் நல்ல சிறுகதையின் பண்புகளை கீழ்க்கண்டவாறு சுட்டுவார்.

"சிறுகதை இலக்கியவகையின் மிகமிக முக்கியமான, தனித்துவமான அம்சம் அவை மனிதவாழ்வில் வரும் சிலகணங்களை (ஷீஷீமீஸீமீஉ), அந்த மனிதனை அல்லது மனிதர்களைப் பற்றிய அசைவியக்கத்தினை சித்தரிப்பதன் மூலம் முழுவாழ்க்கையையுமே விளங்கிக் கொள்ள உதவுவதாக அமையும். இருட்டில் வரும் திடீர் மின்னல், சூழ இருப்பவற்றை நன்கு காட்டிவிட்டு திடீரென மறைவது போல,நல்லசிறுகதையும்அதன்கடைசிவாக்கியம்வாசித்துமுடிக்கப்படும்பொழுது உணர்வுநிலை ஒன்றினை வாசிப்பவரிடத்தில் ஏற்படுத்தி விடும். எந்த ஒரு நல்ல சிறுகதையும் அதன் கடைசி வாக்கியத்திற்கு அப்பாலே உடனடியாக ஒரு திகைப்பையோ,தெளிவையோ அன்றேல் அதுவரை இல்லாதிருந்த ஒரு புரிதல் உணர்வையோ ஏற்படுத்தும்." தமிழில் சிறுகதை வடிவத்தை வெளிப்படுத்தும் முதற்கதை பாரதியினுடையதெனக் சொல்லப்படுகின்ற போதும், வ.வே.சு.ஐயரின் 'குளத்தங்கரை அரசமரம்' என்ற கதையே சரியான வடிவிலமைந்த முதலாவது சிறுகதையாகும். தமிழ்ச்சிறுகதைகளின் வளர்ச்சிக்கும் மலர்ச்சிக்கும் களமாயமைந்தது, மணிக்கொடி சிறுகதைச் சிற்றிதழாகும்.


'மணிக்கொடித் தலைமுறையினர்' என அழைத்துச் சிறப்பிக்கப்பட்ட புதுமைப்பித்தன், கு.ப.ரா, பிச்சமூர்த்தி, மௌனி போன்ற சிறந்த சிறுகதை எழுத்தாளர்கள் இதில் எழுதினர். தொடர்ந்து, க.நா.சுப்பிரமணியம், சி.சு.செல்லப்பா, லா.ச.ரா, ஜெயகாந்தன், ந்சுதர ராமசாமி, கு.அழகிரி, தி. ஜானகிராமன் போன்றோரின் கதைகள் சிறப்பிடம் பெற்றன.

இலங்கையைப் பொறுத்தமட்டில் ஆரம்பகாலச் சிறுகதைகள், அரசியற்சூழல், சமுதாயக்கட்டமைப்பு என்பவற்றை வெளிப்படுத்தும் ஒரு முக்கிய இலக்கியக்கூறாக அமைந்தது் எனினும் ஐம்பதுகளின் பின்பே ஈழத்துச் சிறுகதைகளில் மாற்றங்கள் ஏறபட்டன. பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் தோன்றி அவற்றின் வெளியீட்டிற்கு உதவின.

முடிவாக, எழுபதுகளிலிருந்து தற்காலம்வரை பல எழுத்தாளர்கள் சிறந்த சிறுகதைகள்படைப்பதில் தடம் பதித்துள்ளனர். இந்நவீன சிறுகதை இலக்கியம் கருத்திலும் சொல்லும் தன்மையிலும் மொழியைக் கையாளும் நேர்த்தியிலும் பல மாறுதல்களைக் கண்டுள்ளது. இவை மக் களது வாழ்க்கையைப் பல்வேறு கோணங்களிலும் பிரதிபலித்து நிற்கின்றன. வீரியமான விமர்சனங்களினால் தேவையற்ற சொல்அலங்காரங்கள், வர்ணனைகள் போன்றவை தவிர்க்கப்பட்டு படைப்புக் கள் அவற்றின் முழுவீச்சோடு வெளிவந்தன. வருகின்றன.

இருபத்தோராம் நூற்றாண்டு தொடர்பாடல் யுகம், கணணியுகம். இந்நூற்றாண்டில் இணைய இதழ்கள் என்னும் புதுவகை இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. அவற்றில் உலகத்தமிழ் எழுத்தாளர்கள் தம் படைப்புகளை ஒருங்கே வெளியிடக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. எனவே உலக எழுத்தாளர்கள் சங்கமிக்க இணைய இதழ்கள் வழிசமைத்தால் அது சிறுகதையை மற்றோர் உயரத்திற்கு

இட்டுச்செல்லும்.



# அறத்தின் குரல்

● அலெக்ஸ் பரந்தாமன், புதுக்குடியிருப்பு.

*முத்துத்தம்பியின் வீட்டிற்கு இரண்டு வீடுகள்தள்ளி பொலிஸ் வாகனமொன்று வந்து நிற்கிறது. அந்த வீடு அரவிந்தனுடையது. வீட்டிற்குள் சென்ற சில பொலிஸ்காரர், அரவிந்தனை அழைத்து வந்து வாகனத்தில் ஏற்றினார்கள். வாகனம் திரும்பவும், வந்தவழியே முத்துத்தம்பியின் வீட்டையும் கடந்து பொலிஸ் நிலையம் நோக்கிச் செல்கிறது.*

ஒழுங்கைப் படலையடியில் நின்றவாறு, இவற்றை அவதானித்த முத்துத்தம்பி, அந்த இடத்தைவிட்டு நகர்ந்து, தனது வீட்டுவளவுக்குள் வந்தார். முற்றத்து மாமரத்து நிழலின்கீழ் இருந்த கதிரையில் அமர்ந்து கொண்டார். அவருக்குள் பல சிந்தனைகள்..

‘ என்ன பிரச்சினையாக இருக்கும். பொடியனை ஏன் பொலிஸ் வந்து பிடிக்க வேணும்..? முற்பகல் செய்யின் பிற்பகல் விளையுமெண்டு, ஒருவேளை அவன்ர மாமன் அந்தநேரம் விட்ட பெருமூச்சும், கண்ணீரும், சாபமும்தான் இப்ப ஒண்டுதிரண்டு வந்து முன்னாலை நிக்குதோ..?’

முத்துத்தம்பியின் மனதுக்குள் வந்து குந்த ஆரம்பிக்கின்றன முப்பத்தைந்து வருடங்களுக்கு முந்தைய சில சம்பவங்கள்.

எண்பதுகளின் ஆரம்பத்தில் ஏற்பட்ட ஆடிக்கலவரத்தின் நிமித்தம், நாட்டின் தென்பகுதியைவிட்டு, வன்னிக்கு ஓடிவந்த குடும்பங்களில் சின்னாச்சி குடும்பமும் ஒன்று. சின்னாச்சிக்கு கணவன் இல்லை. அவர் ஏற்கனவே இறந்து விட்டார். ஆச்சிக்கு இரண்டு பிள்ளைகள். மகன் கனகரத்தினம், மகள் இந்திராதேவி. இந்திராதேவிக்கு ஒன்றரை வயதில் ஓர் ஆண் குழந்தை இருந்தது. தகப்பன் இல்லை. சீதனம் போதாமையைக் காரணம்காட்டி, குழந்தைக்கு ஒருவயதாகும்போதே அவன் இந்திராவை விட்டுப் பிரிந்து விட்டான்.

ஊரிலே சின்னாச்சியின் தூரத்து உறவு முறையான ஒருவரின் வீட்டில் தங்கியிருந்தவாறு.. ஊரின் ஒதுக்குப்புறத்திலிருந்த காட்டின் ஒரு பகுதியை அழித்து வெளியாக்கிக் கொண்டான் கனகன். ஊர்க்காரர் அவனது செயலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தபோது, விதானையார் கனகனுக்கு ஆதரவாக இருந்தார்.

“பாவம்! கலவரத்தில பாதிக்கப்பட்டு, இருக்க இடமில்லாமல் ஓடிவந்து நிக்குதுகள். காடுதானே.. வெட்டிக்கொண்டு இருக்கட்டும்..”

அதன்பின், ஊரவர்கள் மேற்கொண்டு எதுவும் கூறவில்லை. மௌனமாகிப் போனார்கள்.

நாளடைவில், அந்தக் காட்டுநிலத்தைத் துப்புரவாக்கிக் கொண்டான் கனகன். அதற்குள் தானிய வகைகளைப் பயிரிடத் தொடங்கினான். ஒருநாள் ஏதோவொரு அலுவல் நிமித்தம், அவன் அயலூருக்குச் சென்றுவர, ஒருவாரமாகி விட்டது. காணி உரிமம் இல்லாதவர்க்கு விதானையாருடைய அலுவலகத்தில் புதிதாகப் பதிவு செய்து, ம் பெமிற்ழ் வழங்கப்படுவதை அறிந்த கனகனின் அக்காள் அங்கு சென்றாள்.

கனகன் வெட்டிவெளியாக்கிய ஒரு ஏக்கர் பரப்பளவுள்ள காணியின் அரைப்பகுதியைத் தனது பெயரிலும், மறுபகுதியைத் தாயின் பெயரிலும் பதிவு செய்து பெமிற்றைப் பெற்றுக் கொண்டாள்.

விதானையாருக்குச் சந்தேகம் வந்து விட்டது. அவர் நேரடியாகவே அவளிடம் கேட்டுவிட்டார்.

“ உங்கட தம்பி எங்கை..?”

“ அவன் ஏதோவோரு வேலை அலுவலா எட்டப்போயிட்டான். வரச் சுணங்கும்..”

“காட்டை வெட்டி வெளியாக்கியது உங்கட தம்பி. நீங்கள் அவருடைய பெயரிலை பதியாமல், உங்கட பெயரிலும் கொம்மான்ர பெயரிலும் பதிஞ்சிருக்கிறியள். பிறகு தம்பி வந்து பிரச்சினைப்பட மாட்டாரே..?”

“சீச்சி..அவனொண்டும் அப்படிச் செய்யமாட்டான். நாங்கள் இப்ப ஒண்டாத்தான்

இருக்கிறம்.." என்று இந்திராதேவி முகம் நிறைந்த சிரிப்புணர்வை வெளிப்படுத்திக் கூறியபோது, விதானையாரும் அதை நம்பி பெமிற்றைக் கொடுத்து விட்டார்.

அயலூருக்குச் சென்ற கனகன், தனது அலுவல்களை முடித்துக்கொண்டு ஊருக்கு வந்தபோது, விடயத்தைத் தாய்மூலம் அறிந்து கொண்டான். வெகுண்டெழுந்தான். சகோதரியோடு பிரச்சினைப்பட்டான்.

"உனக்கு சீதனத்தில காணிபூமி தாறதா அப்பன், ஆத்தை சொல்லேல்லை. சரியோ.. என்னைக் கேளாமல் என்னெண்டு உன்ர பேரிலையும் ஆத்தையின்ர பேரிலையும் காணியை எழுதினனி..?"

அவனது கேள்விக்கு இந்திராவிடமிருந்து எதுவித பதிலும் எழவில்லை. மௌனம் காத்தபடி.. அவன்முன் நின்றாள்.

அவனுக்குத் தாயை நினைக் மனக்கொதிப்புக் கூடியது. தாய் இல்லாத காலம், தாயினது பெயரில் இருக்கும் காணியில் பிள்ளை என்ற வகையில், தனக்கும் பங்கிருக்கு.. என வாதாடலாம். இதன் நிமித்தம் கால் ஏக்கர காணியே அவனுக்கு மிஞ்சும்.ஒரு ஏக்கர் பரப்பளவுக்கு காட்டை வெட்டி வெளியாக்கி, கால் ஏக்கர் காணிக்குள் வாழப்போறதை நினைக்க.. கனகனுக்கு தன் மனதைக் கட்டுப்படுத்த முடியாமல் இருந்தது. அவனுக்குத் தன் தாயின்மேல் ஆத்திரம் வந்தது. அவளும் இசைந்து நடந்து விட்டதாகவே தோன்றியது.

விதானையாரிடம் சென்று நியாயம் கேட்க விரும்பவில்லை. சகோதரங்களுக்கிடையிலான பிரச்சினை இது. இதைக் கொண்டுபோய் விதானையார்முன்பு, அங்கு வந்து நிற்கும் சனங்களுக்கு மத்தியில், பகிரங்கப்படுத்தி அசிங்கப்படுவதா..? என மனதுக்குள் குமைந்தபடி.. இருந்தான்.

"எட தம்பி! அவளுக்கும் புருசன் இல்லை. பொடியனும் குழந்தைப்பிள்ளை. எங்களுக்கெண்டு ஊரில நெருங்கிய இனசனமும் இல்லை. கொக்காள்தானே! கொஞ்சம் விட்டுக்குடுத்துப் போடா.."

இரண்டொரு நாள்கள் கழித்து அவனது சினம் அடங்கிய பிறகு, தாய் கூறுகிறாள். அவனும் அதை ஏற்றுக்கொண்டு, பேசாமல் இருந்து விட்டான்.

காலப்போக்கில் அரவிந்தன் வளர.. வளர.. இந்திராதேவியின் குணத்தில் மாறுதல்கள் ஏற்படத் தொடங்கின. தாய் உயிரோடு இருக்கும்போது, மகள் என்ற உரித்து முறையில், தாயின் பெயரில் இருக்கும் காணியின் பங்கைத் தனது பெயருக்கு மாற்றிவிடும்படி சின்னாச்சியை நச்சரிக்கத் தொடங்கினாள். இந்த நச்சரிப்பை தாய் மூலம் அறிந்து கொண்டான் கனகன்.

மீண்டும் தொடங்கியது வீட்டுக்குள் காணிப்பிரச்சினை. அயலவர்கள் ஒழுங்கையில் வந்து வேடிக்கை பார்க்கத் தொடங்கினார்கள். ஒருநாள் அக்காளுக்கும் தம்பிக்கும் இடையில் பிரச்சினை உச்சம் பெறவே, கனகன் அவளை மறுகாணிக்குள் போய் இருக்கும்படி துரத்தி விட்டான்.

இந்திராதேவியின் மகன் அரவிந்தனுக்கு மீசை அரும்ப ஆரம்பித்தது. தாயைப்போலவே அவனிடத்திலும், அடுத்தவர் பொருள்களைக் காரண காரியமின்றிக் கபளீகரம் செய்யும் குணம் மேலோங்கியிருந்தது. ம்இப்போது மகன் வளர்ந்து விட்டான்.. இனி அவன் பார்த்துக் கொள்ளுவான்..ழ் எனும் தற்துணிவு இந்திராதேவியிடம் எழுந்து கொண்டது. மகனும் தன் தாய்க்குப் பதிலாக எந்தவொரு விடயத்திலும் முன்நின்று கதைக்கத் தலைப்பட்டான்.

ஒருநாள் அவள், தன் மகனை முன்நிலைப்படுத்தி,

இரண்டு காணிக்கும் இடைப்பட்ட எல்லை வேலியின் அரைப்பகுதியைத் தரும்படி, தாய் சின்னாச்சியுடன் வாக்குவாதப்படத் தொடங்கினாள்.

ஊர்சனங்களின் வாய்க்கு ம்அவல்ம் கிடைத்தது போலாயிற்று. கனகனால் வெளியில் தலைகாட்ட முடியவில்லை. அவனுக்கு நெருங்கியவர்கள் விபரம் கேட்கத் தலைப்பட்டார்கள். அவனுக்கு சகோதரிமீது அளவுகடந்த வெறுப்பு ஏற்பட்டது. அவளிடமிருந்து விலகிக் கொண்டான்.

ஒருநாள் கனகன் ஊரில் இல்லாத நேரமாகப் பார்த்து, எல்லைவேலியின் அரைப்பகுதியை தாயும் மகனும் ஒன்றாக இணைந்து, தம்பக்க வேலியாக மாற்றிக் கொண்டார்கள்.

கனகனுக்கு அதிர்ச்சி. அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவளிடம் விளக்கம் கேட்கப்போனவனுக்கு, மாமன் என்றும் பாராமல், அரவிந்தன் மண்வெட்டிப் பிடியால் அடிக்கவர, இந்திரா அதைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

" நான் என்ன மோனை செய்யிறது..? அவள் அடங்காளாம்.." தாய் சின்னாச்சி தனது கையலாகாத்தனத்தை வெளிப்படுத்தினாள்.

போர்க்காலச் சூழல் ஏற்பட்டு.. அச்சூழல் முள்ளிவாய்க்காலுடன், முடிவுக்கு வந்தபோது,இந்திராதேவி எறிகணைத் தாக்குதலில் இறந்து போயிருந்தாள். அவளது மகன் அரவிந்தன் கால் ஒன்றை இழந்தவனாய், ஊன்றுகோல்களின் உதவியுடன் நடமாடிக் கொண்டிருந்தான்.

போரின் அவலத்துள் புதுப்புது அனுபவங்களைப் பெற்ற பல மனிதர்களுள் ஒருவனாக அரவிந்தன் இருந்தபோதும், அவன் தன் தாயின் குணத்தைவிட்டு மீளமுடியாதவனாகவே இருந்தான். கோல் இல்லாதவன்.. பாவம்!யு எனும் ஓர் அனுதாபப் பார்வையோடு, அவன் தாயைப் போலவே அடாவடித்தனமான காரியங்களில் ஈடுபட ஆரம்பித்தான்.

எல்லைவேலி குறித்து மாமனுக்கும் மருமகனுக்கும் சண்டை ஏற்படலாயிற்று. ஒழுங்கையில் சனங்கள் விடுப்புப் பார்க்க ஆரம்பித்தார்கள். கனகனுக்கு உடம்பும் மனசும் கூசத் தொடங்கின. மாமன் - மருமகன் எனும் உறவுப் பந்தத்தைத் தூக்கி எறிந்துவிட்டு, அவன் தனது வேலையில் கவனம் கொள்ளத் தொடங்கினான்.

இப்படியாக இரண்டு வருடங்கள் கழிந்த நிலையில்.. இன்று அவனது வீட்டிற்கு பொலிஸ் வந்து அவனை அழைத்துச் சென்றிருக்கிறது. அதற்கான காரணத்தை கனகனால் தெரிந்து கொள்ள முடியவில்லை. மலிந்தால் சந்தைக்கு வரும். அப்ப பார்ப்போம்.கேட்போம்.. என இருந்து விட்டான்.

முத்துத்தம்பி மாமரத்துக் கதிரையை விட்டெழுந்து கொண்டார். மீண்டும் ஒழுக்கைப் படலையடிக்குச் சென்றார். படலையைத் திறந்துகொண்டு, வெளியே நின்றபோது, எதிரே கனகன் வருவது தெரிந்தது. அவன் அருகில் வந்ததும், பொலிஸ் வந்து சென்ற விடயத்தை அவனிடம் கூறினார்.

"என்னை அழ வைச்சவை.. என்ர பொருளுகளை அம்பாளிக்க நினைச்சவை.. எவரும் நிம்மதியாய் இருந்ததுமில்லை. நிம்மதியாய் செத்ததுமில்லை."

ஓர் அறத்தின் குரலாய் ஒலிக்கிறது கனகனது குரல்!



# நறுமண மோகினி

● ரத்ன ராஜு

பணி ஓய்வு பெற்றபின் மேற்கு மாம்பலத்தில் அபார்ட் மென்டில் இருக்கவே பிடிக்கவில்லை. அதனால் அதை வாடகைக்கு கொடுத்து விட்டு அப்பா வாழ்ந்த கிராமத்து பூர்வீக வீட்டை நோக்கி நானும் என் மனைவியும் சென்று கொண்டிருக்கிறோம். சாமான்கள் எல்லாம் ஏற்றிய கேன்டர் வண்டி எங்கள் காரை தொடர்கிறது.

வீட்டையடைந்ததும் காம்பவுண்ட் கேட் அருகே இருந்த பெரியவர் கதவை திறந்தார்.

என் மனைவி வீட்டின் கவைத்திறந்து உள்ளே பிரவேசித்தாள். நல்ல வேளையாக இரண்டு நாள் முன் வந்து ஆள் வைத்து சுத்தம் செய்து, மின் இணைப்பு, மோட்டார் சரி பார்த்து சென்றது நல்லதாகப் போய் விட்டது.

“பேய் பங்களாவில் தங்க முடிவே செய்ஞ் சிட்டீங்க”

“ஆமாம், சாமான்களை இறக்க ஆள் யாரையாவது கூப்பிடும்“

“இந்த அத்துவான எடத்துல ஆளு யாரு கெடப்பா. நாம்பளே எறக்கிடலாம்“

“உமக்கு என்ன வெளையாட்டா தோனுதா, நடக்கிற காரியமா இது”

“பேசிக்கிட்டு இருக்காம வாங்க ஐயா எறக்குவோம்“

வேன் டிரைவரும் அவரும் அதற்குள் வேலையில் இறங்கி விட்டார்கள். வாஷிங் மெஷின், ஃப்ரிட்ஜ், பெரிய கட்டில் எல்லாம் எப்படி இறக்குவது. நான் யோசித்து முடிப்பதற்குள் என்னையும் கூப்பிட்டு விட்டார்கள்.

பெரியவர் பார்வைக்குத்தான் கிழவன், ஆனால் ஆள் பெரிய பலசாலி.முதலில் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்க மோட்டார் ஆன் செய்தேன். இரவு டிபனுக்கு உப்புமா செய்து கொள்ளலாம்.

“ஐயா பெரியவரே, உப்புமா சாப்பிடுவீரா”

இரவு போர்டிகோவிலேயே படுத்துக் கொண்டார்.

ஆதனூர் என்ற அந்த கிராமம் கூடுவாஞ்சேரியிலிருந்து மேற்கில் ஐந்து கிலோமீட்டர் தூரம். பெரிய கடைகளோ, மருத்துவ மனையோ கிடையாது. எதற்கும் கூடுவாஞ்சேரியோ ஊரப்பாக்கமோ வரவேண்டும். இப்போது ஊரப்பாக்கத்திலிருந்து பெரிய தார்ச்சாலை போட்டுவிட்டார்கள்.

தோட்டத்தை சுற்றிப் பார்த்தேன். முன்புற கேட்டிலிருந்து போர்டிகோ அறுபதடி தூரம் இருக்கும். வீட்டின் கீழ்த்திசையிலும் மேல்திசையிலும் காம்பவுண்டுக்கு இடையில் உள்ள தூரம் ஐம்பது அடி இருக்கும். கீழ்த் திசை காம்பவுண்டு ஒரு பத்தடி தூரத்துக்கு இடிந்து விழுந்து கிடக்கிறது. மேல்திசையில் பெரிய மாமரம் காம்பவுண்டையும் தாண்டி வெளியில் கிளைகளை பரப்பிக் கொண்டு நிற்கிறது. அதற்கும் அப்பால் ஒரு குளம் உண்டு. பங்களாவின் பின்புறம் காம்பவுண்டுக்கு இடையே உள்ள தூரம் எண்பதடி தூரம் இருக்கும். கொய்யா, சப்போட்டா,மாதுளை, சீதாப்பழச் செடி என பழ வகைகள். மொத்த தோட்டமும் பராமரிப்பில்லாமல் புதர் மண்டிக் கிடக்கிறது.அந்தப் பெரியவர் மறுநாள் காலையில் கிளம்பிப் போனவர் மாலையில்தான் திரும்பினார், இரவு படுக்கைக்காக.

“உங்க பெரியப்பா மகள் உங்களை ரொம்ப விசாரிச்சாங்க” என்றார்.

“அப்படியா” என்றேன்.

என் அப்பா காலத்திலேயே பெரியப்பாவுடன் சொத்து பிரிவினை செய்து கொண்டு விட்டார். என் அப்பா இந்த வீடும் ஐந்து ஏக்கர் நன்செய் நிலமும் போதும் என்று, ஊரப்பாக்கத்திலுள்ள வீட்டு மனையும், இருபத்தைந்து ஏக்கர் நிலத்தையும் தன் அண்ணனுக்கே தந்து விட்டார். பெரியப்பாவுக்கு ஓரேவொரு பெண், அவள்தான் ஊரப்பாக்கத்தில் வீடு கட்டிக்கொண்டு குடும்பத்துடன் வாழ்கிறாள்.

கடந்த வாரம் மேற்கு மாம்பலம் வந்திருந்தாள். அவர்களின் வீடு கடனில் மூழ்கி விட்டதால் என்னுடைய ஆதனூர் வீட்டைக் கேட்டு வந்திருந்தாள்.

“பணி ஓய்வு பெற்று விட்டதால நானே அங்க குடிவரப் போறேன். மேலும் மாடியை சரி செய்து ஐ டி யில் வேலை பார்ப்பவர்களுக்கு வாடகைக்கு விடும் திட்டமும் வச்சிருக்கேன். கீழே எங்களுக்கான இடம் போக மீதி இடத்துல ஒரு ப்ளே ஸ்கூல் தொடங்கப் போறேன். அஞ்சு ஏக்கர் நிலத்திலயும் விவசாயம் பண்ணப் போறேன். வேணுமின்னா உன் புருஷனை எங்கூட சேர்ந்து விவசாயம் பார்க்கச் சொல்லு”

“அண்ணா அவரு விவசாயமெல்லாம் பார்க்க மாட்டேன்னுதான எல்லத்தையும்

வியாபாரத்தில தொலைச்சார்; வீடும் முழுகிப் போச்சு. இப்போ வாடகை வீட்ல இருக்கோம்." என்று புலம்பி விட்டுப் போனாள்.

இரவு ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கும் போது மாடியில் யாரோ புழங்குவது போல சந்தடி கேட்டது. யாராயிருக்கும், பெருச்சாளி பூனை ஏதாவதிருக்கும். ஒரே சுவர்க் கோழியும், சில்வண்டும் ரீங்கரிக்கும் ஓசைதான் கேட்டுக் கெண்டிருந்தது. அந்த இடைவிடாத சத்தமே அச்சத்தை ஏற்படுத்தியது.

யாரோ வீட்டைச் சுற்றிவருவது போல் அரவம் கேட்டது. உற்றுக் கேட்டதில் ம்ஜல்..ஜல்ம் என்று ஒரே ரிதத்தில் கொலுசின் ஓசை. சப்தமெழுப்பாமல் தெருப்பக்க ஜன்னல் திரையை லேசாக விலக்கி சிறு இடைவெளி வழியே பார்த்தேன். பெரியவரைக் காணவில்லை.

என் தோளைத் தொட்டது போல உணர்ந்து சரேலெனத் திரும்பினேன். என் மனைவி பயந்து போய் நின்றிருந்தாள். ஜாடையிலேயே பின்பக்கம் வந்து பார்க்கக் கூப்பிட்டாள்.

அதே ரிதத்துடன் கொலுசு சத்தம் மீண்டும் வீட்டின் பின்புறம் கேட்டது.

மேலும் காதைத் தீட்டிக் கொண்டு கேட்டதில் ம்ஜல்..ஜல்ம் வீட்டை நெருங்கி வந்து பின் கதவு அருகில் கேட்டது. மெதுவாக பக்கவாட்டில் நகர்ந்து சென்று தெருப்பக்கம் கரைந்து போனது. காம்பவுண்டைத் தாண்டி உள்ள சாலையில் நாய்கள் குறைத்துக் கொண்டிருந்தன.

காலையில் எழுந்ததும் பெரியவர், நோன் கூடுவாஞ்சேரி போகிறேன். சாயங்காலம் திரும்பி வர்ரப்போ ஏதாவது வாங்கி வரனுமா உங்களுக்குயு என்று சம்பிரதாயமாகக் கேட்டார்.

"ராத்திரி எங்க போயிட்டீங்க" என்ற என் கேள்வியை எதிர் பார்க்காதவர் திகைத்து, "வயிறு கலக்கி குளத்தங்கரைக்கு..." என்று இழுத்தார்.

இரவு படுக்கைக்கு பெரியவர் வந்ததும் எதற்கும் இருக்கட்டும் என்று காம்பவுண்ட் கேட்டை பூட்டி வைத்தேன்.

நேற்று போலவே இன்றும் அந்த கொலுசு சத்தம். வீட்டின் முன்புறத்தை தவிர்த்து மற்ற மூன்று பக்கமும் கேட்டது. சத்தம் கொஞ்சமும் பிசிரில்லால் ஒரே ரிதமில் கேட்டது. மாடியிலும் முதல் நாள் போலவே அரவம் கேட்டது. மரங்களில் இருந்த பறவைகள் எல்லாம் ஏதோ உணர்ந்தவை போல அமைதியிழந்து சிறகடித்த வண்ணமிருந்தன. கொக்குகளெல்லாம் ம்குர்ரே..குர்ரே ம் என்று கூவி அலைந்தன. ஆந்தையும் கோட்டானும் அபஸ்வரத்தில் அலப்பறை செய்து கொண்டிருந்தன.

அதே நேரத்தில் போர்டிகோவில் பெரியவர் தூக்கத்தில் பிணாத்தும் சத்தம். பிணாத்துகிறாரா அலறுகிறாரா என சந்தேகமாயிருந்தது. சாரதா முகமெல்லாம் வியர்த்திருந்தாள். வீட்டின் வெளிப்புற விளக்குகளை எரியவிட்டேன். அந்த கெலுசுக்குரிய உருவத்தை பார்ப்பதற்காக ஹாலின் பக்கவாட்டு ஜன்னலைத் திறந்தேன்; படாரென்று ஏதோ ஒன்று ஜன்னலையும் தாண்டி முகத்திலடிப்பது போல வந்து மோதியது; நான் ஒரடி பின்னல் நகர்ந்து கொண்டேன்.

'வீல்' என்ற அலறலோடு சாரதா என்னை கட்டிக் கொண்டாள். நான் ஒன்றும் புரியாமல் திகைத்து நின்றேன். மயக்கமே வரும் போல் இருந்தது. ஜன்னல் வழியே சாரதாவை பயமுறுத்திய எலி தாவி வெளியே ஓடியது. அப்போது என்மீது மோதியது என்னவாக இருக்கும்? வௌவாலா இல்லை ஏதாவது ஆவியா?

மங்கலான ஒளியில் நிலா காய்ந்து கொணாடிருந்தது. காம்பவுண்டின் உடைந்து விழுந்திருந்த

இடைவெளியில் கருப்பு நிற புடவை, அவிழ்த்து விட்ட முடி என்று ஒரு பொன்னிற இளம்பெண் இரு கைகளையும் பக்கவாட்டில் விரித்தவண்ணம் காற்றைப்போல் கடந்து போனாள். அவள் காலைப் பார்த்ததும் அதிர்ச்சியானேன். இது எப்படி சாத்தியம் என்று குழம்பினேன்.

கிழக்கு காம்பவுண்டுக்கு வெளியே நாய் குறைத்துக் கொண்டிருந்து. தாக்க வருபவரை பார்த்து குரைத்துக் கொண்டே விலகி ஓடுவதுபோல் சத்தம் விலகி விலகி சென்று கொண்டே இருந்தது. தோட்டத்து மரங்களில் பறவைகளின் சடசடப்பும், சத்தமும் நீடித்தது.

“ஏங்க, எல்லாரும் சொன்னது சரிதான் போல. இந்த பங்களா வேண்டாம்“

என சாரதா ஆரம்பித்து விட்டாள்.

“நாளைக்கு அருண் வந்திடுவான், அவன் வந்ததும் முடிவு செய்யலாம்“ என்று சமாதானப்படுத்தினேன்

எனக்குள் என்னென்னவோ சிந்தனைகள் மாறிமாறி வந்து கொண்டே இருந்தன. ஒரு முடிவும் கிடைக்க வில்லை. தொட்டுப் பார்த்தேன் நெற்றி கழுத்திலெல்லாம் வியர்வை. மறநாள் காலை எட்டு மணியளவில் அருண் வந்து விட்டான். டிபன் சாப்பிட்டுவிட்டு தூங்கப்போய் விட்டான்.நானும் பெரியவரும் வளர்ந்து கிடந்த வேலிக்காத்தான் முள் புதரையெல்லாம் வெட்டி உடைந்திருந்த காம்பவுண்ட் சுவர் இடைளெ□யில் போட்டோம். நந்தியாவட்டை, முள்கனகாம்பரம் போன்றவற்றை ஒழுங்கு படுத்திவிட்டு, கோரைப் புற்களை யெல்லாம் அடியோடு வெட்டி அப்புறப் படுத்தினோம். அசோக மரங்களை சுற்றியும் சுத்தப்படுத்தினோம்.

பின்பக்கம் மேல்திசை மூலையில் இருந்த பெரிய கிணற்றைச் சுற்றிலும் இருந்த புதரை அப்புறப் படுத்தினோம். சாரதா தன் பயத்தை மகன் அருணிடம் கொட்டித் தீர்த்தாள். அருணும் குழம்பி என்ன செய்யலாம் என்று யோசிக்கலானான்

“அப்பா, பேசாம இந்த பங்களாவ வித்துட்டு கூடுவாஞ்சேரியிலோ, ஊரப்பாக்கத்திலா நல்ல வீடோ ஃப்ளாட்டோ வாங்கிட்டா என்ன”

“உன் தாத்தா எல்லாத்தயும் தன் அண்ணனுக்கு கொடுத்திட்டு தனக்கின்னு ஆசையோட வச்சிக் கிட்டது இந்த வீடுதான்”

“ஓகோ சென்டிமென்ட் இடிக்குதா. சரி நல்லா யோசிப்போம்“

இரவு வழக்கம் போல டிபன் சாப்பிட்டு விட்டு பேசிக் கொண்டிருந்தோம். மறுநாள் டிவி நிறுவி டிஷ் கனெக்ஷன் தந்து விடவேண்டும். பத்து மணிக்கெல்லாம் படுத்துவிட்டோம். வீட்டின் மேற்கு காம்பவுண்ட் ஒட்டி மாத்தூர் செல்லும் சாலை. அதில் மக்கள் நடமாட்டம்போல் ஆளரவம் கேட்டது. பறவைகள் ம்சட சடழ் வென இறக்கைகளை அடித்துக் கொண்டன.

நல்ல தூக்கம் கண்ணை இழுக்கும் நேரம் இன்றைக்கும் அதே ரிதத்துடன் கொலுசு ஒலி. சாரதா எழுந்து அருணை சத்தமிடாமல் எழுப்பினாள். அரண் எழுந்து கூர்ந்து கவனித்தான். கொலுசு ஒலி அவனுக்கும் தெளிவாக கேட்டது.

“அப்பா, நான் தெருக்கதவை திறந்து போர்டிகோவில் இறங்கியதும் நீங்கள் மாத்தூர் சாலை பக்கம் வெளிச்சம் வரும்படி அந்தப் பக்க லைட்டை போடுங்கள்”

என்று கதவைத் திறந்து போர்டிகோவில் இறங்கினான். நான் அந்த பக்கத்து லைட்டைப் போட்டேன்.பறவைகள் முன்னிலும் அதிகப் பரபரப்புடன் சத்தமிட்டு பறக்க ஆரம்பித்தன. ஒரே ஆரவாரமும் குழப்பமுமாக இருந்தது.

என்ன ஆச்சரியம்! கருப்பு நிறப் புடவை, அவிழ்த்து விட்ட முடி, பொன்னிற தேகம், மோகினி. அருண் அதைப்பிடிக்க பாய்ந்தோடினான். அதற்குள் அந்த மோகினி இரண்டு கைகளையும் விரித்தபடி அப்படியே அந்தரத்தில் எழும்பி பறந்து காம்பவுண்டின் வெளிப்புறம் இறங்கியது. அருண் காம்பவுண்டை ஏறிக்குதித்து அந்த உருவத்தின் இடுப்பை இறுகப் பற்றினான். மயக்கும் பெர்ஃப்யூம் மூக்கைத் துளைத்தது. யாரோ இரும்புக் குழாயால் ஓங்கி அருணை அடிக்க,

“ஆ... அம்மா..”

என்ற அலறலோடு பிடியை நழுவவிட்டான். உருவம் விடுபட்டு இருளில் மறைந்தது. நானும் பெரியவரும் முன்புறக் கதவைத் திறந்து கொண்டு ஓடி வந்தோம். அருண் வலது காலைப் பிடித்துக் கொண்டு வலி தாங்க முடியாமல் கத்திக் கொண்டு இருந்தான்.

அவனை மெல்ல கைத்தாங்கலாக பிடித்து தூக்கிய வண்ணம் வீட்டுக்கு கொண்டு வந்தோம்.

இதென்ன அருண் கையில் ஒரு மொபைல் போன். மாத்தூர் மண் சாலையில் நாய்கள் கூட்டமாக குறைப்பது கேட்டபடியே இருந்தது.

காரில் இரவோடு இரவாக கூடுவாஞ்சேரி இருபத்திநாண்கு மணி நேர ஆஸ்பத்திரியில் அருணை சேர்த்தோம். நடந்த சம்பவங்கள் எல்லாம் அச்சத்தை தருவதாகவே உள்ளன.

அருணுக்கு மாவுக்கட்டு போட்டிருக்கிறார்கள். மறுநாள் மதியத்துக்கு மேல் வீட்டுக்கு அழைத்துப் போகவுள்ளோம். பெரியவர் வந்தார்,

“ஐயா, அருண் தம்பி அடிபட்ட மரத்தடியில பார்த்தேன். மரத்து மேலே கிணற்று ராட்டினம் கட்டி, கயிற்றில் ஒரு முனையில் மூன்றடி நீளமுள்ள இரண்டு இஞ்ச் பைப்பு கட்டியிருக்கு. மறுமுனை காம்பவுண்ட் வெளியே தொங்கிக்கிட்டு இருக்கு. அந்த உருவம் ரெண்டு கையாலயும் அந்த இரும்பு பைப்ப புடிச்சிக்கவும் வெளிய இருந்து கயித்த இழுத்து அலாக்கா வெளியேத்தி யிருக்காங்க.” என்றார்.

காலை பத்து மணியளவில் ஊரப்பாக்கத்திலிருந்து என் பெரியப்பா மகள், அவள் கணவன், மகள், அவள் தோழி என எல்லாரும் பார்க்க வந்தார்கள்.

வந்தவர்கள் கிளம்பிப் போய் நெடுநேர மானாலும் அருண் மட்டும் தீவிர சிந்தனையிலேயே இருந்தான். ஆமாம், அந்த உருவத்தை கட்டிப் பிடித்தபோது முகர்ந்த அதே நறுமணம் இப்போது அவன் அத்தை மகளுடன் வந்த பெண் மீதும் வீசியதை கூறினான்.

அருண் அந்த மொபைல் போனில் கொலுசு ஒலியை போட்டுக்காட்டினான். அந்த கருப்பு உருவம் உடைந்த காம்பவுண்டை கடந்து போகையில் காலில் கொலுசு இல்லாததும் என் கண் முன் வந்தது.

அருண் சொன்னான்,

“அப்பா, திரைக்கதையும் வலுவாக இல்லை. அவர்களும் அமெச்சூர் நடிகர்கள், சரியாக பயமுறுத்தத் தெரிய வில்லை”

# சிறுகதை தொடர்பாகச் சில அறிஞர்களது கூற்றுக்கள்

● தொகுப்பு : தே.கோகிலவாணி

- "சிறுகதை, குதிரைப்பந்தயம் போல ஆரம்பமும் முடிவும் சுவை மிக்கதாக இருக்க வேண்டும்"

  - எல்லரி செட் ஜெவிக்

- சுருக்கமும் தெளிவும் சிறுகதையின் பண்புகள்"

  - ஜேம்ஸ் கூப்பர் லாரனஸ்

- "சிறுகதை எளிய கருப்பொருளைக் கொண்டிருத்தலே சிறப்பானது"
- "சிறுகதை சொற்களின் விளையாட்டு"

  - சிறுகதை உலகின் தந்தை செகாவ்

- "மனித உணர்வுகளில் ஏதாவதொன்றை தொட்டு உலுக்குவதே சிறுகதை"

  - விந்தன்

- "சிறுகதை என்பது ஒரு நிகழ்ச்சியாக இருக்கலாம் ஒரு உள்ளப் போராட்டமாக இருக்கலாம். அது ஏதாவது ஒன்றாக இருக்கும் வகையில் சிறுகதை பிறக்கும். இரண்டாகவோ அதற்கு மேற்பட்டோ இருந்தால் சிறுகதை பிறக்காது."

  - க.நா.சுப்பிரமணியம்

- "மொத்தத்தில் சிறுகதை என்பது அற்புத கணத்தை நிரந்தரமாக்கும் ரசவாதம்".

  - சுஜாதா

- "ஆடாமல அசையாமல் அங்கிங்கு மேயாமல் குறி சென்று தைக்கும் அம்பின் ஒழுக்கம் வேண்டும், சிறுகதை என்ற பெரும் பொருளுக்கு"

  - கவிஞர் வைரமுத்து